# சாதக நூல்

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>செ | சுக் | புதன் |
| சந்<br>ராகு | இராசி | | சனி |
| | | | கே |
| | குரு | | ல |

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 518

# சாதக நூல்

## (மூலமும் உரையும்)

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

திருமதி **சத்தியபாமா காமேஸ்வரன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
எம். எட்., பிஎச்.டி., சோதிடவியல் பட்டயம்,
சுவடியியல் பட்டயம்.,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

2008

விலை ரூ. 60 - 00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : சாதக நூல் |
| பதிப்பாசிரியர் | : திருமதி சத்தியபாமா காமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண். | : 518 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : செப்டம்பர், 2008 |
| தாள் | : 18. 6 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 136 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சைத் தரணியில் ஓலைச்சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் ஏராளமாகத் தன்னகத்தே கொண்டு திகழ்வது சரசுவதி மகால் நூலகம். அவற்றைப் பாதுகாப்பது மட்டுமின்றி அரிய சுவடிகளைத் தேர்ந்தெடுத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் நூலாக்கம் செய்யும் பணியையும் இந்நூலகம் மேற்கொண்டு வருகிறது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடிகளில் அதிக எண்ணிக்கையில் சோதிடச்சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது சாதக நூல். இந்நூலின் மூன்று படிகள் மூன்று சுவடிகளாக (சுவடி எண்கள். 807c. 1102, 1103) இந்நூலகத்தில் கிடைக்கின்றன. இவற்றுள் முழுமையாக அமைந்துள்ள 807 என்ற சுவடி பதிப்பிற்கு ஏற்றதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது 1102, 1103 ஆகிய சுவடி எண்களைக் கொண்ட சுவடிகள் முழுமையற்றவை. இவை ஒப்பீட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டன.

சாதக நூல் என்ற பெயர் இந்நூலின் பாயிரப்பாடலில் காப்புச் செய்யுளில் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது. இருப்பினும் இந்நூலகத்தின் தமிழ்ச்சுவடிகளின் விளக்க நூலில் இந்நூல் சாதக சிந்தாமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இந்நூலின் பாயிரப் பகுதியிலமைந்த மற்றொரு பாடலில், சாதகமாம் சிந்தாமணி தமிழ்ச் சாற்றலுற்றேன் என்று குறிப்பிடப் பட்டிருப்பதாகும். தமிழில் தொண்டைநாட்டு நந்திமாநகரைச் சேர்ந்த தில்லைநாயகப் புலவர் சாதக சிந்தாமணி என்ற சோதிட நூலை எழுதியுள்ளார். எனவே இந்நூல் சாதக நூல் என்ற பெயரில் தற்போது பதிப்பிக்கப் பட்டுள்ளது.

காப்புச் செய்யுட்கள் நீங்கலாக இந்நூலில் 186 கலித்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலில் 5 காப்புச் செய்யுட்கள் அமைந்துள்ளன.

பன்னிரு பாவங்களின் பலன்களையும் எளிமையாக எடுத்துரைக்கின்ற இந்தச் சாதக நூல் சோதிடத்தைக் கற்க விரும்புவோருக்குப் பயன் உள்ளது. மேலும் சோதிடர்களும் சோதிட ஆர்வலர்களும் இந்நூலைப் படித்து அதன்மூலம் நற்பயனை அடையலாம்.

இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்த சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினி பிரிவில் பணியாற்றியவர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம். எஸ். சண்முகம்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சாவூர்,
21-9-2008.

## பதிப்புரை

மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருப்பது கலையாகும். நம்முன்னோர் இயற்கையிலிருந்தும் தாம் வாழ்ந்த சூழலில் இருந்தும் தாம்பெற்ற அனுபவங்களைத் தம் சந்ததியினரும் பலன்பெறும் வகையில் தமக்குக் கைவந்த பலவழிகளில் பதிவு செய்து வைத்துப் பல்வேறு கலைகளை உலகறியச் செய்தனர். இக்கலைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு என வரையறையும் செய்தனர். இவற்றுள் மதிநுட்பம் பொருந்தியதாகவும் மக்களின் மனம் கவர்ந்ததாகவும் தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகவும் தன்னிகரற்றதாகவும் விளங்குவது சோதிடக்கலை.

ஒருவர் பிறந்த காலத்தை அறிந்து நுணுக்கமாகக் கணக்கிட்டு, அவருடைய வாழ்வில் நடந்த நடைபெற்றுக் கொண்டிருக்கிற, இனி நடக்க இருப்பவற்றை உரைக்கும் ஒரு அற்புதக் கலையான இச் சோதிடக்கலை, காலத்தை அடிப்படையாகக்கொண்டது. ஐந்திறம் இயற்றிய மயன், காலத்தில் ஆற்றலை அறிந்து,

காலமே எவைக்கும் மூலம் காலமே மூல ஆற்றல்
காலமே கோலத் தோற்றம் காலமே ஞாலத் தோற்றம்
காலமே விந்தை செய்யும் காலமே நுணுக்க மாயும்
காலமே அணுக்கம் ஆயும் காலத்தின் ஆற்றல் என்னே

என்று வியந்துரைக்கிறார்.

ஒருவரின் பிறந்த காலத்தின் கோள்களின் நிலையைக் கூறும் குறிப்பு சாதகமாகும். அவரவர் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளின் தன்மைகளைப் பார்த்துணர்ந்து அதற்கேற்ப தம் வாழ்வில் ஒவ்வொருவரும் நன்மைகளையும் தீமைகளையும் அடைவதை அறிய உதவுவது இச்சாதகமாகும்.

சீராரும் சன்மசுகம் செய்வது வுங்குலத்தின்
ஏராரும் செல்வவளம் ஏற்றுவதுந்-தேரா
முனஞ்செய்த நல்வினையின் முன்னு வழியுமாஞ்
சனனபத்தி ரம்எழுது தல்

என்று இதனை ஐயாசுவாமீயம் எடுத்துரைக்கிறது.

இந்திய சோதிட முறையின்படி மேஷம் முதல் மீனம் வரை உள்ள பன்னிரு இராசிகளும் நகராதவை. இதனால் மேஷம் முதலான பன்னிரு இராசிகளில் நவக்கிரகங்கள் நின்ற பலன்களையும் சனன இலக்கனப்படி பன்னிரு வீடுகளில் நவக்கிரகங்கள் நின்ற பலன்களையும், பன்னிரு பாவங்களில் நின்ற நவக்கிரகங்களின் சேர்க்கைப் பலன்களையும் கணக்கிட வேண்டும். இவற்றுடன் பாவகாரகத்துவம், அறுவகை பலன்கள் ஆகியவற்றையும் கணித்துப் பலன் கூற வேண்டும்.

இராசிச் சக்கரத்தில் அமைந்துள்ள பன்னிரு பாவங்களின் பலன்களைக் கூறும் பல்வேறு சோதிடநூல்கள் உள்ளன. ஒவ்வொரு பாவத்தின் பலன்களையும் ஆயிரம் பாடல்களில் அமைத்துக்கூறும் சோதிடம் பன்னீராயிரம் என்ற சங்கராச்சாரியம். இந்நூல் பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட குறிப்பிடத்தக்க நூலாகும். இவையன்றி, பன்னிரு பாவங்களின் பலன்களைக் கூறும் துய்யகேரளம், மணிகண்ட கேரளம் முதலான நூல்கள் உள்ளன. பன்னிரு பாவங்களின் பலன்களைத் தம் நூலுள் ஒரு பகுதியாகக் கொண்ட சர்வார்த்த சிந்தாமணி, சாதக சிந்தாமணி, சாதக பாரிசாதம், குமாரசுவாமியம் முதலான பலநூல்களும் உள்ளன. அவ்வகையில் பன்னிரு பாவங்களின் பலன்களைக் கூறக்கூடியதாக விளங்குவது சாதகநூல் என்ற நூலாகும்.

தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடிகளில் அதிக எண்ணிக்கையில் சோதிடச்சுவடிகள்

காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது சாதகநூல். இந்நூலின் மூன்று படிகள் மூன்று சுவடிகளாக (சுவடி எண்கள்: 807c, 1102, 1103) இந்நூலகத்தில் கிடைக்கின்றன. இவற்றுள் முழுமையாக அமைந்துள்ள 807 என்ற சுவடி பதிப்பிற்கு ஏற்றதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 1102, 1103 ஆகிய சுவடி எண்களைக் கொண்ட சுவடிகள் முழுமையற்றவை. இவை ஒப்பீட்டிற்கும் பயன் படுத்தப்பட்டன.

சாதகநூல் என்ற பெயர் இந்நூலின் பாயிரப்பாடலில் காப்புச் செய்யுளில் தெளிவாகச் சுட்டப்பட்டுள்லது. இருப்பினும், இந்நூலகத்தின் தமிழ்ச் சுவடிகளின் விளக்க நூலில், இந்நூல், சாதக சிந்தாமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், இந்நூலின் பாயிரப் பகுதியிலமைந்த மற்றொரு பாடலில், சாதகமாம் சிந்தாமணி தமிழ்ச் சாற்றலுற்றேன் என்று குறிப்பிடப் பட்டிருப்பதாகும். தமிழில் தொண்டை நாட்டு நந்திமா நகரைச் சேர்ந்த தில்லைநாயகப் புலவர் சாதக சிந்தாமணி என்ற சோதிட நூலை எழுதியுள்ளார். ஆகவே, இந்நூல் சாதகநூல் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

### சாதக நூல் - அமைப்பு

சாதக நூல் ஒவ்வொரு பாவத்திற்கும் ஒவ்வொரு பகுதியாகப் பன்னிரு பாவங்களும் பன்னிரு பகுதிகளாக அமைந்துள்ள நூலாகும். காப்புச் செய்யுட்கள் நீங்கலாக, இந்நூலில் 186 கலித்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலில் 5 காப்புச் செய்யுட்கள் அமைந்துள்ளன.

சாதக நூலில் அமைந்துள்ள பன்னிரு பாவங்களில் முதல் பாவத்தில் 7 பாடல்களும், இரண்டாம் பாவத்தில் 12 பாடல்களும் மூன்றாம் பாவத்தில் 8 பாடல்களும் நான்காம்

பாவத்தில் 15 பாடல்களும் ஐந்தாம் பாவத்தில் 22 பாடல்களும், ஆறாம் பாவத்தில் 14 பாடல்களும், ஏழாம் பாவத்தில் 37 பாடல்களும், எட்டாம் பாவத்தில் 5 பாடல்களும், ஒன்பதாம் பாவத்தில் 30 பாடல்களும் பத்தாம் பாவத்தில் 22 பாடல்களும், பதினோராம் பாவத்தில் 7 பாடல்களும், பன்னிரண்டாம் பாவத்தில் 7 பாடல்களும் உள்ளன. இவற்றில் எட்டாம் பாவத்தில் குறைந்த பட்சமாக ஐந்து பாடல்களும் ஏழாம் பாவத்தில் அதிக பட்சமாக 37 பாடல்களும் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

## மூல ஆசிரியரும் மொழிபெயர்த்தவரும்

சாதக நூல் என்னும் இந்நூலின் மூல ஆசிரியரைப் பற்றியோ தமிழில் மொழி பெயர்த்தவரைப் பற்றியோ தெரியவில்லை. எனினும்,

திருவளர்சா தகத்தோர்வட கலையை ஆய்ந்து
தென்கலையாய்ச் செய்ததெவன் திறலாம் என்னில்
(காப்புச்செய்யுள்: 2)

என்ற அடிகள் வடநூலில் அமைந்திருந்த சோதிட நூலின் மொழி பெயர்ப்பாக இந்நூல் உள்ளதை உணர்த்தும். மொழிபெயர்பாசிரியரின் பெயர் தெரியவில்லை என்றாலும் காப்புச் செய்யுட்களின் வழி, இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனலாம். ஐந்து காப்புச் செய்யுட்களிலும் சிவன், உமை, விநாயகன், முருகன் முதலான தெய்வங்களைப் போற்றியுள்ளமை இதனை உணர்த்தும். காப்புச் செய்யுளின் இடையில் அவையடக்கமாக,

மருவாயனை முனிந்து வன்சிறையில்
வைத்துடன் மீட்டருள் வள்ளல்
குருபரன்உமை யாள்பயின்ற வேற்குளகன்
குறைகள் உணர்ந்தறி குரவோர்

இருபது பரமனுக் கடப்பட்ட
என்மனத் திருந்தரு ளியதோர்
முருகாசொல் (லதனின்) குற்ற முண்டெனினும்.
இகழ்ந்திடார் மூதறி வோரே
(காப்புச் செய்யுள்: 3)

என்றதால் ஆசிரியரின் கற்றுணர்ந்து அடங்கிய நிலையினை அறியலாம். வேறு அகச்சான்றுகள் எதுவும் ஆசிரியரைக் குறித்து கிடைக்கவில்லை.

## பன்னிரு பாவங்கள்

இராசிச் சக்கரத்தில் முப்பது பாகையுள்ள ஒரு வீடு, பாவம், ஸ்தானம், இராசி என்று குறிப்பிடப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தனி குணம் அமைந்திருக்கும். ஒவ்வொரு வீட்டின் இயற்கை குணம் இராசி என்று கூறப்படுகிறது. ஆதிபத்தியம் குறித்துக் கூறும்பொழுது, பாவம் என்றும் ஸ்தானம் என்றும் சொல்லப்படுகிறது. இராசி அதிபர்கள் இராசிநாதன் பாவாதிபதி ஸ்தானாதிபதி என்று குறிப்பிடப்படுகின்றனர்.

தனிப்பட்ட வீட்டின் குணநலன்களைக் கொண்டு அந்தவீடு, இராசி எனப்படுகிறது. அதில் ஆட்சிபெறும் கிரகம் இராசிநாதன் என்றழைக்கப்படுகிறது. சந்திரன் நின்ற வீடு சென்ம இராசி எனவும் அந்த வீட்டில் ஆட்சி பெறும் கிரகம் சென்ம இராசிநாதன் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு சாதகத்தில் இலக்கனம், முதல் பாவம் என்றும் இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகத்திற்கு இலக்கானாதிபன், இலக்கன ாதிபதி என்று பெயர். இலக்கனத்தைக் கொண்டு, உயிர், ஆத்மகுணம், கௌரவம், தோற்றம், அதிகாரம், தேகம் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம். இலக்கனத்திற்கு,

இரண்டாவது வீட்டிற்கு தனஸ்தானம். வாக்குத் ஸ்தானம், வித்தை ஸ்தானம், நேத்திர ஸ்தானம், குடும்ப ஸ்தானம் என்றும் பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகத்திற்கு தனேசன், தனாதிபதி, குடும்பேசன், குடும்பநாதன், குடும்பாதிபதி, வாக்கேசன், வாக்குநாதன், நேத்திரேசன் என பல்வேறு பெயர்கள் உள்ளன. இரண்டாம் பாவத்தைக் கொண்டு வாக்கு, குடும்பம், தனம், கண்பார்வை முதலியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

மூன்றாவது வீட்டிற்குப் பிராதுரு ஸ்தானம், தைரிய ஸ்தானம், கீர்த்தி ஸ்தானம், வீரிய ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகத்திற்குத் தைரியேசன், தைரியாதிபதி, வீரியாதிபதி எனப் பெயர்கள் உள்ளன. மூன்றாவது பாவத்தைக் கொண்டு, பின்சகோதரம், தைரியம் வீரியம், போகம், உதவி, ஆபரணம் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு நான்காம் வீட்டிற்கு சுக ஸ்தானம், மாத்ரு ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி செலுத்தும் கிரகத்திற்கு சுகாதிபதி, வாகனாதிபதி, மாதுரு ஸ்தானன் எனப் பெயர்கள் உள்ளன. நான்காவது பாவத்தைக் கொண்டு, தாய், சுகம், கல்வி, வாகனம், வீடு, உறவு, வியாபாரம் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு ஐந்தாம் வீட்டிற்கு புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சிபெறும் கிரகத்திற்குப் புத்திரேசன், புத்திராதிபதி, பூர்வ புண்ணியாதிபதி என்று பெயர். ஐந்தாவது பாவத்தைக் கொண்டு புத்திரர், தாய் குடும்பம், மனம், பக்தி, பதவி, பூர்வீக சென்மம், பூர்வீக சொத்து முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு ஆறாம் வீட்டிற்கு சத்ரு ஸ்தானம், ருன ஸ்தானம், ரோக ஸ்தானம், சல்லிய ஸ்தானம், சோர ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள ரோகாதிபதி, ருணாதிபதி, சத்ரு ஸ்தானாதிபதி, சத்துரேசன் எனப் பெயர்கள் உள்ளன. ஆறாவது பாவத்தைக் கொண்டு, கடன், நோய், எதிரி, போட்டி முதலானவற்றைப் பற்றியும் மாமனைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு ஏழாவது வீட்டிற்குக் களத்திர ஸ்தானம், காமஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்திற்குக் களத்திராதிபதி, களத்திரேசன், காமாதிபதி என்று பல்வேறு பெயர்கள் உள்ளன. ஏழாவது பாவத்தைக் கொண்டு, மனைவி, கூட்டாளி, பயணம், மரணம், வியாபாரம், காமம், காதல், முதலானவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு எட்டாம் வீட்டிற்கு அட்டமதானம், ஆயுள்தானம், மாரகத்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெறும் கிரகத்திற்கு அட்டமாதிபதி, மாரகாதிபதி என்று பெயர்கள் உள்ளன. எட்டாவது பாவத்தைக் கொண்டு, ஆயுள், விபத்து, மரணவழி, வில்லங்கம், பீடை, பங்காளி, பெண்ணுக்கு மாங்கல்யம், கணவன் உயிர் முதலானவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்கு பாக்கியஸ்தானம், பிதுர்த்தானம், தருமஸ்தானம் என்றும் பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்திற்குப் பாக்கியாதிபதி, தருமாதிபதி, தர்மேசன் என்ற பெயர்கள் உள்ளன. ஒன்பதாம் பாவத்தைக் கொண்டு தந்தை, தருமம், பொதுச்சேவை, பிரயாணம், வழிகாட்டி, அதிஷ்டம், பாக்கியம், யோகம், முதலானவற்றை அறியலாம்.

இலக்கனத்திற்குப் பத்தாம் வீட்டிற்குச் சீவன ஸ்தானம், கர்ம ஸ்தானம், தொழில் ஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்திற்குக் கருமாதிபதி, கருமேசன், ஜீவனாதிபதி, கருமநாதன் என்ற பெயர்கள் உள்ளன. பத்தாம் பாவத்தைக் கொண்டு, அரசபதவி, தொழில், செயல்திறன், தொழில்ஞானம், செயல் ஆவல், பெற்றோர் மரணம் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்குப் பதினோராம் வீட்டிற்கு இலாபஸ்தானம், மூத்த சகோதர ஸ்தானம் என்று பெயர். இங்கு ஆட்சி பெற்றுள்ள கிரகத்திற்கு இலாபாதிபதி, இலாபேசன் என்ற பெயர்கள் உள்ளன. பதினோராம் பாவத்தைக் கொண்டு, இலாபம், மூத்த சகோதரம், வெளியூர் இலாபம், பெண்களின் உதவி முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

இலக்கனத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டிற்கு விரயஸ்தானம், வியஸ்தானம் என்று பெயர். இந்த வீட்டில் ஆட்சி பெற்றுள்ள கிரகத்திற்கு விரயாதிபதி, வியாதிபதி, வியநாதன் என்ற பெயர்கள் உள்ளன. பன்னிரண்டாம் பாவத்தைக் கொண்டு, விரயம், தூக்கம், மோட்சம், நிலம், வெளியூர்த் தொழில் முதலானவற்றை அறியலாம்.

பன்னிரு பாவங்களின் பலன்களையும், எளிமையாக எடுத்துரைக்கின்ற இந்தச் சாதக நூல் சோதிடத்தைக் கற்க விரும்புவோருக்குப் பயன் உள்ளது. மேலும், சோதிடர்களும் சோதிட ஆர்வலர்களும் இந்நூலைப் படித்து அதன்மூலம் நற்பயனை அடையலாம்.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, சாதக நூல் எனும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதி

ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு சா. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணை நின்ற சரசுவதிமகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு.சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

**கா. சத்தியபாமா,**
சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்



# பொருளடக்கம்


காப்பு

1. இலக்கன பாவம்

| | | |
|---|---|---|
| அரசனாய் வாழ்பவன் | ... | 4 |
| பாக்கியவான் | ... | 5 |
| நோயாளி | ... | 5 |
| பாக்கியவான் | ... | 6 |
| அற்பாயுள் | ... | 6 |

2. இரண்டாம் பாவம்

| | | |
|---|---|---|
| செல்வமும் புகழும் உடையவன் | ... | 8 |
| பாக்கியவான் | ... | 8 |
| தரித்திரன் | ... | 9 |
| கண்குறைபாடு | ... | 10 |
| இராசதண்டனையால் பொருள் இழப்பு | | 10 |
| தர்மவான் | ... | 11 |
| வெகு குடும்ப இரட்சகன் | ... | 11 |
| ஆயிரம் பேரைக் காப்பவன் | ... | 12 |
| உபகாரி, தனாதிபதி | ... | 12 |
| கண் குறைபாடு | ... | 13 |
| கருமி, வாதரோகி | ... | 13 |

3. மூன்றாம் பாவம்

| | | |
|---|---|---|
| அதிக சகோதரர்கள் | ... | 14 |
| சகோதரர் அழிவு | ... | 14 |
| சகோதரர்கள் உடையவன் | ... | 15 |

ஆண், பெண் சகோதரர்கள் உடையவன் 15
பன்னிரு சகோதரர்கள் உடையவன் ... 16
ஏழுபேர் உடன்பிறந்தோர் ... 17
அதிக சகோதரர்கள் ... 17

## 4. நான்காம் பாவம்

அன்னைக்குத் தீர்க்காயுள் ... 18
சுகவான் ... 19
ஆலயம் அமைப்பவன் ... 19
மகா வித்துவான் ... 20
பாக்கியவான் ... 20
மூடன், ஊமை ... 21
தேசாந்திரி ... 21
இகழ்ச்சி அடைபவன் ... 22
தாயின் மரணம் ... 22
வாகனங்கள் இல்லாதவன் ... 23
இருபத்தி ஐந்து வயதில் நரவாகனம் ... 23
முப்பத்து இரண்டு வயதில் நரவாகனம்.. 24
இருபத்தி இரண்டு வயதிற்குமேல் நரவாகனம் .. 24
பன்னிரண்டாம் வயதில் நரவாகனம் 24

## 5. ஐந்தாம் பாவம்

புத்திரர் இன்மை ... 25
தத்துப் புத்திரன் ... 26
அதிக புத்திரர் ... 26
ஆண் மக்கள், பெண் மக்கள் ... 27
முப்பத்து இரண்டு வயதிற்கு மேல் குழந்தை பாக்கியம் 28
இருபத்துஆறு வயதிற்குமேல் குழந்தை பாக்கியம் 28

முப்பத்து இரண்டு வயதிற்கு மேல்
குழந்தை பாக்கியம் ... 29
புத்திரர் அழிவு ... ... 29
புத்திர சந்தானம் ... 30
இருபத்தொரு வயதிற்குமேல் குழந்தை
பாக்கியம் 30
புத்திர நாசம் ... 30
பத்துப் பிள்ளைகளைப் பெறுபவன் ... 31
அதிக புத்திரர்களைப் பெறுபவன் ... 31
ஒன்பது பிள்ளைகள் ... 32
எட்டுப் பிள்ளைகள் ... 32
ஒன்பது புத்திரர்கள் ... 32
கர்ப்ப அழிவும் புத்திரர் பிறப்பும் ... 33
ஒரு புத்திரன் உடையவன் ... 33
கசகேசரி யோகம் ... 34
பாக்கிய திசைகள் ... 34
அற்பாயுள் உடைய புத்திரர் ... 35

## ஆறாம் பாவம்

சத்துருவை வெல்பவன் ... 36
நோய் அதிகம் இல்லாதவன் ... 36
பாம்பினால் பயம் ... 37
நீரில் கண்டம் ... 37
அக்கினியால் பயம் ... 38
செல்வன், பொய்கை, சோலை அமைப்பவன் 38
நீங்காத நோயுள்ளவன் ... 39
ஆறு, பன்னிரண்டு வயதில் பிணியாளன் 39
சயரோகம் உடையவன் ... 40
குன்மரோகம் உடையவன் ... 40

வயிற்றுநோய் உடையவன் ... 41
பல நோய்களை உடையவன் ... 41
வாத சுரோணித நோய் உடையவன் ... 41
மிருகங்களால் கண்டம் உடையவன் ... 42

## ஏழாம் பாவம்

பல மனைவியர் ... 42
குறையுடைய மனைவி ... 43
ஏழாமிடத்தில் கிரகங்கள் நின்றபலன் ... 43
குழந்தையற்றவள், சில காலத்திற்குப் பிறகு புத்திரர் ... 44
நோயுடைய களத்திரம் ... 45
மனைவியின் மரணதிசை ... 45
இனிய மனைவி ... 46
மனைவி மரணம் ... 46
நோயுடைய மனைவி ... 47
இரண்டு மனைவியர் ... 48
வறுமையடையும் திசை ... 49
நீரில் கண்டம் ... 49
நோய்கள் வரும் காலம் ... 50
அரசன், அக்கினியால் கண்டம் ... 50
தந்தையுடன் வழக்காடுபவன் ... 51
[illegible]யினால் துன்பம் அடைபவன் ... 51
பாக்கியவான் ... 52
பல மனைவிகள் ... 52
திருமணம் நிகழும் வயது ... 53
மனைவி மரணம் ... 57
திருமணம் ... 58
மனைவி மரணம் ... 58
மனைவி மரணம் அடையும் காலம் ... 59
மனைவிக்கு நோயும் மரணமும் ... 59
மூன்று மனைவிகள் உடையவன் ... 60

## எட்டாம் பாவம்


| | | |
|---|---|---|
| மரணவயது | ... | 60 |
| மரணதிசை | ... | 61 |
| அபகீர்த்தி பெறுபவன் | ... | 61 |
| அற்பாயுள் உடையவன் | ... | 62 |
| தீர்க்காயுள் உடையவன் | ... | 62 |


## 9. ஒன்பதாம் பாவம்


| | | |
|---|---|---|
| பாக்கியமும் வாகனமும் உடையவன் | ... | 63 |
| பாக்கியவான் | ... | 63 |
| தந்தைபோல் பாக்கியவான் | ... | 64 |
| தந்தைக்குத் தீர்க்காயுள் | ... | 64 |
| பெற்றோர் தீர்க்காயுள் | ... | 65 |
| செல்வன், புகழுடையவன் | ... | 65 |
| உயர்நிலையில் வாழ்பவன் | ... | 66 |
| நல்ல புத்திரன் | ... | 66 |
| பாக்கியவான் | ... | 67 |
| செல்வம் உடையவன் | ... | 67 |
| தந்தைக்குத் துன்பம் தருபவன் | ... | 68 |
| பிறரிடம் பொருள் யாசித்து வாழ்பவன் | | 69 |
| இரந்து உண்பவன் | ... | 69 |
| தந்தை மரணம் | ... | 69 |
| தந்தையின் மரணகாலம் | ... | 70 |
| புகழும் செல்வமும் உடையவன் | ... | 74 |
| செல்வன் | . | 75 |
| செல்வம் வரும் காலம் | ... | 75 |
| பாக்கியவான் | ... | 76 |

## 10. பத்தாம் பாவம்


| | | |
|---|---|---|
| கங்கையில் நீராடுபவன் | ... | 77 |
| நன்மகன், ஆசாரம் உடையவன் | ... | 78 |
| பாக்கியவான் | ... | 78 |
| அரசாங்க ஆதரவு பெறுபவன் | ... | 78 |
| கீழ்மையான தொழில் செய்பவன் | ... | 80 |
| தீர்க்காயுள் | ... | 81 |
| புகழும் ஆயுளும் உடையவன் | ... | 81 |
| புகழுடையவன் | ... | 82 |
| புகழும் செல்வமும் உடையவன் | ... | 82 |
| அபகீர்த்தி | ... | 83 |
| வசைகூறப்படுபவன் | ... | 83 |
| கொடுமையான தொழிலை உடையவன் | | 84 |
| தீயதொழிலை உடையவன் | ... | 84 |
| நல்ல தொழில் செய்பவன் | ... | 85 |
| பாக்கியவான் | ... | 85 |
| நல்ல தொழிலுடைய செல்வன் | ... | 86 |
| பாக்கியவான் | .. | 86 |
| சோம்பேறியாகத் திரிபவன் | ... | 87 |
| பகைவரால் மரணம் அடைபவன் | ... | 87 |


## 11. பதினோராம் பாவம்


| | | |
|---|---|---|
| செல்வம் வரும் காலம் | ... | 88 |
| ஆயிரம் பொன் சம்பாதிப்பவன் | ... | 88 |
| பாக்கியவான் | ... | 89 |
| செல்வன், கீர்த்தியை உடையவன் | ... | 89 |
| செல்வமும் புகழும் உடையவன் | ... | 90 |
| ஆயிரம் பொன் உடையவன் | ... | 90 |

## 12. பன்னிரண்டாம் பாவம்

நாகத்தை அடைபவன் ... 91
பொ[illegible] அழி[illegible] ... 92
தர்மவான் ... 92
பிணிகளால் கேடுறுபவன் ... 93
புகழுடையவன் ... 93
அனைத்திலும் சிறந்து விளங்குபவன் ... 94
மன்னர் சமானன் ... 94

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி
## பின்னிணைப்பு I:

நாள், இராசி, கிரகங்கள், வெவ்வேறு
பெயர்கள் ... 100

## பின்னிணைப்பு II

சரசுவதி மகால் நூலக சோதிடச் சுவடிகளின்
அகரவரிசை அட்டவணை. ... 106

# சாதக நூல்

## நூல்

### காப்புச் செய்யுள்

காரணிகந் தன்கயிலைக் கடவுள் பாகம்
கவர்ந்துல கெலாம்நிறைந்த கவுரி ஞானப்
பூரணியம் பிகைஉமைசாம் பவிகலி யானி
புவனைசர்வ பூதனா யகிமுக் கன்னி
நாரணியா மளைஇமைய ராச கன்னி
நளினதிரி யாட்சரிசட் சமய சூட்ச
காரணிஈன் றருள்சிறுகட் புகர்மு கத்துக்
கணபதிஇச் சாதகநூல்க் காப்ப தாமே.

(இ-ள்.) கந்தனின் தாயாகக் கைலை மலையுள் வாழும் ஈசனின் இடப்பாகத்தில் இருந்து, இந்த உலகம் முழுவதும் நிறைந்தவள் உமை. கௌரி, ஞானபூரணி, உமை, சாம்பவி, கல்யாணி, புவனை, சர்வபூத நாயகி, முக்கண்ணி, நாரணி, யாமளை, இமையராச கன்னி, திரியாட்சரி, சட்சமய சூட்ச கரணி என்றெல்லாம் போற்றப்படுபவள். அத்தாய் பெற்றெடுத்த சிறிய கண்களையும், யானை முகத்தையும் கொண்ட விநாயகர், சாதக நூல் என்ற நூல் எவ்வித குற்றமும் இன்றி நிறைவுற காத்தருள வேண்டும்.

திருவளர்சா தகத்தோர்வட கலையை ஆய்ந்து
தென்கலையாய்ச் செய்ததெவன் திறலாம் என்னில்
அருவுருவாய் அவனிச்சலம் அனல்கால் அண்டம்
அனைத்தினுக்கும் காரணமாய் அமல மாகிப்

பரவரிய சிமையசற் குருவ தாகி
படைப்புமுதற் றொழிலனைத்தும் பறிக்கும்
தெய்வம்
மருவளர்தெய் வானைவள்ளி மகிழும் செவ்வேள்
வளர்பழனி அப்பரருள் வளமை என்பாம்

என்றது.

(இ-ள்) அறிவில் சிறந்த சோதிடக்கலையில் வல்ல பெரியோர்கள் வடமொழியிலமைந்த சோதிட **நூல்களை** ஆராய்ந்து தமிழ் மொழியில் மொழிபெயர்த்து எழுதியது, உருவற்று நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் அனைத்திற்கும் காரணமாக குற்றமற்ற சத்குருவாகி அனைத்துத் தொழில்களையும் செய்யும் தெய்வமாகிய, வள்ளி, தெய்வயானை இருவரும் மகிழும் செவ்வேளான பழனியப்பரின் கருணையினாலாகும் என்றவாறு.

## அவையடக்கம்

மருவாயனை முனிந்து வன்சிறையில்
வைத்துடன் மிட்டருள் வள்ளல்
குருபரன்உமை யாள்பயின்ற வேற்குளகன்
குறைகள் உணர்ந்தறி குரவோர்
இருபதும பரமனுக் கடப்பட்ட
என்மனத் திருந்தரு ளியதோர்
முருகாசொல் (லதனிற்) குற்ற முண்டெனினும்
இகழ்த்திடார் மூதறி வோரே!

என்றது.

(இ-ள்) வேதத்தின் உட்பொருளைக் கூறாத பிரமனின்மீது கோபம் கொண்டு சிறையிலடைத்து பின் மீட்ட வள்ளலாக விளங்குபவன். உமையவள் பெற்றெடுத்த வேலைக் கையில் கொண்ட முருகப்பெருமான்.

அப்பெருமானிடத்துத் தங்கள் குறைகளை உணர்ந்து எடுத்துரைத்த அடியார்கள் வணங்கும் இரு தாமரைகளை ஒத்த திருப்பாதங்களைச் சரணடைந்த எனக்கு, நீ அருளிய இந்தச் சாதக நூலில் ஏதேனும் குற்றம் குறைகள் இருப்பினும் அறிவில் மேம்பட்டச் சான்றோர்கள் என் குறைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். முருகனருளால் இகழமாட்டார்கள் என்றவாறு.

*கங்கைவெண் பிறைதேன் மல்கும்*
*கடுக்கைவெள் ளெருக்கும் சூடி*
*மங்கைதன் பாகம் வைத்து*
*மான்மழு வேந்தி மைந்தன்*
*பங்கயப் பதங்கள் போற்றிப்*
*பார்மிசை சனித்த மாந்தர்*
*தங்கள்சா தகமாம் சிந்தா*
*மணிதமிழ்ச் சாற்ற லுற்றேன்.*

*(இ-ள்)* கங்கையையும் குளிர்ந்த ஒளியை வழங்கும் வெண்மையான மூன்றாம் பிறையையும், தேன் நிறைந்திருக்கக்கூடிய கொன்றை மலரையும், வெள்ளெருக்கு மலரையும், சடாமுடியில் சூடிக்கொண்டு, கரங்களில் மானையும், மழுவையும் ஏந்தியிருக்கக்கூடிய சிவபெருமானின் மைந்தர்களாகிய விநாயகன், முருகன் ஆகியோரின் தாமரை மலர்கள் போன்ற திருத்தாள்களைப் போற்றி செய்து, இப்புவியுலகில் பிறந்த மனிதர்களுடைய சாதகங்களை அறிவதற்காக இச்சாதக நூலாகிய ஒளிபொருந்தியதாகிய மணிபோன்று விளங்கும் சிறந்ததொரு சோதிட நூலைத் தமிழில் சொல்லுகிறேன் என்றவாறு.

திருமால் மருகனாம் கணபதி சோதரன் தின்வேல்
முருகேசன் வெண்க மலாலய முறைவாணி உமைகோன்
ஒருமா முதல்கயி லாசல அபிதான மந்திரசற்
குருபாதம் என்னிதய அம்புயங் குடியேறும்
படிதொழுவாம்

(இ-ள்) திருமாலின் மருமகனும், விநாயகனின் இளைய சகோதரனுமாகிய வலியவேலைக் கொண்ட முருகப் பெருமானும், வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளும், உமையவள் தலைவனாகவும் ஒப்பற்ற முதல்வனாகவும் கயிலங்கிரியில் எழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபெருமானின் திருப்பாதங்களும் என் இதயமாகிய தாமரையில் குடியேறும்படி வணங்கி நிற்கின்றேன் என்றவாறு

## இலக்கன பாவம்

### அரசனாய் வாழ்பவன்

உதயாதிப னெனினும் குருபுக ரேனும் உத்தமராய்
இதமாகி நற்சுப கேந்திரம் இசையிற் சிதமிகவே
பதவாழ் வுருதீர்க் காஇதம் பயில்விற் பனமதியும்
கதமாக இப்புவி மன்னவர் காரியஸ் தனுமாமே.

(இ-ள்) ஈஸ்வர கடாட்சத்தினாலே பூமியிலே சனித்த பிள்ளைகளுக்கு இலக்கனாதிபதியாகினும் குரு, சுக்கிரன், நட்பு, ஆட்சி, உச்சங்களிலே கேந்திரமாகி உதயம், நான்கு, ஏழு, பத்தாம் இராசிகளிலே நிற்பாராகில், தீர்க்காயுளும் பாக்கியமும் உடையவராகப் புத்தி விஸ்தாரத்தோடு விற்பன்னராகப் பெற்று உலகங்களுக்கு இராசாவாய் இன்பமாய் வாழ்வான் என்றவாறு.

## பாக்கியவான்

ஆமோ தயனா தன்சுப உச்சங் களிலமரத்
தாமேவு நல்லோர் நோக்குற தனையன் தன்பதியாய்க்
காமாதி கள்வளர் போகமும் கனதந் திரஅறிவும்
சீமானெனி னும்சுப கீர்த்தியும் திறமும்
பெறுகுவனே.

(இ-ள்) சென்ம இலக்கனாதிபதி நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று தன, இலாபத்தில் கேந்திர திரிகோணங்களில் தேறி நிற்க, அவர்களைச் சுபக்கிரகங்கள், சுபஸ்தானங்களில் நின்று நோக்குப் பெறில், சர்வ இஷ்டகாமியமும் போக போக்கியமும் சகல பாக்கியங்களும் பெற்று புத்தி வித்தார உபயமும் கீர்த்தி, பிரதாபமும், சௌக்கிய வாழ்நாள் பெற்றுச் சமர்த்தனாகி வாழ்வான் என்றவாறு.

## நோயாளி

3. பெறுலக் கனநா தன்துர்ப் பலனா கயிருந்தே
தெறுஞ்சத் துருநீ சப்பதி சேர்ப்ப வாகான
அறுமிச் சிரமலி வற்றுடன் உஷ்ண தகனாளும்
மறுகிச் சதாஆ யாசமும் மாறா தெனலாமே.

(இ-ள்) சென்ம இலக்கினாதிபதி துர்பலனாகி, அஷ்டம, ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடங்களில் நிற்க, அவர்களைப் பாவக் கிரகங்கள் நோக்கினும், கூடி நிற்கிலும், அற்பாயுள் உடையவனாகிச் சரீரம் தேய்ந்து, நாளுக்குநாள் உஷ்ணரோகங்கள் மிகுந்து சரீர தளர்ச்சியும், ஆயாசமும் மிகுந்து ரோகஸ்தனாவான் என்றவாறு.

## பாக்கியவான்

3. ஆமே குருபுகர் மால்இலக் கனனாற் சமனாகிப்
பூமே உதயத் திற்சுபர் கேந்திரம் பொருந்துவரேல்
கோமே வியபல சம்நய குணமும் சுபநெறியும்
பூமேவிய தீர்க்கா யுசுவும் புகழும் புரிந்திடுமே.

(இ-ள்) சென்ம இலக்கனாதிபதி தேறி, பரிபூரண சுத்தனாகி, அஸ்தமமான க்ஷீரண, முடமின்றி, வியாழன், புதன், சுக்கிரன், இவர்கள் சமனாகிய கிரகங்களுடனே கூடி நோக்குப் பெற்று சுபஸ்தானங்களிலே கேந்திரங்களிலே ஏறி நிற்க, அவர்களைச் சுபர்பார்க்கில், சந்தோஷமும், கீர்த்தி சம்பத்தும் சற்குணமும், சுபவிர்த்தியும், தீர்க்காயுசும், சுபகீர்த்தியும் பெற்றும் சகலரும் வணங்க வாழ்வான் என்றவாறு.

## அற்பாயுள்

5. இடலக் கனம்தனிற் பனியே யதற்கு சன்சனிதான்
உடற்பற் றினும் எதிர் நோக்கினும் இலக்கனாங்
கிஷமுறினும்
அடலுற் றகினு தயதிரை அதைநோக் கினுமவமே
படியுற் றிடுபுதல் வர்க்கெம யோகம் பலித்திடுமே.

(இ-ள்.) சென்ம இலக்கினத்தில் பாம்பு, இருக்க, அல்லது நோக்கினும், சந்திர இலக்கினத்தில் செவ்வாயாவது சனியாவது கூடியிருக்கினும், பார்வை உண்டாகப்பெறினும் சென்ம இலக்கனாங்கிஷத்திலே கூடி இருக்கினும் அல்லது பாபக் கிரகங்கள் இருக்கினும், நாதர்கள் சென்ம இலக்கனத்தையாவது சந்திர லக்கினத்தையாவது நோக்கினும் அற்பாயுளாம் என்றவாறு.

## இதுவுமது

6. பவநட் புறதன் நாயக னவனைப் பவர்பார்க்க
சுபமுற் றெதிர்கா ணாரெனிற் அதனுற் றிடுபதிபன்
அவபிலத்துட னுறினும் பணியதை நோக்கி
னும்குளிகன்
பலவன் சிதனை நோக்கினும் பாலன் அதமாமே.

(இ-ள்) சென்ம இலக்கனத்திலே இரண்டாம் இடத்திற்குடைய கிரகம் இருக்க, அவனைப் பாவக்கிரகங்கள் பார்க்க, சுபக்கிரகங்கள் பார்வை இல்லாவிடினும், சென்ம இலக்கனாதிபதி நீச, மூட, க்ஷீரணமாகி சட்ட, அட்ட, வியமாகிய ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்கினும் அவர்களை இராகு கேதுக்கள் பார்க்கினும் சந்திர இலக்கனத்தைக் குளிகன் கூடினும் நோக்கினும் அற்பாயுள் என்றவாறு.

## இதுவுமது

7. அதமக் கதிர்மதி அத்தொடு அங்கிசம் தனிற்மருவ
சசிநற் குருபுத நோக்கமில் செனனப் பதியிறைவன்
விதனத் துடன்மரு வப்பெறி லாமிக சிசுமரணம்
பதியுற துர்ச்சனர் கூடினும் அதமாம் பாலனுமே.

(இ-ள்.) சந்திராதித்தர் இருவரும் பாவராகி ஒரு அம்சத்திலே இருக்க, அவர்களைப் புதனாவது குருவாவது பார்க்காமல் இருக்க, சென்ம இலக்கனாதிபதி பகை, மூட, க்ஷீரணனாகி, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களைப் பாவர் நோக்க, நிற்க அற்பாயுள் என்றவாறு.

இலக்கன பாவம் முற்றிற்று

# 2. இரண்டாம் பாவம்

## செல்வமும் புகழும் உடையவன்

8 பாலன் தனத்தான் குருவாகி நின்று தனம்பற்றில்
சீலம் பெறுபௌ மனுடன் சேரில் சிசுநாளும்
ஞாலம் புகழ்தனத் தானென வாழ்வர் இவர்நலமில்
சீலம்பெற் றுரினும் சுபநோக் கெய்தி னும்திருவே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் இடத்தின் கிரகம் குருவுமாகி, தனத்தானமுமாகி இரண்டாமிடத்தில் இருக்க, அவனைச் செவ்வாய் கூடிடினும் நோக்கினும் தனதான்ய சம்பன்னனாகி சகலரும் போற்ற வாழ்வான் என்றவாறு.

## பாக்கியவான்

9. எய்தோதய நாதன் பதினொான் றெய்த
அவ்விறைவன்
இவ்வோரை யின்குடி லில்புகி னும்கேந்
திரமெனினும்
மைவார் விழிமட வாய்மிகு வாழ்நா ளுடன்வாழ்வும்
செய்யாள் கனக இலாபமும் சிறக்கும் வெகுதனமே.

(இ-ள்) சென்ம இலக்கினாதிபதி, பதினோராம் இடத்தில் இருக்க, அந்தப் பதினோராம் இடத்திற்கு அதிபதி, இலக்கனத்திற்கு இரண்டாமிடத்தில் இருக்க அல்லது கேந்திரங்களாகிய உதயம், நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் இருக்க தீர்க்காயுளும் சௌபாக்கியமும் சம்பத்தும் கீர்த்தியும் மேன்மேலும் விளங்கும் என்றவாறு.

## இதுவுமது

தனநா தன்கேந் திரம்புக இலாப ாதிபன்தானும்
கனகன் புகர்கா ணும்படி கோணங் களில்நிற்க
தனலாப மெய்திரு மேசிசு தான வர்திசையில்
எனமாம் அவர்சுப இராசியில் ஈடேறி எய்திடவே.

(இ-ள்) தனத்தானமாகிய இரண்டாம் இடத்துக்கு உடையவன். சென்ம இலக்கன கேந்திரத் தானங்களிலே இருக்க, இலாபஸ்தானமாகிய பதினோராம் இடத்திற்கு உடையவன் மீது குரு அல்லது சுக்கிரனின் பார்வை இருக்கில், அவர்களுடைய மகாதிசையில் இவனுக்குத் தனலாபம் உண்டென்பது. இவை பகை, நீசம், அத்தனம் இல்லாமல் தேறி நிற்கில் என்றவாறு.

## தரித்திரன்

11. ஒன்றும் தனலா பாதியர் சுபராய் மேவுற்றே
கன்றும் பவர்கா ணச்சர ராசி தலங்கதுவில்
என்றும் பலிபுக் குண்ணுவன் இவன்சென்
மம்தரித்திரம்
அன்றும் கிடையன மேயிவை வேத விதியாமே.

(இ-ள்.) தனத்தானமாகிய இரண்டாமிடத்திற்கு அதிபனும் இலாபஸ்தானமாகிய பதினோராம் இடத்திற்கு அதிபதியும் சுபக்கிரகங்களாகி, க்ஷீரண, மூட, பகை, நீச இராசிகளில் மெலிந்திருக்க (பலமின்றி இருக்க) சுபக்கிரகங்கள் நோக்கு இல்லாது இருக்க, பாவக்கிரகங்கள் பார்க்க, சரராசிகளில் இருந்தால், இவன், சென்ம தரித்திரவானாகிப் பிச்சைப்புக்கு உண்ணுவான் என்றவாறு.

## கண்குறைபாடு

எய்தும் தனனா தன்பகை நீசங் களில்எய்தில்
எய்தொன் றும்இலா போசனத் தான மனமுறிவித்
தெய்தும் பதினொன் றில்பவர் எய்தில் கெடுநயனம்
எய்தின் டியசுபர் நோக்கிறில் விழியொன்
றகுமகுமே. 12

(இ-ள்) தனத்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு அதிபதி, க்ஷீரண, நீச, பகை, மூடமாகி நிற்க, இலாபஸ்தானமாகிய பதினோராம் இடத்து அதிபனும் அஸ்தனமாகி நிற்க, இரண்டாமிடத்திலும் பதினோராம் இடத்திலும் பாவக்கிரகங்கள் இருக்கில், கண்கெடும் என்பது. இப்படி இருக்க, சுபக்கிரகங்களின் பார்வை உண்டாகில், ஒருகண் உண்டாம் என்றவாறு.

## இராச தண்டனையால் பொருள் இழப்பு

13. வேதம்பயில் சட்ட ாட் டமவிய தானங் கள்தன்னில்
நீதம் பெறுதன லாபம் துடையோர் நின்றிடவே
ஓதும் பதினொன் றில்குச னுறஇரண் டினில்இராகு
ஏத முறவுறில் மன்னவர் தண்டத் திருந்தனமே.

(இ-ள்.) சட்ட, அட்ட வியஸ்தானங்களான ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு உடையவன் நிற்க, இலாபஸ்தானமாகிய பசினோராம் இடத்திற்கு அதிபனும் நிற்கில், அப்பொழுது செவ்வாய் பதினோராம் இடத்தில் நிற்கில், அப்பொழுது இராகு இரண்டாம் இடத்தில் இருக்குமாகில் இவன் தேடிய திரவியம் (செல்வம்) இராசாக்களுடைய தண்டத்தினாலே போகும் என்றவாறு.

## தர்மவான்

14. தனமாம் பதிபுகர் மேவ அந்தணன் இலாபம்தனக்
கினமாம் தனலா பாதிபர் புதனோ டுறவேஇதில்
கனமாம் வியமெய் தச்சுபர் காணப் பெறில்சேரில்
அனமே! தனம்த ரும்பொருட் டழிவாம்
எனஅரையே.

(இ-ள்.) தனத்தானமாகிய இரண்டாம் இடத்தில் சுக்கிரன் நிற்க, வியாழன், இலாபஸ்தானமான பதினோராம் இடத்தில் இருக்க, இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் பதினோராம் இடத்திற்கு அதிபதியும் புதனோடு கூடி நிற்கிலும், புதனுடைய நோக்கம் பெற்று நிற்கினும், இப்படி இவர் வியஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, இவன் தேடிய திரவியம் (செல்வம்) எல்லாம் தர்மத்திற்காகச் செலவிடுவான் என்றவாறு.

## வெகு குடும்ப இரட்சகன்

15. அரையும் குடும்பா திபன்சுப னாகிக் கேந்திரத்தில்
உரையும் சுபத்திரே காண அங்கிஷமும் சுபமுறவே
நிரையும் சுபநோக் கம்பெற நிலவும் வளர்பிறையே
விரைவன் வெகுகுடும் பாதிரெட் சகனாம்
புவிசலனே!

(இ-ள்.) குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு அதிபதியும் சுபக்கிரகமாகி நீச, மூட, பகையில்லாமல் தேறி, கேந்திரங்களாகிய உதயம், நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் சுபக்கிரகங்களுடைய நோக்கில், திரிகோணங் களில், சுபதிரேக்காணம், சுப அங்கிசமாகி ஏறி நிற்கில், அவர்கள் சுபக்கிரகங்களின் நோக்கம் பெற்று நிற்கில், பூர்வபட்சத்துச் சந்திரன் தேறி மெலிவின்றி இருக்கும் காலமாகில் வெகு குடும்ப இரட்சகனாகச்சகல சம்பன்னனாகி எல்லாவிபரமும் உடையவனாகி வாழ்வான் என்றவாறு.

## ஆயிரம் பேரைக் காப்பவன்

*16.* குடும்பாதிபனுமுச் சம்புக குருபார்க் கவ்வுதயம்
தொடுங்கேந் திரம்சுபர் எய்திடத் தோன்றும்
சுதன்வாழ்நாள்
நெடுங்கா லமும்சுகம் மேவி எய்திட இரட்சகனாய்
இருந்தால் நயத்தோர் ஆயிரத் திறையாம்
இவனென்னே.

*(இ-ள்.)* குடும்பஸ்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு உடையவன் உச்சம் பெற்று நிற்க, அவனை வியாழன் பார்க்க, உதய இலக்கனத்தில் சுபக்கிரகங்கள் கேந்திர ஸ்தானமான உதயம், நான்கு, ஏழு, பத்தாமிடங்களில் தேறி நிற்கில் தீர்க்காயுளுடனே வாழ்ந்து, ஆயிரம் பேருக்குக் கர்த்தனாகி இரட்சகனாகி இராச புத்திமானாக இருப்பான் என்றவாறு.

## *உபகாரி, தனாதிபதி*

*17.* இவனெய்தும் குடும்பம் குழுதனில் எய்திட
புகராமல்
அவைகா ணப்பதி நாயகன் சுகிர்த்த தலமடைய
நவநா யகநேர் நோக்கிடத் தனையன் சகலருக்கும்
அவனாய் உபகாரத் தொடுசுக நல்கும் அச்சுதனே!

*(இ-ள்.)* குடும்பத் தானமான இரண்டாம் இடத்தில் வியாழன் இருக்க, பகை, நீசம், க்ஷீரண, மூடம் இல்லாமல் தேறி, நான்காமிடமாகிய சுகஸ்தானத்தில் இருக்க, இவனைத் தனத் தானத்துக்கு அதிபதியும் ஒன்பதாம் இடத்திற்கு அதிபதியும் தேறி, நீசம், பகை, மூடம் இல்லாமல் நோக்கிட, இவன் சகலருக்கும் உபகாரியாய் நல்வாழ்வு உண்டாகி, தனாதிபதிபனாக வாழ்ந்து சுகித்திருப்பான் என்றவாறு.

## கண் குறைபாடு

18. நேத்திரா திபன்பலம் எய்திடப் பவனா
திபன்மெலிவாய்
நேத்திரு டட்டம வியமா றிடம் சேரில்
அவர்த்திசையில்
பார்த்திரார் சுபரெனில் சுதன விளம்போம்
சுபர்பார்க்கில்
நேத்திரோர் வைகுலி யாமெனப் புகல்வாய்
இதுநிசமே!

(இ-ள்.) நேத்திர ஸ்தானமான இரண்டாமிடத்திற்கு உடையவன் தேறி, பகை, நீசம், மூடம், க்ஷீரணம் இல்லாமல் இருக்க, ஜென்ம இலக்கனத்திற்கு உடைய கிரகம், பகை, நீச, மூட, க்ஷீரணத்துடன் தேறி பகை நீசங்களில் அல்லது, ஆறாவது இடத்திலாவது எட்டாம் இடத்திலாவது பன்னிரண்டாம் இடத்திலாவது இருக்க, இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காது இருக்கில், அவர்களுடைய மகாதிசையிலாவது அபகாரங்களிலாவது நயனத்திற்குக் கேடு காட்டும். சுபக்கிரகங்களின் நோக்கு இருப்பின் பீடை உண்டாகும் என்றவாறு.

## கருமி, வாதரோகி

19. புகலும் குடிநா தன்பல ருடன்கூ டிடபலமாய்ச்
சகலரும் குடிபவர் எய்திடத் தோன்றும்
சுத்தனென்னும்
அகலும் மொழிபொய் யன்றிமெய் புகலான்
மிகுலோபி
இகலும் பிணிவா யுக்கதி வியாதிக் கிடமிலவே.

(இ-ள்) குடும்பத்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு அதிபதி, பாவக்கிரகங்களுடன் கூடி க்ஷீரண, மூட, பகை, நீச

இராசிகளில் இருக்க, இரண்டாமிடத்தில் பாவக்கிரகங்கள் நிற்கப் பிறந்தவன், நாள்தோறும் பொய்யும் புரட்டும் சொல்லுவான். அத்துடன் இல்லாமல் உண்மை சொல்ல அறியாதவனாகி, மிகவும் லோப குணவானாகி வாதரோக வியாதியானுமாகி இருப்பான் என்றவாறு.

இரண்டாம் பாவம் முற்றிற்று

## 3. மூன்றாம் பாவம்

### அதிக சகோதரம்

20. இவன் மூன்றி னில்பிராது ருப்பதியின் நாதன்
துர்ச்சனனாய்
அவனோ டுறவாய்க் காரகன் ஐந்தில் பலவானாய்க்
அவர்காண அப்பிரா திருத்தல நாதன் சுபபலமே
அவன்முன் நிலைபோய்ச் சோதரர் அதிகம்
எனலாமே!

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு மூன்றாமிடம் 'சகோதரதானம்' என்று சொல்லப்படும். இந்த மூன்றாம் இடத்திற்கு அதிபதி பாவக்கிரகமாகிச் சகோதரக் காரகனாகிய செவ்வாயுடனே கூடி நிற்க, அந்தச் செவ்வாய் பலம் பெற்று இருக்க, அவர்களைச் சுபக்கிரகங்கள் நோக்கில், மூன்றாமிடத்திற்கு அதிபதி பலன் பெற்றிருந்தானானால், இவன் முன்னிலையாகச் சகோதரம் அநேகம் உண்டாம் என்று சொல்லுவது என்றவாறு.

### சகோதரர் அழிவு

21. அதன்மூன் றிறைபலம் பெறஅங் கார கன்தன்னைச்
சிதன்மால் குருகா ணாரெனில் துர்ப்பவ ருஞ்சேரில்
விதமூன் றிடம்பவர் பார்த்திடச் சேய்துர்ப்
பலத்திருக்க
அதமாம் எனலா கும்இவை ஆராய்ந் தறிந்துரையே!

(இ-ள்) ஜென்ம இலக்கனத்திற்கு மூன்றாம் இடத்திற்கு அதிபதி பலம் பெற்றிருக்க, செவ்வாயைச் சுக்கிரன், புதன், குரு முதலான சுபக்கிரகங்கள் பாராமல் இருக்க, மூன்றாம் இடத்தில் பாவக்கிரகங்கள் சேர, மூன்றாம் இடத்தைப் பாவக்கிரகங்கள் பார்த்திருக்க, செவ்வாயும் துர்ப்பலனாகிடில் சகோதரர் நசிக்குமாம். அன்றியும் சகோதரர் உண்டாகாது. உண்டானாலும் விருத்தியாது என்றவாறு.

## சகோதரர்கள் உடையவன்

22 திரிகோ ணங்களில் மூன்றாம் அதிபன் காரகனும்
திரலோ டுறுசுப வர்க்கமும் சேர்ந்தே நலிவின்றி
உறைவா னொடுசுபர் கண்டிடில் அவனுக்
குடன்பிறவி
பிறைசேர் நுதலாய்! உண்டெனப் பேசும்
பெரியோரே!

(இ-ள்.) பிராது ஸ்தானமாகிய மூன்றாமிடத்திற்கு அதிபதியும் சகோதரக் காரகனாகிய செவ்வாயும் பலம்பெற்றுத் தேறி திரிகோண கேந்திர ஸ்தானங்களில் நிற்க, இவருடனே சுபக்கிரகங்கள் தேறி நிற்கிலும், நின்று பார்க்கினும் இவனுக்குச் சகோதரர் உண்டாம் என்று சொல்லப்படும் என்றவாறு.

## ஆண், பெண் சகோதரங்கள் உடையவன்

23 பெரியோர் பிராதுற அப்பதி பிரகற் பதியனுக
உரிதா கத்தல நாயகன் ஆட்சி யோடுறவாய்க்
குரிதாங் குசன்சனி யோடுற ஒருபெண்ணோ
டோறாணும்
பரிவாக உற்பவிக்கு மென்று பகர்வார்கள்
பண்டிதரே!

(இ-ள்.) சகோதர ஸ்தானமாகிய மூன்றாம் இடத்தில் வியாழன் இருக்க, அந்த மூன்றாம் இடத்ததிபதி சந்திரனுடனே கூடி தேறி நிற்க, சகோதரக் காரகனாகிய செவ்வாய் சனியோடு கூடி நிற்க, சனி நோக்க, இவனுக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சகோதரம் உண்டென்று சொல்லப்படும் என்றவாறு.

## இதுவுமது

24 அங்கா ரகன்பணி யோடுற பிராதுருப் பதினாதன்
தண்ணீசத் தடையிற் சகோத ரர்ஜந் தில்மூன்றும்
பகலோன் மகன்மதி எய்திடும் ஒருதா ரன்படியில்
விகலின் றியவாழ் நாளொடும் இருப்பான்
எனவிளம்பே!

(இ-ள்.) சகோதரக் காரகனாகிய செவ்வாய், இராகு, கேதுக்களுடன் கூடி இருக்க, சகோதர ஸ்தானாதிபன் நீச, மூட, க்ஷீரண, பகை பெற்று நிற்க, இவனுக்குச் சகோதரம் ஐந்துபேர் என்றும் அதில் மூன்று பேர் மரிப்பார்கள். ஒரு சகோதரன் தீர்க்காயுளுடன் கூடி இருப்பான் என்றவாறு.

## பன்னிரு சகோதரர்கள் உடையவன்

25 இயங்கும் சகோதர நாயகன் கேந்திரங் களிலெய்த
தயங்கும் திரிகோ ணங்கா ரகன்மருவ குருநோக்க
முயங்கும் சுபசொட் சேத்திரம் தனிலே இவருரினும்
மியங்கும் பனிரெண் டாமிவன் பிறப்பென்
றிவைபெண்ணே!

(இ-ள்.) சகோதர ஸ்தானமாகி மூன்றாம் இடத்திற்கு உடையவன் கேந்திரமாகிய உதயம், நான்கு, ஏழு, பத்தாம் இடங்களிலே இருக்க, செவ்வாய் திரிகோணமாகிய ஐந்து,

ஒன்பதாம் இடங்களிலே இருக்க, இவர்கள் சொட்ச சேத்திரங்களில் நின்று சுபக்கிரகங்கள் இவர்களைப் பார்க்கினும் இவர்களுடனே கூடி நிற்கினும் இவனுக்குச் சகோதரம் பன்னிரண்டு பேர் உண்டென்று சொல்லப்படும் என்றவாறு.

## ஏழுபேர் உடன்பிறந்தோர்

26 எண்ணும் வியத்த திபனொடு சேய்கூ டிடங்கனகன்
நன்னும் எனினும் பார்க்கினும் சோமன்
சகோதரத்தில்
இண்ணம் பலமுற் றெய்தினும் திறல்கூர்
சகோதரந்தான்
எண்ணும் எழுவோர் இன்றிவை இசைந்தார்
இயல்வோரே.

(இ-ள்.) வியத்தானமாகிய பன்னிரண்டாம் இடத்திற்கு உடையவன் செவ்வாயுடனே கூடி இருக்க, அவனை வியாழன் பார்க்கினும், மூன்றாம் இடத்தில் சந்திரன் தேறி நிற்கினும், அல்லது மூன்றாம் இடத்திற்கு உடைய கிரகத்துடனே கூடி தேறி நிற்கினும் இவனுக்கு ஏழுபேர் உடன்பிறப்பென்று சொல்லப்படும் என்றவாறு.

## அதிக சகோதரர்கள்

27 இயலொன்று சுவர்க்கங் களிலும் உச்சந்
தனிலினிதாய்
தயவொன்று சுபாங்கினங் கிஷங்களிலொன் றயந்த
னிலநாலில்
மயமொன் றியபிரா துறாதிபந் மருவில்
விரண்டினிவாம்
தயவொன் றியசுபர் காணினும் அதனைக்
கூடினுமிலையே

(இ-ள்.) சகோதர ஸ்தானமாகிய மூன்றாம் இடத்திற்கு உடையவன் ஆட்சி, உச்சம் பெற்று திரிகோண கேந்திரமாகிய உதயம், நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து ஆகிய தானங்களில் இருக்க சகோதரக் காரகனாகிய செவ்வாயும் தேறி நிற்க, இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்க, கூடினும் சகோதரர் அதிகமாக உண்டாம் என்றவாறு.

மூன்றாம் பாவம் முற்றும்

## 4. நான்காம் பாவம்

28. இலகவா கனசுக வித்தை வாச்சியா திகள் விசித்திரம்
நலந்தா வம்பந்து சென்ம நாள்வகை கெமனமதாம்
சுலவா ரிகலோகம் சுகமிவை நாலிட
இடமெனுமால்
நலவா திபர்நலி வின்றி கேந்திர முறநலமே.

(இ-ள்.) நான்காமிடம் 'அம்சதானம்' என்றும் 'வாகனத் தானம்' என்றும் 'பந்துத்தானம்' என்றும் 'மாதுரு தானம்' என்றும் 'கமனத்தானம்' என்றும் 'சுகத்தானம்' என்றும் 'இகலோகத் தானம்' என்றும் சொல்லப் படும். இந்த நான்காம் இடத்திற்கு உரிய கிரகம் க்ஷீண, நீச, மூட, பகையின்றி உதயம் நான்கு, ஏழு, பத்து ஆகிய வீடுகளில் பலம்பெற்று இருந்தால் மிகவும் நன்மை என்றவாறு.

### அன்னைக்குத் தீர்க்காயுள்

29. நலமா கியநா லதிபன் தொழில்நா தனையணுகி
பலமேவி நற்கேந் திராதி யோடுறினும்
அவைபெறினும்
குலமா திருபதி யிற்சுபர் குறுகத் தலநாதன்
பலமாகி நற்சசி தேறிடில் பெறுமாம் உறுஅனையே!

(இ-ள்) நான்காம் இடத்திற்கு உடையவன் வலிமை பெற்றுப் பத்தாம் இடத்திற்கு உடைவனோடும் கூடி உதயம், நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திரங்களில் இருந்தாலும் அல்லது கேந்திரத்தானாதிபதியுடன் கூடினும் மாதுரு ஸ்தானமான நான்காம் இடத்தில் சுபகிரகங்கள் சேர்ந்து இருந்தாலும், பார்த்தாலும், சந்திரன், ஆட்சி, உச்சம் பெற்று இருந்தாலும் மாதாவுக்குத் தீர்க்காயுள் உண்டு என்றவாறு.

## சுகவான்

30 அன்னப் பதியிறை வன்னவ னாகிச் சுபர்காண
பென்னச் சிசுபே ரொப்பது பேரில் நாலிடத்தனிற்
பொன்னுற் றெதிர்தரி சிக்கினும் புகர்மால் தரிசனமே
என்னப்பெறின் பந்துக் களுமிவன் தானும்
நற்சுகமே.

(இ-ள்.) மாதுரு ஸ்தானாதிபதி வலிபெற்று, நட்பு, ஆட்சி உச்சங்களிலே நிற்க, அது திரிகோண, கேந்திரத்தானங்களாகிய உதயம், நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பதாம், பத்தாம் இடங்களாயிடினும், அவன் சுபக்கிரகங்கள் நோக்கம் பெற, சந்திரன் சுபக்கோளுடன் கூடி நிற்க, நாலாம் இடத்தை வியாழன் பார்க்க அல்லது சுக்கிரன், புதன் பாக்கிலும் பந்து சனங்களும் தானும் சுகமே இருப்பார்கள் என்றவாறு.

## ஆலயம் அமைப்பவன்

31 சுகநா யகன்புகர் மாலொடு சொட்சோத் திரமுறவே
பகலோனும் நன்மித் திரபதி பற்றிச் சுபத்தானம்
மிகவெய் திடநா லாமிட கோள்கள் கண்டிடினும்
சகமது ஷாள்புக ழாலயம் சமைப்பன் தனயனுமே.

(இ-ள்.) சுகஸ்தானமாகிய நான்காமிடத்திற்கு உடையவன் பலம் பெற்று, புதன் சுக்கிரனோடு கூடி ஆட்சியில் நிற்க, சூரியன் நட்பில் இருக்க, சுபஸ்தானங்களில் நிற்க, நான்காம் இடத்தைச் சுபக்கோள்கள் நோக்க, சகத்தில் மனிதர் மெச்சுப் புகழ் ஆலயம் சமைப்பான். நல்ல நல்ல மாளிகை சமைப்பான் என்றவாறு.

## *மகாவித்துவான்*

*32.* தனயன் சுகநா தன்சுப கேந்திரத் தலம்சார
வினவின் றிசசி கேந்திரம் எய்த புகர்புலவன்
நனிஎய்து சொட்சேத் திரம்பெற நல்லங் கிசம்ஏற
வினையம் பெறநேர் நோக்குல வித்தான்
மைகுறித்தே!

(இ.ள்.) நான்காம் இடமாகிய மாதுரு ஸ்தானாதிபன் வலிமை பெற்றுக் கேந்திரத்தானங்களில் இருக்க, சந்திரனும், க்ஷீரண, நீச, மூடம் இன்றித் தேறி, கேந்திரத் தானங்களில் இருக்க, புதனும் சுக்கிரனும் சொட்ச சேத்திரம் ஏறி நிற்க, சுபாங்கிசம் ஏற அல்லது சுபாங்கிசங்களில் நின்று நோக்க, இவன் மகாவித்துவான் ஆவான்.

## *பாக்கியவான்*

*33.* உரிதாம் சுகம்தனத் தால்மக கதிரோ டுடுபதியோ
டரிதான வம்பதி னொன்றி டமனுக் குசன்தன்னைக்
குருமால் புகர்காண் பாரெனில் கோவா திகழ்மயிடம்
புரிவார் குழன்மயி லேயிவை போதப் பலுகிடுமே.

(இ-ள்) சுகஸ்தானமாகிய நான்காமிடத்திலும் தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்திலும் சூரியனும் சந்திரனும் இருக்க, ஒன்பதாவது இடத்தில் அல்லது

பதினோராம் இடத்தில் செவ்வாய்த் தோன்றி நிற்க, அவனைப் புதன், வியாழன் இவர்களில் ஒருவர் நோக்க பசுவர்க்கங்கள், மயில்வர்க்கங்கள், அசுவ வர்க்கங்கள் முதலாகிய பவுசு பாக்கியம் வர்த்திக்க (பெருக) வாழ்வான் என்றவாறு.

### மூடன், ஊமை

34 போதும்சுக னாதன் அரிபுத் தானம் பொருந்திடவே
ஓதும் சுகத்தல நீசர்க ளுடன்நோக் கில்பவுமன்
நேதம்பயில் மேவியம் எய்திட வேயதும்
சிறுவன்தான்
தேதம்பயில் மூகைத் தனமே எய்தும் கிளிமொழியே!

(இ-ள்.) சுகஸ்தானமாகிய நான்காம் இடத்திற்கு அதிபன், அரிபுத் தானமாகிய ஆறாம் இடத்தில் இருக்க, இந்த நான்காம் இடத்தில் நீசக்கிரகம் இருக்க அல்லது நான்காம் இடத்து அதிபன் அல்லது நான்காம் இடத்தை நீசர்கள் பார்க்க, செவ்வாய் வியத்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் இருக்கப் பிறந்த பிள்ளை மூடனாகி ஊமையாவான் என்றவாறு.

### தேசாந்திரி

35 மொழிஎட் டிறைசுபம் எய்தவின் நாலாம்
இடத்ததிபன்
நலிவுற் றிருநீசம் தகவியக் கார கன்எய்தில்
கொழுவிப் புகவருமிச் சுதன்குடி ஓரிடம் நிலையான
அழிவுற் றுலகம் தோறும் இயங்கித் திரிகுவனே.

(இ-ள்.) அஷ்டமாதிபன் வலிபெற்று, நிற்க நான்காமிடத்திற்கு அதிபதி பகை, மூட, க்ஷீரண நீசனாகி நிற்க, இதன் காரகனான சந்திரன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் குடித்தனம் ஒரு பக்கத்திலும் உறையாமல் இராச்சியமெல்லாம் அலைவான் என்றவாறு.

## இகழ்ச்சி அடைபவன்

36. இயங்காறாதிபநாலாமிடம் எய்தஷ் டமநாதன்
தியங்காதொருடல் நோக்குத் திகழும் சுகத்திறைவன்
கயங்காதுருபல ஈனமதா மறைவாகியங்குருமேல்
முயங்காதொருபந்துசனம் உலகோர்
வசைமொழியே!

(இ-ள்.) ஆறாம் இடத்திற்குரிய கிரகம் நான்காம் இடத்தில் இருகக, அஷ்டமாதிபதி இவனுடனே கூட அல்லது நோக்கம் பெற்று இருக்க, சுகஸ்தானாதிபதி பகை, மூட, க்ஷீரணனாகி நீசம் பெற்று மறைய அல்லது பாவ வீடுகளில் நிற்கில், இவனைப் பந்து சனங்கள் நிர்தாட்சண்யமாக வசைமொழி கூறி இகழ்வார்கள் என்றவாறு.

## தாயின் மரணம்

37. வசைகூரருமாதுருத்தல வதிபன் சுபாங்கிஷமாய்
இசையோறைமன்ன வாங்கிஷம் எய்தும்
பதியதிபன்
திசைமேவு மன்னாளேஇவர் சேரங் கிசதிசையே
வசையாது வந்துரு நாளிவன் அன்னைக்
கழிவென்னே.

(இ-ள்.) மாதுரு ஸ்தானமாகிய நான்காம் இடத்திற்கு அதிபதி சுபாங்கிசங்களில் இருக்க, அந்த இராசிக்கு உடைய கிரகம் இவனுடைய சென்ம இலக்கனத்தில் அல்லது நவாங்கிசம் ஏறப்பெற்று நிற்க, அந்த அங்கிசாதிபதி மகாதிசையில் அல்லது இவர்கள் சேர்ந்த அங்கிச இராசி அதிபனுடைய மகாதிசையில் இவனுடைய மாதா மரணம் என்றவாறு.

## வாகனங்கள் இல்லாதவன்

38. அன்னைப் பதியிறை துர்ப்பல னாகிப் புகர்மூடம்
தன்னைப் பெறுஇதை நோக்கிடச் சாவாம்
பணிசமனாய்
முன்னுற் றிட எதிர் நோக்கி டமுகின் முலைமயிலே!
பொன்னுற் றிடிலிவன் வாகனம் பொருந்தான்
எனப்புகலே!

(இ-ள்.) மாதுரு ஸ்தானமாகிய நான்காம் இடத்திற்கு உடையவன் பலவீனனாகி, க்ஷீரண, மூட, நீசத்தை அடைந்து நிற்க, சுக்கிரனும் மூடத்தை அடைந்திருக்க, இராகு, கேதுக்கள் சமனாகி இவனோடு கூடினும் அல்லது நோக்கினும் இலக்கனத்தில் வியாழன் இருப்பினும் அல்லது அவனுடைய நோக்கு இருப்பினும் இவனுக்கு வாகனங்கள் இல்லை என்றவாறு.

## இருபத்து ஐந்து வயதில் நரவாகனம் பெறுபவன்

39. புகலுச்சம் நட்பாட் சிதலம் பொருந்த சுகநாதன்
சுகமுற் றெதிர்காண் புகர்சு ரர்மந் திரிபுலவன்
மகவுற் றிவகு மிச்சுதன் நரவா கனம்மிகவே
செகமெச் சிடஐந் தைந்திலே பெறுவான்
எனச்செப்பே.

(இ-ள்.) சுகஸ்தானமாகிய நான்காம் இடத்திற்கு உடைய கிரகம் உச்சம்பெற்று, நிற்க, அல்லது நட்பாகி உச்சங்களில் இருக்க, நான்காம் இடத்திற்கு உடையவன் பார்வை இருப்பினும் அல்லது சுக்கிரன் நான்காம் இடத்தைப் பார்க்கிலும் வியாழன், புதன் இவர்கள் இலக்கனத்தில் இருப்பினும் இருபத்து ஐந்து வயதில் நரவாகனம் பெறுவான் என்றவாறு.

### முப்பத்து இரண்டு வயதில் நரவாகனம்

40. செப்பும் கதிரவன் வாகனம் சேரவா கனநாதன்
நட்பாட்சி உச்சம் பெற்றிவை நனிசேர் புகர்நோக்க
பொன்றிதன் மானே! சசிசுபம் எய்த இச்சுதனும்
முப்பான் ரெண்டினில் ஏறுவன் நரவா
கனம்உரையே!

(இ-ள்.) வாகனஸ்தானமாகிய நான்காம் இடத்தில் சூரியன் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று நிற்க, அவனைச் சுக்கிரன் வலிபெற்று நோக்கி, நான்காமிடத்திற்கு அதிபதி நட்பு, ஆட்சி, உச்சங்களில் இருக்க, அவனைச் சுக்கிரன் வலிபெற்று நோக்க, சந்திரன் தேறி, சுபஸ்தானத்தில் இருக்கப் பிறந்தவன் முப்பத்து இரண்டு வயதில் நரவாகனம் ஏறுவான் என்றவாறு.

### இருபத்து இரண்டு வயதிற்கு மேல் நரவாகனம்

41. முனியும் தொழிலிறை தன்னொடு நாலாதி
பன்முறையாய்
நனிஎய் திடத்துங் காங்கிசம் நணுகப் பெரும்புலவன்
பனிஎய் மதுநல னாகிரு பதினோ டிரண்டதின்மேல்
நனிஎய் திடுநர வாகன மெனநீர் நவில்நலமே!

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு அதிபதியும் நான்காம் இடத்திற்கு அதிபதியும் கூடி சுபாங்கிசம் பெற்று நிற்க, புதனும் சந்திரனும் சுபஸ்தானங்களில் இருக்க, இவனுக்கு இருபத்து இரண்டு வயதிற்குமேல் நரவாகனம் உண்டு என்றவாறு.

### பன்னிரண்டாம் வயதில் நரவாகனம்

42. நலமாகியநாலாமிடம் இலாபாதிபன்மருவ
பலமாகியசுக நாயகன் இலாபத்தானம்பெறவே
நலவார் மதிநல மாமெனில் நயனம் பன்னிரண்டில்
பலமாகியநர வாகனம் பெறுவான் எனமொழியே!

(இ-ள்.) நான்காமிடத்தில் பதினோராம் இடத்திற்கு அதிபதி இருக்க, நான்காம் இடத்திற்கு உடையவன் வலிமைபெற்று பதினோராம் இடத்தில் இருக்க, சந்திரனும் வளர்பிறையாகி, சுபஸ்தானங்களில் இருக்க, இவன் பன்னிரண்டாம் வயதில் நரவாகனம் பெறுவான் என்றவாறு.

நான்காம் பாவம் முற்றும்

## *ஐந்தாம் பாவம்*

### *புத்திரர் இன்மை*

*43.* மொழியஞ் சினில்குறை வன்சனி யுடன்கூ
டினுமுறையின்
இழியும் சனிமனை எய்தினும் சனிமாந்
தியும்இதனை
அழியும் படியாய் நோக்கினும் ஐந்தாம்
இடத்திபன்
குளிகன் தனையுற நோக்கினும் சிசுவில்
லெனக்கூறே!

(இ-ள்.) ஐந்தாமிடம் 'பூர்வ புண்ணிய ஸ்தானம்' என்றும் 'புத்திர ஸ்தானம்' என்றும் 'மனது' என்றும் சொல்லப்படும். இந்த ஐந்தாமிடத்திற்கு உடைய கிரகமானது சனியுடனே கூடினும் அல்லது சனியினுடைய சேத்திரங்களில் இருந்தாலும் அல்லது சனியும் குளிகனும் இந்த ஐந்தாம் இடத்தைப் பார்த்தாலும் அல்லது ஐந்தாம் இடத்திற்கு உடையவன் குளிகனுடனே கூடினும் புத்திர சந்தானம் இல்லை என்றவாறு.

## தத்துப்புத்திரன்

44. கூறஞ் சின்தா னம்சுபர் குறுகைந் தினில்நாதன்
வீறில் வியத்திசை யவ்வுத யாதி பன்தானும்
வீறின்றி அத்தலம் மேய தச்சு தன்னிதனில்
தேறும் பிடசுந் தானநற் சிசுவாம் எனப்புகலே

(இ-ள்.) புத்திரத் தானமாகிய ஐந்தாம் இடத்தில் சுபக்கிரகம் இருக்க, அந்த ஐந்தாமிடம் உடைய கோள் வியத்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் நிற்க, சென்ம இலக்கினாதிபதி, க்ஷீரண, மூட, நீசனாகி இனத்தானங்களாகிய மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க இவனுக்குப் புத்திரர் இல்லாமல் தத்துப்புத்திரன் உண்டாம் என்றவாறு.

## அதிக புத்திரர்

45. புகழும் குருபுதன் வெள்ளியில் சிசுத்தானத்தைப்
பொருந்தி
மிகநின் றிடத்தான் அதிபன் இக்கோ ளுடன்கூடிச்
சுகமொன் றினில்வலி பெற்றுயிர் சுகத்தான்கேந்
திரகோண
தகரின் றிடில்அடமு லின்றிய மகப்பே றெனச்சாற்றே.

(இ-ள்.) இந்தப் புத்திர ஸ்தானத்தில் குரு, புதன், வெள்ளி இவர்களில் ஒருவர் இருக்க, இந்த ஐந்தாம் இடம் உடைய கோள் சுபஸ்தானங்களில் சுபக்கோள்களுடனே கூடி வலிபெற்று இருக்க, அந்தத்தானம் சென்ம இலக்கனமாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திரங்களிலும் திரிகோணமாகிய உதயம், ஐந்து, ஒன்பது ஆகிய இடங்களில் இருக்கினும் இவனுக்கு அநேக புத்திரர் உண்டாம் என்றவாறு.

## ஆண் மக்கள், பெண் மக்கள்

46. சாற்றைந் தினில்நா தன்புகர் சசியோ டுடனுறினும்
சீற்றம்பயில் பெண்ணோ ரைகள்அங் கிஷங்கள்
பெண்ணெய்தில்
ஏற்றமுறு பெண்ணா மெனினும்ஆ ணோரை
அங்கிசமும்
சாற்றும் படிஆ ணாமெனில் ஆண்பெண்
எனத்தக்கோர்

(இ-ள்.) புத்திரத் தானமாகிய ஐந்தாம் இடத்திற்கு உடைய கோள் சுக்கிரனுடனும் சந்திரனுடனும் கூடி இருப்பினும் பெண் ஓரையும் பெண் அங்கிசங்களுமாகி நிற்கில், பெண்மக்கள் அதிகம் என்பது. ஆண் ஓரையும் ஆண் அங்கிசங்களுமாகி நிற்கில், ஆண்மக்கள் அதிகம் என்பது. இதுவெல்லாம் ஓரைகளும் நவாம்சங்களும் நிதானித்துச் சொல்வது என்றவாறு.

47, தக்கோர் புகழ்இராகு சிகிதான் ஆதி பதியுடனே
புக்கார் எனினும் சந்திரன்பொன் பார்வை
யிலையெனினும்
இக்கார் முனைபர சாதக னெனவேச் சழிவார்கள்
மிக்கார்கள் கண்ணுறு மாயினும் விள்ளும்
அச்சுதனே!

(இ-ள்.) புத்திரத்தானாதிபதியுடனே இராகு, கேதுக்கள் கூடினும், சந்திர இலக்கனத்தை வியாழன், வெள்ளி, புதன் இவர்கள் நோக்காவிடினும், இவனுக்குப் பரசாதகனான பிள்ளை உண்டாம். சுபக்கிரகங்கள் பார்வை உண்டாகில் குருபுத்திரர் உண்டாம் என்றவாறு.

## முப்பத்து இரண்டு வயதிற்குமேல் குழந்தை பாக்கியம்

48. விள்ளும் மகத்தா னங்குரு மேவி தன்கேந்திரம்
தெள்ளும் பிருகே அச்சுதத் தானா பவனுடனே
கொள்ளும் இலக்கன நாயகன் கூடச் சமன்காணில்
வெள்ளும் வயதெண் நான்கினில் மகவெய்
திடுவனனே.

(இ-ள்.) புத்திரத்தானமாகிய ஐந்தாமிடம் வியாழன் இருக்க, அந்த வியாழனின் கேந்திரங்களில் சுக்கிரன் நிற்க, புத்திரத் தானாதிபதியுடனே, சென்ம இலக்கனத்திற்கு அதிபதியான கிரகம் கூட அல்லது சமஸ்தானங்களில் நோக்கம் பெற, இவனுக்கு முப்பத்து இரண்டு வயதிற்குமேல் புத்திர சந்தானம் உண்டாம் என்றவாறு.

## இருபத்தாறு வயதிற்குமேல் குழந்தை பாக்கியம்

49. எண்ணுமைந் தின்நாதன் கேந்திர மெய்தி
அக்குருவை
உண்ணும் சுபர்நோக் கெய்திட உருமே லிருபத்தாம்
எண்ணும் பருவத் தெய்திடும் மகவென்
னவிசைத்தார்
அன்னப் பயில்நடை மின்னிடை அயில்தேர்
விழிமயிலே!

(இ-ள்.) அன்னம் போன்ற நடையினையும் மின்னலைப் போன்ற இடையையும் வேலினை ஒத்த கூரிய விழிகளையும் மயிலின் சாயலையும் கொண்ட பெண்ணே! புத்திரத்தானாதிபன் கேந்திரங்களாகிய உதயம், நான்கு, ஏழு, பத்தும் ஆகிய இவ்விடங்களில் ஏதேனும் ஒரு தானத்தில் இருக்க, புத்திரக் காரகனாகிய வியாழனைச் சுபக்கோள் நோக்கில், இவனுக்கு இருபத்தாறு வயதிற்குமேல் புத்திர சந்தானம் உண்டாம் என்றவாறு.

## முப்பத்து இரண்டு வயதிற்கு மேல் குழந்தைகளுக்குத் துன்பம்

50. அருளைந் திடம்இரா குப்புக அந்தா திபன்தானும்
மருளும் பவருடன் கூடிடப் பொன்னன்நீ சத்தடைய
தெருளும் வயதெண் நான்கினில் சிறுவர்க்
கவமிருத்து
இருளும் பிணியடை யும்மர ணமுமென்
றியம்புகவே.

(இ-ள்.) புத்திர ஸ்தானமாகிய ஐந்தாம் இடத்தில் இராகு இருக்க, இந்த ஐந்தாம் இடத்திற்கு உடைய கோள் பாவ, நீச, மூட, க்ஷீரணருடன் கூடி இருக்க, புத்திரக்காரகனாகிய வியாழன் நீசத்தையடைய, இவனுடைய, முப்பத்து இரண்டு வயதிற்கு மேல், இவனுடைய புத்திரருக்கு அவமிருத்தும் பிணியும் பீடையும் துர்மரணமும் உண்டாம் என்றவாறு.

## புத்திரர் அழிவு

51. இயம்பும் குருவிற் கைந்திட மிருபா வர்களெய்த
நயம்பொங்கு இலக்கனத் தைந்திட நலிபாவர்
நண்ணுகையில்
தியம்பும் இருபத் தாறி ருந்தே ளிருபத்தெட்
டயம்பும் வயதொண் நான்கினில் அழியும்
புதல்வர்களே.

(இ-ள்) புத்திரக் காரகனாகிய வியாழனுக்கு ஐந்தாம் இடத்தில் பாவக்கிரகங்கள் இருக்க, செனன இலக்கனத்திற்கு ஐந்தாம் இடத்தில் பாவக்கிரகங்கள் இருக்கில், இவனுக்கு இருபத்து ஆறு, இருபத்து எட்டு, முப்பத்து இரண்டில் புத்திரர் அழிவர் என்றவாறு.

## புத்திர சந்தானம்

52. அழிவான் குளிகன் இலக்கன முறநா தன்நீசம்
பழிபா தகரிடம் எய்திட வயதோர் பதினைந்தில்
அழிவாம் சுதர்தம் துர்ப்பல மிகுநற் பலனோரத்
தெளிவாம் படிதவ றாதிவை திண்ணம்
பலன்செப்பே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்தில் குளிகன் இருக்க, சென்ம இலக்கனாதிபதி, நீச ஸ்தானத்தில் இருக்க அல்லது பாவக்கிரகங்களுடனே கூட புத்திரர்களுக்குத் தீய பலன்கள் உண்டாகும். நற்பலன்களை மற்ற கிரகங்களின் பலன்களைத் தெளிவாக அறிந்து கூறவேண்டும் என்றவாறு.

## இருபத்தொரு வயதிற்குமேல் குழந்தை பாக்கியம்

53. செப்பும் மகத்தா னாதிபன் நீசத் தலம்சேரில்
ஒப்பந் தருபவக் கோளுடன் நான்கா றிடம்மேவ
கர்ப்பந் தருமத லைகளுக் கெடுதியாம் எழுமூன்றில்
நற்பொன் றியசுபர் நோக்குறில் நலமென்
றிவைநவிலே.

(இ-ள்.) புத்திரத் தானாதிபன் நீசத்தில் இருந்தாலும் அல்லது பாவக் கோள்களுடன் கூடி, நான்காமிடத்தில் அல்லது ஆறாம் இடத்தில் நின்றாலும் புத்திரர்களுக்குக் கெடுதி உண்டாகும். இவ்விடங்களைச் சுபக்கோள்கள் நோக்க, இருபத்தொரு வயதிற்குமேல் புத்திர சந்தானம் உண்டாகும் என்றவாறு.

## புத்திர நாசம்

54. நவிலோ தயம்பனி ரெண்டினில் லுடுநா யகனனைய
குவிமா மதிக்கெட் டாமிடக் குருதே வதையதிபன்
புவனோ டுசையோ கிக்கினும் பார்வை
அகப்படினும்
நலமே சுதன்மிர்த்திக் கிடமென ஓதுவர் அறிவோரே.

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்குப் பன்னிரண்டாம் இடத்தில் சந்திரன் நிற்க, சந்திர இலக்கனத்திற்கு அட்டமத்தில் வியாழன் இருக்க, ஐந்தாமிடத்திற்கு உடைய கோள் பாவர்களுடனே கூடி இருக்க, அல்லது பாவக்கோள்களின் பார்வைப் படினும் புத்திரநாசம் சம்பவிக்கும் என்றவாறு.

### பத்துப் பிள்ளைகளைப் பெறுபவன்

55. ஓதும் சிசுமன் னுச்சம் துர்லக் கனநாதன்
நீதம் பெறநேர் நோக்கி னும்சிசு காரகன்தான்
போதம் பலசுப வர்க்கம் துரமா கில்புதல்வன்
கோதன் றியமீ ரைந்தும் குபேரன் எனக்கூறே.

*(இ-ள்.)* புத்திரத் தானமாகிய ஐந்தாமிடத்திற்கு உடைய கோள் உச்சம் பெற்று இருக்க, செனன இலக்கனத்திற்கு உடைய கோள் இவனைப் பார்க்க, புத்திரக் காரகனாகிய வியாழன் சுபவர்க்கம் பெற்று நிற்கில், இவன் பத்துப் புத்திரர்களுக்குப் பிதாவாவான் என்றவாறு.

### அதிக புத்திரர்களைப் பெறுபவன்

56. கூறும் சிசுஒன் பானிடம் குருவெய் திடக்கூட
தேரும் சுபஉச் சாங்கிசம் சுபாங்கி சந்திரமாம்
நாரி எனும்தா ராதிபன் கன்மத் தலமுற்றால்
தேரும் சிறுவர்கள் தான்பல செனிக்கும் தருபலனே.

*(இ-ள்.)* புத்திரத் தானமாகிய ஐந்தாம் இடம், பாக்கியத் தானமாகிய ஒன்பதாம் இடம், இவைகளில் ஒரு தானத்தில் வியாழன் இருக்க, இவன் இருக்கும் அங்கிசம் நட்பு, ஆட்சி, உச்சங்களில் இருக்கில், களத்திரத் தானமாகிய ஏழாமிடதச்திற்கு உடைய கோள் கர்மத்தானமாகிய பத்தாம் இடத்தில் இருக்க இவனுக்குப் புத்திரர் அநேகம் பேர் உண்டாம என்றவாறு.

## ஒன்பது பிள்ளைகள்

57. பலமாம் மதியுச் சந்தனில் விப்பிரன் பரிவுறவே
நலமா கியதன் நாயகன் தானும் பொருந்திடவே
பலமாம் பாக்கிய நாதனும் பாக்கியம்
தனைப்பெறினும்
நலமாம் தலமுறில் மேற்சுதன் ஒன்பான் எனநாடே.

(இ-ள்.) புத்திரக் காரகனாகிய வியாழன் கற்கடகத்தில் ஐந்தாம் பாகையில் இருக்க, பாக்கியத் தானமாகிய ஒன்பதாம் இடத்திற்கு உடையகோள் ஒன்பதாம் இடத்தில் இருக்கினும் அல்லது சுபஸ்தானங்களில் இருக்கினும் இவனுக்கு ஒன்பது புத்திரர் உண்டாம் என்றவாறு.

## எட்டுப் பிள்ளைகள்

58. நாடும் சுதபாக் கியங்களில் பிரகஸ் பதிநலியா
துடரொன் றயசுத நாயகன் வலிபெற் றுறையுகினும்
நாடும் தலமுறி னும்மத நாயகன் தொழிற்நன்னில்
பீடும் பெறுமக வென்மர்பிறப்பார் எனப்பேசே.

(இ-ள்.) புத்திரத் தானத்திலாவது ஐந்தாமிடத்திலாவது பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திலாவது வியாழன் வலி பெற்றிருக்க, புத்திரத்தானாதிபன் வலி பெற்றிருக்க, புத்திரத்தானாதிபன் வலிபெற்று சென்ம இலக்கனாதி பனையாவது புத்திரகாரகனையாவது பார்க்க, ஏழாமிடம் உடையகோள் பத்தாமிடத்தில் இருக்க இவனுக்கு எட்டுப் புத்திரர்கள் உண்டாம் என்றவாறு.

## ஒன்பது புத்திரர்கள்

59. பேசும் மகத்தா னத்தினுக் கைந்தினில் சனிபேரில்
தேசொன்ப நாதன் தன்னொடு சுதநா யகன்சேர
மாசின் றயமக ஒன்பது வாய்க்கும் அதிலிரண்டு
நாசம் தருகர்ப்ப மெமனின் லோகம் புகுநல்லாய்!

(இ-ள்.) புத்திரத் தானமாகிய ஐந்தாமிடத்திற்கு ஐந்தாம் இடமான ஒன்பதாம் இடத்தில் சனி நிற்க, அந்த ஒன்பதாம் இடத்திற்கு உடைய கிரகத்துடனே, அத்தானாதிபன் கூடி வலிமை பெற்று நிற்க, சுபவானாகி, சுபத்தானங்களில் நின்று பார்க்க, இவனுக்கு ஒன்பது புத்திரர்கள் உண்டாம். அதில் ஒன்பதாம் கர்ப்பம் விலகிப்போகும் என்றவாறு.

## கர்ப்பம் அழிவும் புத்திரர் பிறப்பும்

60. நலமாம் தனத்திறை ஐந்தினில் நணுகா
தவர்க்கைந்தில்
பலமாசிசுநா தன்புகப் பெருங்கர்ப் பம்அழிவாம்
சிலகர்ப் பமதற் பாயுசு வெனும்பெண் கள்சனிக்கும்
உலைகர்ப் பமிரண் டாஞ்சுதர்மூன்றாம்எனஉரையே.

(இ-ள்.) தனத்தானமாகிய இரண்டாமிடத்திற்கு உடையவன் ஐந்தாம் இடத்தில் இருக்க, இதற்கு ஐந்தாம் இடத்தில் புத்திரத்தானாதிபன் வலிபெற்றுத் தேறிநிற்க, இவனுக்கு ஏழு கர்ப்பம் அழிவாகும். இதில் சில கர்ப்பம் அற்பாயுளாம். பின்பு மூன்று பெண்களும் இரண்டு ஆண் புத்திரரும் சனிக்கும் என்று சொல்லியது என்றவாறு.

## ஒரு புத்திரன் உடையவன்

61. உரையும் உதயத் தைந்தினில் பொன்னுற்
றதற்கைந்தில்
திரைக்கும் சனிநின் றேதொழிற் கைந்தாம்
இடம்இராகு
புரக்கும் எனில்புத் திரர்அ னேகம் எனப்புகன்றார்
விரைக்காந் தளமா கோதிம் நடையெய்ய
மெல்லியலே!

(இ-ள்.) மணம் நிறைந்த காந்தளின் அழகான மலர்களை ஒத்த விரல்களால் கூந்தலைக் கோதி, மெல்லிய நடைபயிலும் பெண்ணே! சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாம் இடத்தில் வியாழன் இருக்க, இதற்கு ஐந்தாம் இடத்தில் சனி நிற்க, பத்தாம் இடத்திற்கு ஐந்தாம் இடத்தில் இராகு இருக்க, இவனுக்கு ஏக புத்திரனாம் என்றவாறு.

## கசகேசரி யோகம்

62. எய்தும் சுதன்தனை பாவர்கள் இடுக்கண் புரிதீமை
செய்தொன் றிலரெனி னும்மதி கேந்திரங் களிற்சீவன்
நெய்தும் சுபர்வலி யுற்றுறில் யானைக் குள்நவிற
வையம் புகழ்சிங் கக்குறள் மருவும் படியெனுமே.

(இ-ள்.) பாவக்கிரகங்களாகிய ஆதித்தன், செவ்வாய், சனி, இராகு, கேது அமரபட்சத்துச் சந்திரன் இவர்கள் முதலான பேர்களால் ஏற்படுகின்ற தோஷங்களெல்லாம் கசகேசரியோக சம்பந்தம் உண்டாகில் ஆயிரம், பதினாயிரம் யானைக் கூட்டங்களுக்கு நடுவே ஒரு சிங்கக் கன்று பாய்ந்தாற்போல நீங்கும் என்பதாம். சந்திர இலக்கனத்திற்குக் கேந்திரத் தானங்களில் வியாழன் இருக்க இது கசகேசரியோகம் என்றவாறு.

## பாக்கிய திசைகள்

63. எனபஞ் சமத்தே மாமிடம் எய்தப் புகருடனே
கனதங்கும் ஏழிடம் செங்கதிர்க் கதுவில்
பெருவின்றான்
மனமஞ் சதாகச் சிசுவலு வெய்தும் நல்வாழ்வு
தனதுங் கமுமாம் இத்திசை தனிலென் றுவமூத்தே.

(இ-ள்.) புத்திரத்தானமாகிய ஐந்தாமிடத்திற்கு ஏழாமிடத்தில் சுக்கிரன் நிற்க, அந்தச் சுக்கிரன் இருந்த இராசிக்கு ஏழாமிடத்தில் சூரியன் நிற்க, இவனுக்கு இந்தச் சூரியனுடைய மகாதிசையிலும் சுக்கிரனுடைய மகாதிசையிலும் அல்லது இவர்கள் புசிப்புகளிலும் புத்திர பாக்கியமும் அஷ்ட ஐசுவர்யங்களும் உண்டாம் என்றவாறு.

## அற்பாயுள் உடைய புத்திரர்

64. வழுத்தும் மகபதி பாவர்கள் வந்தெய் தப்பதியை
அழுத்தும் படிபவர் கண்டிடச் சுதனாம்
தனைத்தாமல்
முறித்தெய்து கண்ணுரு மாயினும் உதயா
திபன்வியத்தில்
பழிப்பான் றிடிலிவன் மைந்தர்கள் அற்பா
யுள்படுமே.

(இ-ள்.) புத்திரத் தானமாகிய ஐந்தாமிடத்தில் பாவக்கோள்கள் இருக்க, அல்லது அந்த ஐந்தாமிடத்தைப் பாவக்கோள் நோக்க, புத்திரத் தானாதிபதியும் புத்திரக்காரகனையும் பாவக்கோள் கூடினும், பொல்லாதவர் நோக்கினும் சென்ம இலக்கனாதிபன் வியத்தானமாக பன்னிரண்டாம் இடத்தில் இருக்கினும் இவனுடைய புத்திரருக்கு அற்பாயுளாம் என்றவாறு.

ஐந்தாம் பாவம் முற்றிற்று

# ஆறாம் பாவம்

## சத்துருவை வெல்பவன்

65. ஆயு மரிபுத் தானம் தனிலவனைப் பவக்கிரகம்
ஏயுமா புதனா தன்மிகு நீசத் தமனத்தில்
ஆயும் இலக்க னாதி பன்வலி பெற்றிருந்தே
காய்கின்ற சத்துரு வைசெயித் திடுகா ளையதாமே.

(இ-ள்.) ஆறாமிடம் 'அரிபுத்தானம்' என்றும் 'தாயாதித் தானம்' என்றும் 'ரோகத்தானம்' என்றும் 'சோரத்தானம்' என்றும் சொல்லப்படும். ஆகையால் இந்த ஆறாமிடத்தில் பாவக்கோள்கள் இருக்க, ஆறாமிடம் உடையகோள் நீச, க்ஷீரண, அஸ்தமனம் அடைய, இலக்கனாதிபதி வலிபெற்றுச் சுபரோடுங் கூடி, சுபராசிகளிலும் சுபஸ்தானங்களிலும் இருக்கில் இவன் சத்துருவைச் செயித்து வாழ்வான் என்றவாறு.

## நோய் அதிகம் இல்லாதவன்

66. ஆஞ்சத் துருத்தா னாதிபன் ஈன மதடைந்தே
வாஞ்சட் டட்டம திரையொடு கர்மா
திபன்வலிற்போ
நேஞ்சப் பதிகாணப் பெறினும் ஓரை நல்லாங்கிசம்
வாஞ்சைப் பதிபுகு வாயினு மருவான பிணியவனே.

(இ-ள்.) ஆறாமிடத்திற்கு உடையகோள் நீச, க்ஷீரண, அஸ்தமனமடைய, சென்ம இலக்கனாதிபதி வலிபெற்று நிற்க, ஆறாமிடம் உடையகோள் அஷ்டாதிபரோடும் கூட, கர்மத்தானமாகிய பத்தாம் இடத்திற்கு உடையகோள் வலிபெற்றுத் தேறி நிற்கினும், இவனுக்கு நிரம்பவும் வியாதிபயம் இல்லை என்றவாறு.

## பாம்பினால் பயம்

67. மருவும் இலக்கன நாயகன் திரரா சியில்மருவ
சறுவ மிதன்கேந் திரங்களில் இராகு தழுவிடவே
தெருளும் மதன்கேந் திரமுச் சசொட்ச கேந்திரத்தில்
பரவும் பவரெனில் சர்ப்பம் இருக்கப்
பவம்பலிக்கும்.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் திரராசிகளில் இருக்க, இதன் கேந்திரமான உதயம், நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் ஒன்றில் இராகு இருக்க, இதன் கேந்திரம் ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களி ஒன்றில் சந்திரன் இருக்க, இந்தச் சந்திரனுக்கு ஒன்று, நான்கு, எழு, பத்து ஆகிய இடங்களில் ஒன்றில் பாவக்கோள் இருக்க அல்லது உச்ச வீட்டிலாவது ஆட்சி வீட்டிலாவது பாவக்கோள் இருக்க, இவனுக்குச் சர்ப்பங்களால் பயம் உண்டாம் என்றவாறு.

## நீரில் கண்டம்

68. பயமாம் சலரா சித்தலம் பற்றப் பனிமதிதான்
மயமாகும் இத்தல நாயகன் சலராசி யில்பண்ண
நயமாம் இலக்கன நாயக னுடகூ டினும்நாட்ட
தயவாக உற்றிடி னும்சுதன் தண்ணீர் பயம்தருமே.

(இ-ள்.) சல இராசிகளில் சந்திரன் இருக்க, இராசி அதிபனும் சல இராசிகளில் இருக்க, சென்ம இலக்கனாதிபன் இவர்களுடனே கூட அல்லது இவர்கள் பார்வையிடினும் இவன் தண்ணீரிலே விழுந்திடுவான் என்றவாறு அல்லது தண்ணீரில் பயம் உண்டாம் என்றவாறு.

## அக்கினியால் பயம்

69. தகுமாறான் அட்டம நாயகன் தனபாக் கியம்மருவ
பகுமந்தன் இலக்க னாதியோ டுறுமென் னினும்
மிக்கோர்
மகவோ ரையில்நோக் காரெனில் வருசேயும்
அக்கினியில்
புகுவான் எனமொழி வாரறி புலமைத் திரவல்லோர்.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடம் உடைய கோளும் எட்டாமிடம் உடைய கோளும் இரண்டாமிடத்தில் அல்லது ஒன்பதாம் இடத்தில் இருக்க, அல்லது சென்ம இலக்கனாதிபதியோடும் கூடி சனியன் கேந்திரங்களில் இருக்கினும் சென்ம இலக்கனத்தைச் சுபக்கிரகம் பார்க்கவில்லை எனினும் அக்கினியிலே விழுந்து விடுவான் என்றவாறு.

## செல்வன், பொய்கை, சோலை அமைப்பவன்

70. திறமாம் சுபசம் பந்தம துறஉச் சமத்திறைவன்
பெறலா றிறைஇதற் காறிடம் பெறுமே லதினாதன்
துறவே இதற்சமா னிவன்பொழில் வாவி உற்பத்தி
பெறலா திகமே பெற்றிடும் பிரதாபி
பொற்கொடியே!

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் சுபக்கிரக சம்பந்தம் பெற்று இருக்க, அல்லது உச்சம் பெற்று இருக்க, அந்த உச்ச இராசிக்கு உடையகோள் சுபஸ்தானங்களில் இருக்க, இலக்கனாதிபதிக்கு ஆறாமிடத்தில் அவ்விடத்திற்கு அதிபதி இருக்க, இவன் இருந்த இராசி, இலக்கனாதிபதியோடு உறவாக இருக்க, இவன் சீமானாய், வியாபாரம் செய்பவனாகப் பொழில்களும் வாவிகளும் சமைத்து வாழ்வான் என்றவாறு.

## நீங்காத நோயுள்ளவன்

71. கொடியோர்க ளவ்வா றில்புக ஆறா திபன்குலைந்தே
தொடுபாவி கள்சமனா யுறில்துர்க் கோள்கள்
கண்டெய்தில்
வடிவேல் விழிமட வாய்மரு மாறா மல்வியாதி
படுவாதை யிற்சதா காலமும் அயனார் விதிப்படியே.

(இ-ள்.) திறம்பட வடிக்கப்பட்ட வேல் போன்ற கூரிய விழிகளையுடைய பெண்ணே! சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில் பாவக்கோள்கள் இருக்க, இந்த ஆறாம் இடத்திற்கு உடைய கோள் பாவ, க்ஷீரண, நீச, மூடனாகி மெலிந்து, பாவக்கோள் சம்பந்தமாகி நிற்கினும், பார்வைக்குள்ளாகப் படினும், பிரமனின் விதிப்படி, இவன் மாறா வியாதியினால் சதாகாலமும் வருத்தப்படுவான் என்றவாறு.

## ஆறு, பன்னிரண்டு வயதில் பிணியாளன்

72. விதியா குமிகா ரோகஸ் தலமாம் காரகன்மேல்
விதிநா யகனெட் டாமிடம் எய்தப் படுபுதல்வன்
மதிவா ணுதல்மயி லேவய திருமூன்றும் ஈராறும்
வியாதியால் வரும்பிணி நோய்சுர முறுவான்
எனவிளம்பே!

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ரோகஸ்தானமாகிய ஆறாம் இடத்தில் செவ்வாய் இருக்க, இந்த ஆறாம் இடத்திற்கு உடைய கோள் எட்டாமிடத்தில் இருக்கில், இவனுக்கு ஆறு வயதிலும், பன்னிரண்டு வயதிலும் வெதுப்பினாலும், வேண்டாதார் பீடையினாலும் விதனப்படுவான் என்றவாறு.

### *சயரோகம் உடையவன்*

73. விளம்பா றிடம்சுபர் சேர்ந்திட விதனகேந் திரமந்தன்
தளம்பாது நல்லலக் னாதிபன் நீச தலம்சேர
உளம்பா விடுசய ரோகம் துறுவா னெனஉரைத்தார்
விளம்பா வியவிரு பானோ டோறாறெய் தியவயதில்

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில் சுபக்கிரகம் இருக்க, இதற்குக் கேந்திரமாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் ஒன்றில் சனி இருக்க, இலக்கனாதிபன், நீச, மூட, க்ஷீணனாகி மெலிந்து பலயீனனாக இருக்கில், இவனுக்கு உபத்திரவம் (துன்பம்) இருபத்து ஆறாம் வயதில் சயரோகம் உண்டாம் என்றவாறு.

### *குன்ம ரோகம் உடையவன்*

74. எய்யும் பவரோ கத்தலம் இமையோர் குருமேவ
செய்யும் இனிஇதன் கேந்திரம் சேர சசிசமனுற்
றுய்யும் படியுறி னும்வய திருபான் இரண்டினிலும்
நய்யும் இருபத் தேழினும் நலிகுணம் நோய்நவிலே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடத்தில் வியாழன் இருக்க, இதற்குக் கேந்திரத் தானத்தில் சந்திரன் நிற்குமாகிலும் அல்லது இவனை நோக்குமாயினும் இவனுக்கு இருபத்து இரண்டு வயதிலாவது இருபத்து ஏழாம் வயதிலாவது குன்மரோகம் உண்டாம் என்றவாறு.

## வயிற்று நோய் உடையவன்

75. நவிலும் வியரா சிக்கிறை ரோகத் தலம்நண்ண
குவிலும் வியரா கித்தலம் ரோகா திபன்குறுக
தவிலும் இவையான் டொன்பதி னொருமூன்
றதிவயதில்
கவலும் பிணிஉத ரந்தனில் நோயென் பதுகழறே.

(இ-ள்.) வியராசியாகிய பன்னிரண்டாம் இடத்திற்கு உடையவன், ரோகஸ்தானமாகிய ஆறாம் இடத்தில் இருக்க, ஆறாமிடத்திற்கு உடைய கோள் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, ஒன்பது வயதிலாவது, பதினொரு வயதிலாவது பதிமூன்று வயதிலாவது வயிற்று நோவினால் நலிவு உண்டாகும் என்றவாறு.

## பல நோய்களை உடையவன்

76. கன்று மரிபுத் தானமதனில் கனகன் கலந்திடவே
குன்றும் மதியதி னோடு ரோகா திபன்கூட
உன்றும் வயதொரு பானுடன் ஐந்தெய் தியுறுமபேர்
தன்றும் பிணிரத் தப்பிர மியகுட் டமதாமே.

(இ-ள்.) ஆறாம் இடத்தில் வியாழன் இருக்க, அவனுடனே சந்திரனும், ஆறாம் இடமுடைய கோளும் கூட, பதினைந்தாம் வயதில் இரத்தப் பிரமியம், குட்டம் ஆகிய பிணிகள் உண்டாகும் என்றவாறு.

## வாத சுரோணித நோய் உடையவன்

77. தானெய்தில் இலக்க னாதிபன் எட்டாம் இடம்சார
சூனெய்தும் எட்டிரை தன்னொடு தன்னாற்
கிடுமெனினும்
வானெய்த எட்டினை நோக்கினும் ஆறாம் வயதினிலே
தானெய் தியவா தசுரோ ணிதமாம் பிணிசார்பே.

(இ-ள்.) ஜென்ம இலக்கனாதிபன் அஷ்டமத்தில் இருக்க, அஷ்டமாதிபனுடன் சனி கூடி இருக்கினும் அல்லது அஷ்டமத்தானத்தைச் சனி பார்க்கினும் ஆறாம் வயதில் வாத சுரோணித ரோகம் உண்டாம் என்றவாறு.

## மிருகங்களால் கண்டம் உடையவன்

78. சாரெட் டிறைஆ றாமிடம் சார்ந்தே வியநாதன்
வாருற்ற இலக்கனம் எய்திட மதிகாரம்
அங்கிஷத்தில்
சேர்பொழு திக்கும் சுதன்வய தெட்டி னிற்றியங்கும்
பீர்த்தரு மிருகங் களினால் நலிவெந் பதுபேசே!

என்பது.

(இ-ள்.) ஜென்ம இலக்கனத்திற்கு அஷ்டமாதிபன் ஆறாம் இடத்தில் இருக்க, வியத்தானமாகிய பன்னிரண்டாம் இடத்திற்கு உடையவன், ஜென்ம இலக்கனத்தில் இருக்க, சந்திரனுக்கு ஆறாம் அங்கிசமாகில் அவனுக்கு ஆறு வயதிலாதல், எட்டு வயதிலாதல் மிருகங்களினால் பயம் உண்டாம் என்றவாறு.

ஆறாம் பாவம் முற்றும்

# 7. ஏழாம் பாவ பலன்

## பல மனைவியர்

79ய நவைதீரு சத்தமத் தானமதன் நாதன் உச்சமேற
அவைதானம் நல்லோர் கண்டிட சரரா
யிற்புகன்றோன்
சுபைகூர் சிசுப்பதி மேவி டச்சுபர் கள்வர்க்கம்
அவைசேர்ந் திடதாரம் பலவாம் புத்தி மக்கனமே

என்பது.

(இ-ள்.) ஏழாமிடம், 'களத்திர தானம்' என்றும், 'திருட்டித்தானம்' என்றும் சொல்லப்படும். இந்த ஏழாமிடத்திற்கு உடையவன் உச்சம் பெற்று இருக்க, அந்த ஏழாம் இடத்தைச் சுபக்கோள் நோக்க, சுக்கிரன் சரராசிகளில் இருக்க, அல்லது ஐந்தாம் இடத்தில் அல்லது சுபஇராசிகளில் சுபாங்கிசமாக இருக்க இவனுக்குத் தாரம் அநேகம் என்பது புத்தி மக்கினமாம் என்பது.

## குறையுடைய மனைவி

80 புத்திராதி இல்லா ளேகளத் திரமே ரவிப்புக்கால்
வித்தான மதினுக் குசசி சமத்திரி எனபவுமன்
நுற்றா னெனிலும் தன்களத் திரபுத்தி ராருதவார்
இத்தான மதனில் புதனால் நபுங்கிஷ திரியெனவே.

(இ-ள்.) களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்தில் சூரியன் இருந்தால், இவனுடைய களத்திரம் மலடியாம். சந்திரன் இருந்தால், சமனாகிய ஸ்ரீ என்பது. செவ்வாய் இருந்தால் பிள்ளைப் பெற்றாலும் துர்ச்சினியாம். புதன் இருந்தால் நபுங்கிசமாகிய குறை பொருந்திய ஸ்ரீ என்று சொல்வது என்றவாறு.

## ஏழாமிடத்தில் கிரகங்கள் நின்ற பலன்

81. எனும்தான மதனுக் கிரகுரு விப்பி ரத்திஎன்பார்
மனதான் சனிசத் திறீசர் களுடன்பாம் புகள்மருவில்
தினந்தோறு மிக்காய்ந் தேவசை செய்யும்
திரிசுன்னும்
நயந்தொரு சனராகுப் பணியெய் தும்மத்
ததனினிலே

என்பது.

(இ-ள்.) களத்திரத்தானமாகிய ஏழாம் இடத்தில் வியாழன் இருக்கில், பிராமண யோக்கியமுள்ள ஸ்ரீ. சனி

இருக்கில் சண்டாளத்துவம் உடையவள். இராகு, கேது இருக்கில் வசைபட்ட ஸ்ரீ என்பது. சனி, செவ்வாய், பாம்புகள் கூடி இருக்கில் வெகுவசையும் குற்றமும் பிணியும் உள்ள களத்திரமாம் என்றவாறு.

### *குழந்தையற்றவள், சிறிது காலத்திற்குப் பிறகு புத்திரன்*

*82.* மதத்தா னத்தில் தெய்சந் திரன்மருவ பனிரெண்டில்
கதப்பா வர்கள் நிற்க களத்திரநல் மகவுந்தான்
விதப்பா வர்கள்நல் லோர்களும் இத்தோ
ஷம்அகன்ற
சுதப்பெறு வாமென் பதுதுட் சத்தி வைசொல்லே.

(இ-ள்.) மதத்தானமாகிய ஏழாமிடத்தில் அமரபட்சத்துச் சந்திரன் இருக்க, பன்னிரண்டாம் இடத்தில் பாவக்கோள்கள் இருக்க, இவன் பாரி (மனைவி) மலடியாம் என்பது. இவர்களைச் சுபக்கிரகம் பார்க்கில், சிறிதுநாள் கழித்துப் புத்திரர் உண்டாம் என்றவாறு.

### இதுவுமது

*83.* சொல்லே ழிடம்சனி செய்வர் ஏழாதி பன்சனியில்
நல்லோர் களும்கா ணாவிடில் விபசாரி நாரியரேல்
இல்லாச் சுதர்பேறு நாரிய ரேல்மங் கலமிலனே
பல்லோர் களைப்புணர் பாரியாள் எனவே பகருவதே.

(இ-ள்.) ஏழாம் இடத்தில் சனி, செவ்வாய், நிற்க, இந்த ஏழாம் இடத்திற்கு உடையகோள் சனியுடைய சேத்திரங்களிலே சுபக்கோள் பார்வை இல்லாமல் இருக்க, இவனுக்கு விபசாரி, மலடி, அழிந்த கன்னி, விதவை இவர்களில் ஒருத்தி பாரியாவாள் என்றவாறு.

## நோயுடைய களத்திரம்

84. பகரும் புகர்சேய் அங்கிச முறினும் பவுமன்தன்
நிகர்கூ டினுமவன் சேத்திர நின்றோன் தன்நோக்கும்
பகரும் படியுறு மாயினும் அவன்தன் திசைநாளில்
அகலும் களத்தி ரோகம தெய்தும் படியிசையே.

(இ-ள்.) களத்திரக் காரகனாகிய சுக்கிரன், செவ்வாயினுடைய நவாம்சத்தில் இருக்கினும் அல்லது செவ்வாயுடன் கூடினும் அல்லது செவ்வாய்ப் பார்க்கினும், செவ்வாயின் கேந்திரத்தில் நிற்கினும், நோக்கம் பெறினும் அந்தச் செவ்வாய்த் திசையில் இவன் களத்திரத்திற்கு ரோகமும் நலிவும் உண்டாம் என்றவாறு.

## மனைவியின் மரணதிசை

85. இசையும் சனிஅங் கிஷந்தன்னில் எய்தச்
சனிஇல்லில்
அசைவின் றிநின்றி டி னும்அதைக் கூடி னும்பார்வை
இசையும் படிபுக ரோரிவை யென்றனு
திடுமென்னில்
வசைஎய் திடுமென்னில் தாரம் அழிவாம்
இவன்திசைக்கே.

(இ-ள்.) களத்திரக்காரகனாகிய சுக்கிரன் சனியுடனே கூடினும், சனி அங்கிசங்களில் இருக்கினும் அல்லது சனியின் க்ஷேத்திரங்களிலே இருக்கினும் அல்லது சனி, சுக்கிரனைப் பார்க்கிலும் இவர்களில் ஒருவிதமாகச் சனி உண்டாமெனில் அவனுக்கு அந்தச் சனியின் திசையில் பாரி ஈனம் என்றவாறு.

## இனிய மனைவி

86. அவன்தா ரமன்னுச் சத்தினை அனுக மதமதனில்
இவன்கார ரகநோக்கம் பேரிலிவன் இலக்கன
கேந்திரத்தில்
துவன்றே நலமுற வெள்ளி சுபாங்கினங் களில்மேவ
இவன்றா கமதே கம்சுப மனையாள் எனச்செப்பே.

(இ-ள்.) களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்திற்கு உடையகோள், உச்சத்தானம் பெற்று இருக்க, ஏழாமிடத்தைக் களத்திரக்காரகன் பார்க்க, சென்ம இலக்கனத்திற்குக் கேந்திரத்தில் சுபாங்கிஷம் பெற்று இருக்கில், இவனுக்குச் சுபமங்கை ஸ்திரிமோகம் என்று சொல்லப்படும் என்றவாறு.

## இதுவுமது

87. பேசும் புகர்சர ராசியில் அடைய பிறங்குசன்பால்
தேசதரு மதத்தா னமதுற கேந்தி ரம்நிற்கில்
வாசந்தரு நோக்கெய் திடகோ ணங்க ளில்மருவ
நேசம் பலஉதயம் பேரில் களத்திரம் நலநிகழ்த்தே.

(இ-ள்.) களத்திரக் காரகனாகிய சுக்கிரன், சரஇராசியில் இருக்க, ஏழாமிடத்தில் செவ்வாய் எய்திட அல்லது கேந்திரங்களில் நிற்க, சுபர்களின் பார்வை எய்திட, இலக்கனாதிபதி வலிபெற்று திரிகோணங்களில் இருக்க, இவனுக்குக் களத்திரம் சுபமனையாள் என்றவாறு.

## மனைவி மரணம்

88. நிகழ்த்தும் களத்திர நாயகன் நீசம் பகைமூடம்
புகழ்த்தீ யர்கள்நோக் கெய்திட மதத்தானத்
தைப்பொருந்த
தகத்தோன் றிடநோக் கெய்திட தாரங் கள்நசிக்கும்
செகத்தோர் புகழ்சுப திருட்டியும் சேரில்
சுபம்செப்பே.

(இ-ள்.) களத்திராதிபதி பகை, மூட, க்ஷீரணமாகிய பாவக்கோள்கள் நோக்கம் பெற்று இருக்க, ஏழாமிடத்தில் பாவக்கோள்கள் இருக்குமாயினும் அல்லது நோக்கு மாயினும் இவனுக்குக் களத்திர நாசங்கள் பலிக்கும் என்றவாறு.

## நோயுடைய மனைவி

89. செப்பும் பனிரெண் டெட்டினில் ஒருமூன்
றொருபதிலும்
அற்பம் தருபல வீனர்கள் அடைய புகர்நீசம்
வெப்பம் தருகோள் காண எய்திருமா லிவன்தாரம்
அற்பந் தனநா சம்பிணி ஆமென் பர்களாய்ந்தோர்.

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்திலும், எட்டாம் இடத்திலும், மூன்றாம் இடத்திலும், பத்தாம் இடத்திலும், பாவக்கோள்கள் பலவீனர்களாக இருக்க, களத்திரக் காரகனானச் சுக்கிரன் நீசத்தானம் அடைய அல்லது நீசக்கோள்களின் நோக்கம் பெறினும், இவன் பெண்சாதிக்கு சதாகாலமும் பிணி ஏற்பட்டு அதனால் செல்வம் அழியும் என்றவாறு.

## இதுவுமது

90. ஆயும் களத்திர தானத் தையடை சனியமர
நேயம் வியத்தெய் தப்புகர் பலமே பெறுமென்னில்
நேயும் களத்திரத் தால்சுக நேர்ப நேருகினும்
ஆயும் பிணியுறு மங்கையர் சுகமற் பமதாமே.

(இ-ள்.) களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்தில் சனி இருக்க, அந்தக் களத்திரத் தானாதிபன் பன்னிரண்டாம் இருக்க, சுக்கிரன் பலவானாக இருக்க, இவனுக்கு களத்திரசுகம் உண்டாகும் என்றாலும் சுகம் அற்பமாகி, இவன் பெண்சாதி மாறா வியாதி உடையவளாவாள் என்றவாறு.

## இரண்டு மனைவியர்

91. அற்ப சுகதா ராதிபன் அதர்மத் தலமணுக
அற்பம் தருவ ரோடுற மேற பதியெய்தில்
நற்பின் றியநீசம் பலர்நனி சேர மூன்றாதிபன்
நொப்பென் னுதயத் தேழிடம் முறத்தா ரமிரண்டே.

(இ-ள்.) களத்திரத்தானாதிபன் பலயீனனாகி, பொல்லாதத் தானங்களாகிய ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் இருக்க, அவனுடனே பாவக்கோள்கள் கூடியிருக்கினும், அது இவனுக்குச் சத்துரு க்ஷேத்திரமாக அல்லது களத்திராதிபன் நீசத்தானம் அடைய மூன்றாமிடத்திற்கு உடையன் சென்ம இலக்கனத்தில் இருக்க அல்லது ஏழாமிடத்தில் இருக்க, இவனுக்கு இரண்டு தாரங்கள் என்றவாறு.

## இதுவுமது

92 தாரபதி யதனிற் குசன்புகர் கேழி டம்சிகியும்
நேர்பெற இலக்கனா திபனெட் டாமி டம்நிற்கில்
ஆர்த்த தண்பார் தனிலவன் தனக்குக் குலமடந்தாய்!
தாரந்தனில் நாசம் மிகும் இரண் டென்றே
தகைசாற்றே!

(இ-ள்.) களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்தில் செவ்வாய் இருக்க, சுக்கிரனுக்கு ஏழாம் இடத்தில் கேது இருக்க, இலக்கனாதிபன் எட்டாம் இடத்தில் இருக்க, இவனுக்கு இரண்டு தாரங்கள் என்றவாறு.

## வறுமையடையும் திசை

93. சாற்றும் கதிர்புகர் ஆட்சி நட்புச்சா திபனாகி
நீற்றம் பயிலா நெட்டிடம் சேரச் சிசுவயது
போற்றும் ஓரைந் தொன்பது வயதில் புனல்தன்னில்
வீழ்த்தும் திசையப காரமும் மிகவூர்ந் தியம்புகவே.

(இ-ள்.) சென்ம லக்கனத்திற்கு இரண்டாம் டம் சுக்கிரனின் க்ஷேத்திரமாக அல்லது சுக்கிரன் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று இரண்டாமிடத்தில் இருக்க அல்லது சுக்கிரன் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று ஆறாமிடம், எட்டாமிடங்களில் இருக்கினும், இவனுக்கு ஐந்து வயதிலாவது, ஒன்பது வயதிலாவது தண்ணீரில் தத்து (கண்டம்) உண்டு என்று சொல்வது. இந்தச் சுக்கிரனின் திசையிலும் அபகாரங்களிலும் (புத்தி) வறுமை என்றவாறு.

## நீரில் கண்டம்

94. இயம்பும் சசியெட் டிற்புகர் ஓராறும் ஈராறும்
நயம்பொன் றிடுமங் காரகன் புகலக் கினத்ததிபன்
வியக்கும் படிபவர் நோக்கிடத் தண்ணீ ரினில்வீழும்
தியம்பும் வயதொரு மூன்றினும் உண்டென்
றுரைத்திடுமே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு எட்டாமிடத்திற் சந்திரன் நிற்க, ஆறாமிடத்திலாவது, எட்டாம் இடத்திலாவது செவ்வாய் இருக்க, சென்ம இலக்கனாதிபன் க்ஷீரண, மூட, நீசனாகிப் பாவக்கோளுடன் கூட அல்லது பாவக்கோள் நோக்கம் பெற்று இருக்க மூன்றாம் வயதில் தண்ணீரில் வீழ்ந்து மரிக்கும் என்றவாறு.

## நோய்கள் வரும் காலம்

95. உரகத் துடனெட் டாதிபன் உருவா யினும்காணும்
புறமுற் றிடினும் எட்டினில் புகுமா
யினும்கோணசேத்
திரமுற் றிடுமெனி னும்ஒரு பத்தெட் டிருபத்தா
றாருமித் திருபருவம் கிரந்தி யும்மே கமுமுறுமே.

(இ-ள்.) அஷ்டமாதிபதி இராகு, கேதுக்களுடன் கூடி இருக்கினும் அல்லது அஷ்டமாதிபன் இராகு, கேதுக்கள் பார்க்கினும் அல்லது சென்ம இலக்கனத்துக்குக் கேந்திர திரிகோணங்களாகிய உதயம், நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்தாம் இடங்களில் இருக்கினும், பதினெட்டு வயதிலாவது, இருபத்து ஆறாம் வயதிலாவது பிரமேகங்கள், கிரந்தி ரோகங்கள் உண்டாம் என்றவாறு.

## அரசன், அக்கினியால் கண்டம்

96. ஏகா தேசநா தன்சஷ் டியிலிருக்க சஷ்டநாதன்
வாகா கியலா பத்தல மருவப் பெறுமாகில்
பாகாகும் இன்மொழி யாய்இரு பத்தொன்
றிருபத்தைந்
தாகா வருபகை யாவழி வாகும் தனமதுமே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்குப் பதினோராம் இடத்திற்கு உடைய கோள் ஆறாம் இடத்தில் இருக்க, அல்லது ஆறாம் இடத்திற்கு உடைய கோள் பதினோராம் இடத்தில் இருக்க, இருபத்து ஒரு வயதிலாவது, இருபத்து ஐந்து வயதிலாவது கள்ளர்களால் அல்லது, அரசர்களால் அல்லது அக்கினியால் சேதம் உண்டாகும் என்றவாறு.

## தந்தையுடன் வழக்காடுபவன்

97. அதுஅஞ் சமனா தன்மிக ஆறாம் இடமணுகப்
பதியா னுடநா தன்பகை தன்னோ டுறஅங்கிசம்
உதயம் தனதிறை நின்றிட உறவு சத்துருவாய்
பிதுர்வர்த் தனைபுரி யாதிகள் புரிவான்
பயில்பின்னை.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடம் உடையகோள், ஆறாம் இடத்தில் இருக்க, அந்த ஆறாம் இடம் உடையகோள் பகைக்கிரகங்களுடனே கூட, சென்ம இலக்கனம் வியாழனின் அங்கிசமாகில், உதய இலக்கனாதிபன் பகைபெற்று இருக்கில், இவன் பிதாவுடன் சதாகாலமும் வழக்கிட்டு வசைபேசி பொருதுவான் (சண்டையிடுவான்) என்றவாறு.

## நாயினால் துன்பம் அடைபவன்

98. பயில்உ தயமன் ஆறிடம் பற்றப் பகைமன்னும்
அயில்சேர் விழியா றாமிடம் அணுகில்
தசம்பனிரெண்
டியல்கூர் வயதுறு காலையின் ஞமலிக் கடிபடுவான்
மயில்சா யலங்குயில் நேர்மொழி மடவாய்
தெரிந்தோதே.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் ஆறாமிடத்தில் இருக்க, அதனுக்கு ஆறாம் இடம் உடையகோள் அந்த ஆறாம இடத்தில் இருக்க, இவனுக்குடைய பத்து வயதிலாவது பன்னிரண்டாம் வயதிலாவது நாய்க்கடியினால் விதனம் (துன்பம்) உண்டாகும் என்பதை, வேல் போன்ற கூரிய விழிகளையும் மயிலை ஒத்த சாயலையும் குயிலின் இனிய குரலையொத்த மொழியினையும் கொண்ட பெண்ணே! எடுத்துரைப்பாயாக என்றவாறு.

### பாக்கியவான்

99. தத்தும் களத்திர நாயகன் உயர்நல் வலியுற்றே
நித்தம் பயில்மத நாயகன் வக்கிரம் திரல்மூலை
ஏத்தும் கிரகம் தன்னொடு பாக்கியம்
பொருந்திடினும்
மித்தொன்றுகத்தி ராதியர் தனதா னியம்மிகுமே.

(இ-ள்.) ஏழாம் இடத்திற்கு உடைய கோள், நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று நிற்கினும், வக்கிரம் பெற்று இருக்கினும், சந்திரன் இராசிகளில் மூலை இராசிகளில் இருக்கினும் அக்கோளுடனே கூடி ஒன்பதாம் கூடி ஒன்பதாம் இடத்தில் இருக்கினும், களத்திரக் காரகனாகிய சுக்கிரன் இப்படி இருந்தானாகிலும் அவன் தனதானியங்களோடும் களத்திரத்தோடும் சுகித்திருப்பான் (இன்புற்றிருப்பான்) என்றவாறு.

### பல மனைவிகள்

100 மிகுமேழ் காரகன் காணாதுறநா யகன்பாவர்
தகுதாரம் நல்லியல் பேயுறில்நல் லோர்கண்
டிட நோக்கில்
வெகுதாரம் எய்திடு வானென விளம்பாய்
வலியுணர்ந்தே
செகமே வியலக் னாதிபன் திறமும் அறிந்திசையே.

(இ-ள்.) களத்திரத் தானத்தையும் களத்திராதிபனையும் களத்திரக் காரகனையும் பாவக்கோள்கள் நோக்காமலும் கூடாமலும் இருக்க, களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்திற்கு உடைய கோள் வலிபெற்று நட்பு, ஆட்சி, உச்சங்களிலே

மறையாது இருக்க, இவ்விருவரும் சுபக்கோள்களின் நோக்கம் பெறினும், இவனுக்கு வெகுதாரம் உண்டு என்பது. இலக்கனாதிபன் வலிபெற்றுச் சுபஸ்தானங்களில் இருக்கின்ற நிலையையும் கண்டு இதனை உரைக்க வேண்டும் என்றவாறு.

### *திருமணம் நிகழும் வயது*

*101.* திறமாகியசுப இராசியில் மதனாயகன்சேர
பெறஆட்சி நட்புச்சந் தகுபெ யர்லக் கினச்சியா
உறுமாகில் ஐந்தொன் பான்வய துருகா
லையில்வதுவை
திறமே விடுமென மேயிவை தெரிந்தோது
செந்திருவே!

*(இ-ள்.)* களத்திரத்தானாதிபன் வலிபெற்றுச் சுபத்தானங்களில் இருக்க, அவனை, நட்பு, ஆட்சி, உச்சம் பெற்ற சுபக்கோள் பார்க்கினும் கூடினும், இவனுக்கு ஐந்தாவது வயதிலாவது, ஒன்பதாவது வயதிலாவது, பதிமூன்று வயதிலாவது வதுவை முடியும் என்றவாறு.

### இதுவுமது

*102.* திருமே வியமத னாயகன் ஏழில் புகவதின்சுன்
பிருகோ டுறுவலி எய்தினும் நோக்கம்
பெறுமெனினும்
நொருபா னொருவய தாதலின் ஏழாம் வயதாதல்
மருமே வியவது வைத்தொழில் வலியென்
றுரைமாதே!

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் இடத்தில் சுக்கிரன் நிற்க, அந்தச் சுக்கிரனுக்கு ஏழாம் இடத்தில் சனி நிற்க, களத்திரஸ்தானமாகிய ஏழாமிடம் உடைய கோள்

வலிபெற்றுச் சுக்கிரனோடும் கூடி இருக்க, இந்த ஏழாம் இடத்தில் சூரியன் இருக்க, அந்த ஏழாம் இடம் உடைய கிரகத்தைச் சுக்கிரன் பார்க்கிலும் பதினொரு வயதிலாவது, பதினேழாவது வயதிலாவது விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

*103.* *மாதே! குடிரி றக்கப் புகர்தனக் கேழ்மந்தன்*
*கோதாய்! வலில்உத யஞ்சுப ரதுகண்டு நின்றிடவே*
*வேதா விதிபதி னாறுபத் தொன்பன் மிகுபருவம்*
*மூதூர் புகல்வது வைத்தொழி லாமென்று*
*உரைமொழியே!*

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, இந்தச் சுக்கிரனுக்கு ஏழாம் இடத்தில் சனி நிற்க, சென்ம இலக்கனத்தை சுபக்கோள்கள் நோக்க இவனுக்குப் பதினாறு வயதிலாவது, பத்தொன்பதாவது வயதிலாவது விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

*104.* *மொழியும் இலக்கன நாயகன் அன்னியோன்*
*னியமுறையில்*
*பழுதின் றியநல் லோர்கண் டிட நிற்க சுபர்நோக்கம்*
*தெளிவொன் றிடக்களத் திராதிபன் திறமுற்*
*றெதிர்காணில்*
*களிஎய் திடவது வைத்தொழில் வர்ணம் கதுவிடுமே.*

*(இ-ள்.)* சென்ம இலக்கனாதிபதி களத்திராதிபனும் களத்திரக் காரகனாகிய சுக்கிரனும் அன்னியோன்னியம் பெற்று நிற்க, களத்திரத் தானமாகிய ஏழாம் இடத்தைச்

சுபக்கோள் நோக்க, சென்ம இலக்கனாதிபனும் களத்திராதிபனும், களத்திரக் காரகனும் சுபாங்கிசங்களில் இருக்க, இவனுக்கு யௌவன (இளமை) காலத்தில் வதுவை (திருமணம்) முடியும் என்றவாறு.

## இதுவுமது

105. கதுவேழின் நாதன் லாபம் புகலக்னா திபன்கர்மம்
ப்திமேவ நற்சுபர் கண்ணுறப் பதினைந்
தெனும்பருவம்
மதினேர் முகவனு தாய்மறு மணணே றுவனென்ற
தருதூல வழிக்கிர கங்களின் வலியாந் திவைகூறே.

(இ-ள்.) ஏழாமிடத்திற்கு உடைய கோள் பதினோராம் இடத்தில் இருக்க, சென்ம இலக்கனாதிபன் பத்தாம் இடத்தில் இருக்க, இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்க, இவனுக்கு பதினைந்து வயதில் விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

106. கூறும்தன நாதன் பதினொன் றாமி டங்குறுக
மீறும் மதனா தனவ னோடும் மிகவிசைய
தேறும் படியுத யத்தையும் மதனகா ரகன்தனையும்
மூறின்றி நல்லோர் கண்டிடப் பதினால் மனமுறுமே

(இ-ள்.) தனத்தானமாகிய இரண்டாமிடத்திற்கு உடையகோள், பதினோராம் இடத்தில் இருக்க, அல்லது அவனுடனே கூட, ஏழாமிடம் உடையவனும் கூடி நிற்க, சென்ம இலக்கனத்தையும் களத்திரக் காரகனாகிய சுக்கிரனையும் சுபக்கிரகம் பார்க்கில், பதிநான்காம் வயதில் விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

107. உறுஅட்ட மத்தனக் கேழில் புகர்நிற்க
அவ்விறைவன்
பெறுநற் பொடுநன் கெய்திட பலமுற் றெதிர்எய்தி
சாறுக் கிரகங் கண்டிட வருவார் எனவதுவைத்
திறமுற் றிடுமூ ஒன்பதும் எழுமூன் றினுந்திருவே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு அட்டமத்திற்கு ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, அந்த இராசிக்குடைய கோள், நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று நிற்க, அவனைச் சுபக்கோள்கள் நோக்க, இருபத்து ஏழு வயதிலாவது இருபத்து ஒரு வயதிலாவது விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

108. எழுமுதய நாதன் களத்திர அங்கிஷம்
இவையிசையில்
வழுவா துறகளத்தி ராதிபன் பனிரெண் டிடம்மருவ
தழுவது நல்லவர் கண்டிய நனியின் முறையுறுமால்
களிகூர் பணமிரு பானிரு மூன்றி னினுற்கருதே!

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு உடையகோள், களத்திராங்கிசத்தில் இருக்க, களத்திராதிபன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, இவர்களைச் சுபக்கோள் நோக்க, சுப இராசிகளில் இருக்க, இருபது வயதிலாவது, இருபத்து மூன்று வயதிலாவது விவாகம் முடியும் என்றவாறு.

## இதுவுமது

109. கருதட்ட மதனிராகு அட்ட மாங்கி ஷங்கதுவ
வருலக்க னாங்கிஷத் தில்புகர் மேவிச் சுபர்காணத்
திருவுற்ற நல்மணம் எய்திடும் இருபத்
தொருவயதில்
மருவுற் றிடுமிரு பத்தைந் தெனச்சொல் லவுமாமே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு அட்டமாதிபன், அட்டம அம்சம் பெற்று இருக்க, இலக்க அம்சத்தில் சுக்கிரன் நிற்க, அவனைச் சுபக்கோள்கள் நோக்க, இவனுக்கு இருப்பத்தொரு வயதிலாவது, இருபத்தைந்து வயதிலாவது விவாகம் முடியும் என்றவாறு.

## மனைவி மரணம்

110. சொல்லொன் பதினிடம் சுக்கிரன் மேவத்
தன்குடியில்
வல்லொன்றும் ராகுகே துக்கள் காலை யினல்லோர்
சொல்லும் தலங்கா ணாரெனில் களத்திரா
திபன்நலியில்
புல்லும் மனையாள் வீழ்வதும் மூவேழ் எனப்புகலே

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, இரண்டாமிடத்தில் இராகு, கேதுக்கள் இருக்க, சுபக்கோள் நோக்கார் எனில், களத்திரத் தானாதிபதனும் நீச, மூட, க்ஷீரணமாக நலியுமாகில் இருபத்தொரு வயதில் மனையாள் மரணம் என்றவாறு.

## திருமணம்

111. புகழ்ச்சங்கன் ஒன்பதுக் கேழிடம் புகவே
ழினன்கூடில்
சுகமொன் றியமத னாதநல் லோர்தேய் வுறநோக்க
திகழ்கின்ற இலக்கனம் நன்குற் றுச்சம்தே
றிடில்சுபரும்
மிகவொன் றிடிலிரு பானிரண் டினில்மேவு
நல்மணமே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்தில் அல்லது ஏழாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, அவனுடனே ஏழாம் இடத்திற்கு உடையவன் கூடியிருக்க, இவர்களைச் சுபக்கோள் நோக்க, இலக்கனாதிபன் வலிபெற்றுச் சுபர் கூடியாவது சுபர் நோக்குப் பெற்றாவது இருக்க, சந்திரன் நல்லோருடன் கூடி இருக்கினும், நல்லோர் நோக்கு எய்தினும், இவனுக்கு இருபத்து இரண்டு வயதில் விவாகம் முடியும் என்றவாறு.

## மனைவி மரணம்

112. மணமெய் தியநா தன்அதி நீசந் தனில்மருவத்
தனின்கா ரகன்பகை எய்திட நலிவுற் றதில்சாரில்
குணமாகி நல்லோர் நோக்கின்றிக் கொடியோர்
கண்ணுறுமேல்
மணமெய் களத்திர நாசம் எய்திடுமாண்
டெழுமூன்றே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஏழாம் இடம் உடையகோள் அதி நீசனாக இருக்க, களத்திரக் காரகனாகிய சுக்கிரன் பகை, நீசம் பெற்று நிற்க, இவர்களைச் சுபக்கோள்கள் நோக்கின்றிப் பாவக்கோள் நோக்குமாயினும், இவனுக்கு இருபத்தொரு வயதில் மனையாள் நாசம் என்றவாறு.

## மனைவி மரணம் அடையும் காலம்

113. எய்தும் களத்திர நாயகன் நாசத் தலம்வியத்தே
எய்தும் களத்திர நாயக னுடனே சிதனடைய
மைதும் விழிமா னேவய தெழுமூன் றிருபத்தா
றெய்தும் பொழுதி வள்தான் மரிப்பாள் எனஇசையே

(இ-ள்.) களத்திரத் தானமாகிய ஏழாமிடம் உடையவன் பன்னிரண்டாமிடக் கோளுடனே கூடி, பகை, நீச ஸ்தானங்களில் இருக்க, அந்த இராசியில் களத்திரக் காரகனாகிய சுக்கிரன் இருக்கினும் அல்லது நோக்கினும் இவனுக்கு இருபத்தொரு வயதிலாவது, இருபத்தாறு வயதிலாவது களத்திர நாசம் உண்டாம் என்றவாறு.

## மனைவிக்கு நோயும் மரணமும்

114. இசைலக் கனமன நீசம தெய்த களத்ரமான
வசையுற் றதிநீ சத்துற மவனோ டுறமருவ
திசமத் துடனா லேழிரு நாலெட் டிருபதினும்
வசையுற் றிடுமனை யாள்பிணி மரணம்
எனவழுத்தே.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபதி நீசஸ்தானங்களில் இருக்க, களத்திரத் தானாதிபன் நீசக் கிரகங்களோடு கூடினாலும், நோக்கினாலும் இவனுடைய பதினாறு வயதிலாவது, பதினெட்டு வயதிலாவது, இருபது வயதிலாவது இவன் மனையாளுக்குப் பிணியும் மரணமும் உண்டாம் என்றவாறு.

### மூன்று மனைவிகள் உடையவன்

115. வழுத்தும் புகர்க்கே ழில்சசி மருவ சசிக்கேழில்
எழும் விற்ற புதன்நின் றிடஎட் டாமி றையைந்தில்
விழித்தொன் றாகில்ஒன் றோடொரு பதினோ
டிருபதிமூன்
எழுமிரு பானே ழில்மனை யாட்டி யாம்மூன்றே.

(இ-ள்.) களத்திரக் காரகனாகிய சுக்கிரன் நின்ற இராசிக்கு ஏழாம் இடத்தில் புதன் வலி பெற்று நிற்க, எட்டாமிடத்திற்கு உடையகோள் ஐந்தாம் இடத்தில் இருக்கில், இவனுக்கு இருபத்தொரு வயதிலாவது, இருபத்து மூன்று வயதிலாவது, இருபத்து ஏழாம் வயதிற்கு உள்பட்ட மனையாள் மூன்று உண்டாம் என்றவாறு.

ஏழாம் பாவம் முற்றும்

## 8. எட்டாம் பாவம்

### மரண வயது

116. மனையெட்டின் கேந்திரம் பகஉத யாதி
பன்மெலிவும்
தனையுற் றிடிலவனைப் பொருபவர் கண்டி
டற்றளரில்
அவனைப் பெறுமாண் டும்வய தாறோ டிருஆறும்
இனமும் இருபத் தெட்டினும் எண்ணுனக்
கழிவென்னே.

(இ-ள்.) எட்டாம் இடம், அஷ்டமத் தானம் என்றும், 'அவத்தானம்' என்றும், 'ஆபத்துத்தானம்' என்றும்

சொல்லப்படும். இந்த எட்டாம் இராசிக்குடைய கோள் கேந்திரத்தானங்களாகிய உதயம், நான்கு, ஏழு, பத்தாம் இடங்களில் இருக்க, சென்ம இலக்கனாதிபன் பாவ, மூட, க்ஷீரணனாகி இருக்கில், பாவக்கோள் பற்றி நிற்கினும், பார்வை உண்டாகி இருக்கினும், இவன் பிறந்த ஆண்டிலாவது ஆறாவது வயதிலாவது, பன்னிரண்டு வயதிலாவது, பதினாறு வயதிலாவது, இருபத்தெட்டு வயதிலாவது, முப்பத்திரண்டு வயதிலாவது மரணமாம் என்றவாறு.

## *மரணதிசை*

*117.* *எண்ணஷ் டமநா தன்மிகு நீசத் தில்மிசைய*
*நிண்ணஷ் டமம்பவக் கோறவி யம்பாவர் கள்நிற்க*
*நண்ணுற் றிடுஉத யத்தினை நலியப் பவர்சேரில்*
*மண்ணிற் றிடுசுதன் அத்திசை வைப்பில்*
*மரித்திடுமே.*

*(இ-ள்.)* அஷ்டமாதிபன் அதிநீசம் பெற்று இருக்கில், அஷ்டமத்தில் பாவக்கோள்கள் இருக்க, பன்னிரண்டாம் இடத்திலும் பாவக்கோள் இருப்பினும், சென்ம இலக்கினாதிபதி பாவ, மூட, க்ஷீரணனாகிலும் அல்லது பாவ, மூடர், க்ஷீரணர், நீசர் நோக்கினும் இவனுக்கு கர்ப்ப சிஷ்ட திசையில் மரணம் என்றவாறு.

## *அபகீர்த்தி பெறுவான்*

*118.* *இடுகேந் திரகோ ணங்களில் கொடியோர்*
*இருக்கினும்*
*கூடுகினும் இவனுக்குக் கர்ப்பா றாரெட் டிடம்பதிய*
*தொடுபா வர்கள் விடம்நீசத் துருநோக் கமதெனினும்*
*வடுமிருத் தியுமோ ரைந்தில் இருநான்*
*கினும்முறையே.*

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்குக் கேந்திர திரிகோணங்களிலே பாவக்கோள் இருக்க, ஆறு, எட்டாம் இடங்களில் இலக்கனாதிபன் நீச, மூட, க்ஷீரணமாகி இருக்கினும் அல்லது பாவ, மூட, க்ஷீரண நீசக் கிரகத்துடனே கூடி நிற்கிலும், நோக்கம்பெறிம் இவனுக்கு ஐந்து வயதிலாவது, எட்டு வயதிலாவது அபகீர்த்திகள் கிட்டும் என்றவாறு.

## அற்பாயுள் உடையவன்

119. உரைக்கும் சுதத்தா னம்வருட எட்டி னிறையெட்டில்
நிரைக்கும் பவக்கிர கம்பெறு உதயா திபன்மெலிய
புரக்கும் பதிசுபர் நோக்கமில் லராயி டிற்பொருந்தார்
முறிக்கும் படியுரில் ஆயுளும் அற்பம்
எனமொழியே!

(இ-ள்.) புத்திரத் தானமாகிய ஐந்தாம் இடத்திற்கு அதிபனும் எட்டாம் இடத்திற்கு உடைய கோளும், எட்டாமிடத்தில் நிற்க, அங்கு பாவக்கோள்கள் இருக்க, சென்ம இலக்கனாதிபன் பாவ, மூட. க்ஷீரணனாகி இருக்கினும், சென்ம இலக்கனத்தைச் சுபக்கோள் நோக்காது எனினும் அல்லது பாவர் சென்ம இலக்கனத்தில் இருக்கினும் இவனுக்கு அற்பாயுளாம் என்றவாறு.

## தீர்க்காயுள் உடையவன்

120. மொழியஷ் டமந்தனில் குருசுப வர்க்கம்
உற்றிசைந்தே
அழகுற நல்லோர் கண்டிட அவர்தன் னுடன்நணுக
பழுதற சம்பூர் ணாயுளும் எனப்பக ருவர்காண்பாய்
நளினத் திறையருள் சேர்ந்திட றவையற்ற
சொல்நல்லோர்.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு எட்டாம் இடத்தில் குரு, சுபாங்கிசம் உற்றிருக்க, அவனைச் சுபக்கோள் நோக்கினும் கூடி இருக்கினும், இவனுக்குத் தீர்க்காயுள் உண்டாம் என்றவாறு.

எட்டாம் பாவம் முற்றும்

## 9. ஒன்பதாம் பாவம்

### பாக்கியமும் வாகனமும் உடையவன்

121. சொல்லொன் பதினால் ஆதிப நிற்ப குருசுங்கன்
நல்லன் போடுநனி சேர்ந்திட நவமத் திரைநலம்சேர்
இல்லின் திரிகோ ணங்களில் நாலாம்
இடத்தெனினும்
வல்ல புவிஅதி காரமும் பெறுவர்வா கனங்களுமே.

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்குப் 'பாக்கியத்தானம்' என்றும், 'பிதுருத்தானம்' என்றும், 'குருத்தானம்' என்றும், 'நவமத்தானம்' என்றும் 'தர்மத்தானம்' என்றும் பெயர். இந்த ஒன்பதாம் இடத்தில் நான்காம் இடமுடைய கோள் இருக்க, இவனை வியாழனாவது, சுக்கிரனாவது நோக்கினும் அல்லது இவனோடு கூடினும், ஒன்பதாம் இடத்திற்கு உடையகோள் சுப இராசிகளில் திரிகோண கேந்திரங்களில் நான்காம் இடத்திற்கு இராச யோக்கியமும் வாகனங்களும் உண்டாகும் என்றவாறு.

### பாக்கியவான்

122. வாகாம் குருத்தா னந்தனில் குருமேவி தனநாதன்
கோதாய் மிகுகேந் திரம்புக லக்கனா திபன்சுபனாய்
ஏகா தேசமுறினும் சுபரிதை நோக்கம் உற்றிடினும்
பாகார் மொழிமட வாய்வெகு பாக்கியா திபனாமே

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில் குரு இருக்க, ஒன்பதாம் இடம் உடைய கோள், இதற்குக் கேந்திரத்தில் இருக்க, சென்ம இலக்கனாதிபன் சுபனாகி பதினோறாம் இடத்தில் இருக்க, இவனைச் சுபக்கோள் பார்க்க, இவன் வெகு பாக்கிய சம்பன்னனாம் என்றவாறு.

## தந்தையைப் போல் பாக்கியவான்

123. பாக்கியா திபன்வலி பெற்றியல் பாக்கியம் புகழ்ப்பெற
நோக்கா யினுமே காதேசம் கேந்திரம் குருநோக்க
வாக்கா நயன லாபம் புகவரினும் நலிவின்றி
நோக்கா யினும்பிதுர் பாக்கிய சமனாம் எனநுவலே.

(இ-ள்.) பாக்கிய ஸ்தானாதிபன் வலிபெற்று இருக்க, பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்தில் சுக்கிரன் நிற்கிலும், பதினோராம் இடத்திலாவது கேந்திரங்களிலாவது வியாழன் இருக்க அல்லது நோக்கினும் இரண்டாம் இடம் உடையகோள், பதினோராம் இடத்தில் இருக்கினும் பதினோராம் இடத்தை நோக்கினும் இவன் பிதுருக்களுக்கு இஷ்டமாகிய பாக்கியம் பெற்றுப் பிதாவைப் போல வாழ்வான் என்றவாறு.

## தனக்குத் தீர்க்காயுள்

164. நுவலொன் பதின்இறை நீசத் தடையப் பிதுரோனில்
சிவலம் பெறப்பிதுர் நோயுறு துயர்நிருத் தியிலென்க
நவமில் எரிஉச் சம்பெற பாக்கியம் பெறநற்பொன்
அவைஒன் பதாங்கிச மாயினும் தீர்க்காயுள் இவன்பிதுரே.

*(இ-ள்.)* ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள் நீசமடைய, பிதுர்க்காரகனாகிய சூரியன் ஏழு, ஐந்தாம் இடத்தில் நிற்க, பிதாவிற்கு நோய் உண்டாகித் தீரும். ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள், உச்சத் தானங்களில் இருக்க, சூரியன் ஒன்பதாம் இடத்தில் உச்சம் பெற்று இருக்க, நவாம்சத்தில் குரு இருக்கினும், இவன் பிதாவிற்கு *(தந்தைக்கு)* தீர்க்காயுள் என்றவாறு.

## *பெற்றோர் தீர்க்காயுள்*

*125.* ஆயும் இலக்கன நாயகன் கேந்திரம் புகவதனை
ஏயொன் பதின்இறை நோக்கிட பிதுர்வா கனநாதன்
தோயும் சுபர்நோக் கம்பெறச் சுபர்கூ டிடச்சுபமே
தாயும் தந்தையும் அனுநற் சுபமெய்து வர்சுகமே.

*(இ-ள்.)* ஜென்ம இலக்கனாதிபன் கேந்திரத் தானங்களில் இருக்க, அவனை ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள் நோக்க, பிதுருக்காரகன் இருந்த இராசிக்கு நான்காம் இடத்திற்கு உடையவனாதல், பிதுருத்தானமாகிய ஒன்பதாம் இடத்திற்கு நான்காம் இடத்திற்கு உடையவனாவது சுபஸ்தானங்களில் சுபக்கோள்களுடன் கூடி இருக்கினும், நோக்கினும் தாயும் பிதாவும் சுகமாக இருப்பார்கள் என்றவாறு.

## *செல்வன், புகழுடையவன்*

*126.* வாழ்வெய்தும் ஒன்பதின் மன்தொழில் மருவத்
தொழிலிறைவன்
சூழ்பாக் கியந்தனை நோக்கினும் சுபவர்க்கம்
அதனுடனே
நீழ்வத் திடச்சண னெனுஞ்சுதன் நற்தொழி லத்தாதல்
வாழ்வெய் திடபிரக் கீர்த்தியும் வளர்செல்
வமும்மிகுமே.

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள் பத்தாம் இடத்தில் இருக்கினும் பத்தாமிடம் உடைய கோள், பாக்கியத் தானமாகிய ஒன்பதாம் இடத்தைப் பார்க்கினும் அல்லது சுபக்கோள் நோக்கினும் சத்கர்மத்தினாலே (நல்ல தொழில்களால்) திரவிய சம்பாத்தியம் பெற்றுக் கீர்த்தி மானாய் வாழ்வான் என்றவாறு.

## உயர்நிலையில் வாழ்பவன்

127. வளறோன் பதின்இறை பத்துப்பத் ததிபன்
ஒன்பத்தில்
தளர்வின்றி உச்சமதா யுறில்இலக் கனாதி
தன்பலனாய்
வளர்ச்சந் திரனெனில் இச்சிசு மன்னர்க்
கினியவனாய்
அளகொன்றி இத்தரை போற்றிட அவனிக் கதிபதியே

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு உடையவன், பத்தாம் இடத்தில் இருக்க, பத்தாம் இடத்திற்கு உடையவன் ,ஒன்பதாம் இடத்தில் இருக்க, இந்தத் தானம் இவர்களுக்கு உச்சமாகில், சென்ம இலக்கனாதிபனும் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று, சுபத்தானங்களில் இருக்கில் சந்திரனும் வளர்பிறையாய் வருகில் (இருப்பின்) இவன் இராசாக்கள் மெச்ச பூதலத்தில் அதிபதியாக துரைத்தனம் (ஆட்சி) செய்வான் என்றவாறு.

## நல்ல புத்திரன்

128. அவனைத் தலமுற இலக்கன மவன்கோண
கதிரவனாய்
நவமத் திரைமத வேழ்புக பிரகஸ் பதிநோக்க
கவனத் தொடுகூட புகர்கதி ரோனை நல்லோர்கள்
துவாமித் திரரா கில்பிதுர் கனபாக் கியசுதனே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்தின் திரிகோணங்களில் சூரியன் இருக்க, ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள், ஏழாம் இடத்தில் இருக்க, அவனை வியாழன் பார்க்கினும் கூடினும், ஆதித்தனைச் சுபக்கோள்கள் நோக்கினும் இவன் பிதாவிற்குக் கனபாக்கிய சர்புத்திரனாம் (நல்ல புத்திரன்) என்றவாறு.

## பாக்கியவான்

*129.* சுதன்பாக் கியநா தன்து றவறத் தனதுடையோன்
நிதம்வாய்த் திடுபாக் கியத்தலம் எய்தச் சுபர்காண
பதபாக் கியதா ரம்புகழ் பலர்பூசி யம்பெருமை
இதவாய்த்த வாகன மும்வய திருபனி ரெண்டினிலே

(இ-ள்.) ஒன்பதாம் இடத்திற்கு உடையகோள், இரண்டாம் இடத்தில் இருக்க, இரண்டாம் இடத்திற்கு உடைய கோள் ஒன்பதாம் இடத்தில் இருக்க, இவர்கள் சுபநோக்கம் பெற, இவன் இருபத்து இரண்டாம் வயதில் வாகனம் பெற்று, புத்திர மித்திராதிகளுடனே பாக்கிய சம்பன்னனாகி வாழ்வான் என்றவாறு.

## செல்வம் உடையவன்

*130.* இனிஒன் பதியன் இலாப மெய்தொன்
பதினிறைவன்
நனியொன் றுமிலா பத்துற நற்கோள் வலிபெற்றே
கனியொன் றின்நோக் கெய்தினும் கனகன்
சுபமெய்தில்
தனமென்றும் மேன்மேலும் வளர்தரு சோஷ்தி
கம்தருமே.

(இ-ள்.) ஒன்பதாம் இடத்தில் பதினோராமிடம் உடைய கோள் இருக்க, ஒன்பதாமிடம் உடையகோள் பதினோராம்

இடத்தில் இருக்க, சுபத்தானங்களில் இருக்கில், மென்மேலும் தனதான்ய வர்த்தனை (பெருக்கம்) உண்டாகிச் சுகமே இருப்பான் என்றவாறு.

## *தந்தைக்குத் துன்பம் தருபவன்*

*131.* *தகுமொன் பதன்இறையா றிடம் சார்ந்ததா றிடநாதன்*
*மிகுமொன் பதிலுறு மாகிலும் இவன்சென்மம்*
*எந்நாளும்*
*தகுதந்தை யைமிகு துக்கன் கலகம் செய்நவைசேர்*
*மகுவென்று நல்லோர் சொல்லிய வயனம்*
*தகுமிதுவே.*

*(இ-ள்.)* ஒன்பதாமிடத்திற்கு உடையகோள் ஆறாம் இடத்தில் இருக்க, ஆறாமிடத்திற்கு உடைய கோள் ஒன்பதாம் இடத்தில் இருக்க, தந்தையிடம் கலகம் செய்பவனாகவும் தந்தைக்குத் துக்கம் செய்பவனாகவும் இருப்பான் என்றும் நல்லோரால் இகழப்படுவான் என்றவாறு.

## *பிறரிடம் பொருள் யாசித்து வாழ்பவன்*

*132.* *இதிலாப மதிறை நின்றஇல் லிறைஎட் டுடன்ஈறா*
*றதிலன்றி டக்குரு நன்குற நோக்கம் தருமாகின்*
*பதிபாக் கியமத னாதனும் அதனொரு சம்பந்த*
*மதிதரா சியிலிரந் துண்பது சென்மாந் திரமுதலே.*

*(இ-ள்.)* சென்ம இலக்கநத்திற்குப் பதினோராம் இடத்திற்கு உடையகோள் நின்ற இராசியாதிபன் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் நிற்க, வியாழன் வலிபெற்று

நோக்குமாயின், ஒன்பதாம் இடத்திற்கு உடையவனும் ஏழாம் இடத்திற்கு உடையவனும் இவனுடனே அல்லகு இவனுக்கு ஏழாம் இடத்தில் இருக்க இவன் செந்மாந்திரம் (வாழ்நாள் முழுவதும்) இரந்து (பிறரிடம் பொருள் பெற்று) உண்பான் என்றவாறு.

### *இரந்து உண்பான்*

*133.* முதலக் கனமா றாதிப னுடன்நீ சம்மூடம்
மதமுற்று கில்சனி நோக்கில் மதியத் தையும்காணில்
விதமுற் றுணல்குற வெய்திட இரந்துண் பதுவிதியே
சுதவற்ற நட்பாட் சித்தலம் ஆரா திவைசொல்லே.

(இ-ள்.) சென்ம இலக்கனம் உடைய கோள், ஆறாமிடம் உடைய கோளுடனே கூடி நீசத்திலாவது மூட, க்ஷீரணருடனாவது அல்லது ஏழாமிடத்திலாவது இருக்க, இவனையும் சந்திரனையும் சனி நோக்குமாகில், சென்ம இலக்கனத்திற்குச் சுபக்கிரகங்கள் பார்வை இல்லாவிடினும் சென்ம இலக்கனத்திலும், கேந்திரத் தானங்களிலும் சுபக்கோள் இல்லாவிடினும், இவன் சென்மாந்திரம் தரித்திரவானாகி இரந்து உண்பான். கிரகங்களின் நட்பு, ஆட்சி, அக்கோள் நின்ற இடம் இவற்றையும் ஆராய்ந்து இதனைச் சொல்ல வேண்டும் என்றவாறு.

### *தந்தை மரணம்*

*134.* இவையும் வியநா தன்லக் கினரா சியிலிருக்க
அவையாற் பதிஐந் தாமிடம் ஆறென் பெறுமதலை
புவிமேல் வருமுன மேபிதுர் தாமாடு வன்புகழ்சேர்
அவைதன் வலிபலவீ னங்களை ஆய்ந்தே
அறிந்தரையே.

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்கு பன்னிரண்டாம் இடம் உடையகோள், சென்ம இலக்கனத்திலே இருக்க, ஆறாமிடம் உடையகோள், ஐந்தாம் இடத்திலே இருக்க, இவன் பிறக்கும் முன்னமே இவன் பித்ரு மரிப்பான். இது ஒன்பதாம் இடத்திற்கு உடையவனும் துர்ப்பலனாகின் என்றவாறு.

## இதுவுமது

*135.* *அரைஅஷ் டமங்கதிர் மேவிட அட்டமா*
*திபன்தானும்*
*செரிஒன் பதின்இறை யோனுடன் சனிக்கும்*
*சுதன்தந்தை*
*குறைஒன்று செல்வய திற்புகும் எமலோகத்*
*திற்குடியாய்ப்*
*பிதிரின்றி பிதுர்க்காரகன்பலம் ஆராய்ந்*
*திவைபிதற்றே.*

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்கு எட்டாம் இடத்தில் சூரியன் நிற்க, எட்டாம் இடம் உடையவனும் ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோளுடனே கூடில், இவனுக்கு ஒரு வயது செல்லும்போது பிதா மரண வருத்தம் உண்டாகும். சூரியன் பிதுர்த்தானாதிபதியன் ஆகிய இருவரும் பலவீனரானால் என்றவாறு.

## தந்தையின் மரணகாலம்

*136.* *பிதற்றும் வேயமன் பாக்கியம் பெறநீ சாங்கிசத்தில்*
*திரத்தா னெனபாக் கியாதிபன் பிதுர்சேரும்*
*அங்கிசமும்*
*மதித்தாங் கதிநீசம் தருமா யுள்ச் சிசுவந்த*
*கொதித்தான் டுறுமூன் றெண்ணி ரண்டுயிர்ச்சே*
*தம்பிதுர்க்கே.*

(இ-ள்.) வியசத்தானமாகிய பன்னிரண்டாம் இடம் உடைய கோள் பாக்கியத்தானமாகிய ஒன்பதாம் இடத்தில் நீசாம்சம் பெற்றிருக்க, பாக்கியாதிபனும் பிதுர்க்காரகனாகிய சூரியனும் நீசாம்சம் பெற்று இருக்கில், இவன் பிறந்த ஆண்டிலாவது மூன்றாம் ஆண்டிலாவது பதினாறாவது ஆண்டிலாவது இவனுடைய பிதா மரணம் என்றவாறு.

## இதுவுமது

*137.* எண்ணும் உதயத் ததிபன் நாசத் தலம்எய்த
நண்ணட் டமத்திறை பாக்கயம் நணுக கதிர்நலிந்தே
திண்ண முறுபவர் நோக்குறப் பிதுரோ னமையினும்
... ...தொரு மூன்றினும் ஈராறில் பிதாநலிவே.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, அஷ்டமாதிபன் பாக்கியத் தானத்தில் இருக்க, சூரியன் நீச, மூட, க்ஷீரணனாகி பாவக்கோள் நோக்க, பிதுர்த்தானத்தில் இருந்தானாயினும் இவனுடைய மூன்று வயதிலாவது பனிரெண்டு வயதிலாவது பிதா மரிக்கும் என்றவாறு.

## இதுவுமது

*138.* நலியொன் பதின்இறை அட்டமம் இராகு
பொருந்திடவே
சொலுபாக் கியம்பா னும்புக சுபக்கோள்க
ளும்நலிந்தே
மேவியும் இதனையும் கார கன்தனைக்
காணாரெனில்
நலியும் இருவய தாண்டிரு நான்கில் பிதுர்நலிவே.

(இ-ள்.) ஒன்பதாம் இடம் உடையவன், இராகுவுடனே கூடி அஷ்டமத்திலே இருக்க, ஒன்பதாம் இடத்தில் சூரியன் இருக்க, சுபக்கோள்கள் பலவீனமாகிலும், அந்த அஷ்டமத்தை நோக்காரெனில், இரண்டாண்டிலாவது எட்டாண்டிலாவது இவன் பிதாவுக்கு மரணம் என்றவாறு.

### இதுவுமது

139. பிதுர்க்கா ரகன்உர கந்தனைச் சேரப் புகவேழில்
மதிக்கொன் பதுமதி நன்றிவை சுபர்பார்க் கவுமிலரேல்
பிரகன் மனைவொன் பானினும் மூவாறி
னும்பெயரும்
மதித்தாண் டொருமூன் றாத்திசை யந்தியங்
களும்மதியே.

(இ-ள்.) பிதுர்க்காரகனாகிய சூரியன், இராகு, கேதுக்களுடனே கூடி, ஏழாமிடத்தில் இருக்க, இவர்களைச் சுபக்கோள் நோக்காவிடில், இவனுடைய பிதாவுக்கு இவன் பிறந்த ஒன்பதாண்டிலாவது, பதினெட்டாவது வயதிலாவது அல்லது கர்ப்பசிஷ்டதிசை அந்தியகாலத்திலாவது மரணம் என்றவாறு.

### இதுவுமது

140. அந்தப்பனி ரெண்டாம் இடம்பாக் கியாதி தானிற்க
வந்துற் றிருமொன் பான்பன் னிருஇராசி யின்மருவ
கொந்துற்ற பைங்குழ லாய்பிதுர் நாலாண்
டெனரெண்டும்
சந்தித் தரிநா சத்தற ரந்தின னவைசெப்பே.

( இ-ள்.) சென்ம இலக்கனத்திற்குப் பன்னிரண்டாம் இடத்தில் பாக்கியத்தானாதிபதி இருக்க, ஒன்பதாம் இடத்தில் பன்னிரண்டாம் இடத்திற்கு உடையவன் இருக்கில், நான்காம் வயதில் பிதாவுக்கு மரணம் என்பது. இவர்களைச் சுபக்கோள் நோக்காவிடில் என்றவாறு.

### இதுவுமது

141. செப்பென் பதற்கே ழாமிடம் சேரக் கதிர்கதிர்க்கு
வெப்பம் தகுமே ழாமிடம் மேவச் சனிதானும்
தப்பொன்றும் இலாமற்பிதிரவ் வாண்டு மூவாண்டில்
துப்பென் றியஐ யாண்டி னற்றுலைவான் எனவுரையே

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஏழாம் இடத்தில் ஆதித்தன் இருக்க, அந்த ஆதித்தனுக்கு ஏழாம் இடத்தில் சனி நிற்க, இவன் பிறந்த ஆண்டிலாவது மூன்று வயதிலாவது, ஐந்து வயதிலாவது இவன் பிதாவிற்கு நாசம் என்றவாறு.

## இதுவுமது

142. தலையெட் டினுக்கே ழில்சனி சனிக்கேழ்
கதிர்தன்னில்
நிலைபெற் றிடல்பிதுர் நாசமும் நிகழ்த்தும்
படிநீகேள்
உலைவுற் றிடுமவ் வாண்டுகோ மூவாண்டு
கோலுணராய்
நலிவுற் றிளிவை யாண்டினிற் றப்பா
தெனமொழியே! .

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் இடத்தில் சனி நிற்க, அந்தச் சனி நின்ற இராசிக்கு ஏழாம் இடத்தில் சூரியன் நிற்குமாகில் இவன் பிறந்த ஆண்டிலாவது, மூன்றாம் ஆண்டிலாவது, ஐந்தாம் ஆண்டிலாவது இவன் பிதா மரணமடைவான். இந்தப் பலன் தப்பாது என்றவாறு.

## இதுவுமது

143. நவிலொன் பதிலிறை நீசம தணுக வதன்நாதன்
நவிலம் பெறநீசத் தலமடை யப்பி திர்தனையப்
பரரொன் றுகில நோக்கிய (துகில்) பத்தாறு
ரெண்டெட்டேல்
புவிமொன்று ஒன்பதி னும்பிதுர் புகுமாம் எமபுரமே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்திற்கு உடையவன் நீசம் அடைய, அந்த இராசியாதிபன் நலிவாகி க்ஷீரண, மூட, நீசத்திலாவது, பத்தாமிடத்திலாவது நிற்கில் இவன் பிதாவுக்கு மரணம் என்றவாறு.

குறிப்பு: மூன்றாம் பாடலடிக்குப் பொருள் பத்தாமிடத்திலாவது, ஆறு, இரண்டு, எட்டு, ஒன்று, ஒன்பதாவது இடங்களிலாவது நிற்கில் என்று இருந்திருக்க வேண்டும்.

## இதுவுமது

*144.* மேவும் பிதுர்த்தா னந்தனை யுடையா
னைவெய்யோனை
மேவிச் சனியுற வேபவர் நோக்க முழுதேற்றில்
மேவிய வயதோ ரைந்துறு தினமோ இரண்டினிலோ
மேவிப் பிதுர்நா சந்தின மிதவோராய்ந் திவைசாற்றே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்திற்கு உடையவனையும், பிதுர்க்காரகனாகிய சூரியனையும் வலிமைப் பெற்று சனி, செவ்வாய்க் கூடி, இவர்களைச் சுபக்கோள் நோக்காவிடில், ஐந்து வயதிலாவது, இரண்டு வயதிலாவது பிதாவுக்கு அவமிருத்துத் தட்டும் (மரணம் ஏற்படும்) என்றவாறு.

## புகழும் செல்வமும் உடையவன்

*145.* சாரும் பரிமோட் சத்தலம் உச்சாங் கிசம்சார
சேரும் வர்க்கோத் தாங்கிசம் சேரொன் பதினாதன்
பாரொன் பதில்சசி யோடுற பேரில்பாக் கியபலமும்
தூரம் புகழ்எய் துந்தன முண்டென் றுரைதூயோய்.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடம் உடைய கோள், அதியுச்சம் பெற்று வர்க்கோத்தாங்கிசம் பெற்று இருக்க, ஒன்பதாம் இடத்திற்கு உடையவன் ஒன்பதாமிடத்தில் சந்திரனுடன் நிற்க, இப்படி இவர்கள் ஒன்பதாம் இடத்தில் இருக்கினும் இவன் வெகு கீர்த்திமானாகி, அஷ்ட ஐஸ்வர்ய வர்தனையோடும் கூடிவாழ்வான் என்றவாறு.

## செல்வன்

146. தூயோன் பதினிறை பொன்னுடன் கன்மத்
தலம்தோன்ற
வேயும் அதினிறை சந்திரன் மேவும் பதிக்கேழில்
ஓயும் எனில்இ வருமிரு பத்தெய்தும் நற்பலனை
தாயங் கழுவாள் வாமிகச் சாரும் வலிபாரே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாமிடம் உடைய கோள், வியாழனுடனே கூடி ஏழாமிடத்தில் இருக்க, அந்த ஏழாமிடத்திற்கு உடைய கோள், சந்திர லக்கனத்திற்கு ஏழாமிடத்தில் இருக்கில், இவனுக்கு இருபத்து ஐந்து வயதிற்குமேல் சம்பத்து (பாக்கியம்) உண்டாகும் என்றவாறு.

## செல்வம் வரும் காலம்

147. வலிபெற் றுயஉச் சத்தலம் சுபரெய்த ஒன்பதி
நலினுற்ற பாக்கியத் தலமன் னும்மே ழில்நாலைந்
தொலையிற் றிருவத்திற் பெறும்வெகு பாக்கிய
முயர்வான
குலிசத் திசைபெறு வாழ்வது கூறு கொடியிடையே.

(இ-ள்.) சுபக்கோள் சுபஸ்தானங்களில் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று இருக்கில், ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள் வலிபெற்று ஒன்பதாம் இடத்தில் இருக்கில், இவனுக்கு இருபத்து இரண்டு வயதிற்குமேல் செல்வம் உண்டாம் என்றவாறு.

### *பாக்கியவான்*

*148.* கூறும் இலக்கன நாயகன் பாக்கியத் தலம்குறுக
தேறும் அதின்நா தன்லக் கனமே விடச்செரிந்தே
மீறும் கனகன்கண் ணுறவெகு பாக்கிய சந்தானம்
பேறு பெறுவான் என்றனர் பெரியோர்கள்
சொல்லிதியே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு உடைய கோள் ஒன்பதாம் இடத்தில் இருக்க, இந்த ஒன்பதாம் இடத்திற்கு உடைய கோள், வலிபெற்றுச் சென்ம இலக்கனத்தில் இருக்க, இவர்களை வியாழன் பார்ககில், வெகுபாக்கிய சம்பன்னனாகி வாழ்வான் என்றவாறு.

*149.* சொல்லொன் பதினொன் பாலிடம் ராகுப்
புகுகவிமன்
நல்பாக் கியமே புதனிருக் கஅதனிறை அதில்நீசம்
பல்லு தில்ல மெனில்வரும் சுதன்பாக் கியாதி
கள்பொருந்தார்
தில்லை .......வின்னஞ் சுகமிங் கில்லையென்னே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்திற்கு அதிபதிக்கு ஒன்பதாமிடத்தில் இராகு இருக்க, புதன் ஒன்பதாம் இடத்தில் இருக்க, இந்த ஒன்பதாம் இடத்திற்கு உடையகோள் நீசம் பெற்றிருக்கில், இச்சாதகன் நிறைந்த பாக்கியங்களைப் பெற்றவனாம் என்றவாறு.

150. நங்காய் நலஞ்சனி எய்தி வியம சிகிநன்ன
மங்கா துறுமுத யத்திறை நீசம் அதில்மருவ
கொங்கார் குவிமுலை இவன் பிதுர்த் துன்ப
மதுறுவான்
கெங்கா தரநன் .............பலிபுக்கு வார்களே.

(இ-ள்.) ஜென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்தில் சனி இருக்க, பன்னிரண்டாம் இடத்தில் கேது இருக்க, ஜென்ம இலக்கனாதிபன் நீசமடையப் பிறந்தவனின் பிதாவுக்கு மாறாத் துன்பம் உண்டாம் என்றவாறு.

ஒன்பதாம் பாவம் முற்றும்.

## பத்தாம் பாவம்

### கங்கையில் நீராடுபவன்

151. கேளாத் தொழிலிறை இராகுவி னுடனெய்
திடக்கிளரும்
மூளா அதின்இறை செங்கதி ரவனோக் செய்தியிட
தாளா தல்லோர் தான்தொழில் ரோக்க இத்தனையன்
நாளா துயர்கங் காவஸ் தானம் செயுமறியே.

(இ-ள்.) பத்தாம் இடமானது 'கர்மஸ்தானம்' என்றும், 'தொழில் ஸ்தானம்' என்றும், 'மானஸ்தானம்' என்றும் 'தைரியஸ்தானம்' என்றும் சொல்லப்படும். இந்தப் பத்தாம் இடத்திற்கு உடையகோள் இராகுவுடனே கூடி இருக்க, பத்தாமிடத்தைச் சுபக்கோள் நோக்க, இவர்கள் இருந்த இராசிக்குரியக் கோள் சூரியனுடனே கூடி இருக்கப் பிறந்தவன் கங்கா ஸ்நானம் செய்வான் என்றவாறு.

## நன்மகன், ஆசாரம் உடையவன்

152. அரிமான மதுடை யான வன்மீனத் தினிலணுகச
செரிவா கியகதிர் மைந்தனைச் சேரப் பிறந்திடும்சேய்
நெரிசேரு கன்னியா சித்திர நிலையெய்த எந்நாளும்
அறிவாகிய சத்புத் திரனாம் ஆசாரி யனுமாமே.

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு உடையவன் மீனத்தில் சனியுடனே கூடியிருக்க பிறந்தவன், சற்குண பரிபாலன ஆசாரியானாவான் என்றவாறு.

## பாக்கியவான்

153. ஆசின் றியமரு மானகுரு பிருகுச் சகியாகி
நேசம் திகழுத யாதிபன் வலிபெற் றிடநிற்கில்
மாசின் றிநல்லுச் சந்த னில்மந்தன் விடுமேவ
ஈசன் திருவரு ளாய்மிகு திருவெய்தும் என்றிசையே.

(இ-ள்.) மானஸ்தானமாகிய பத்தாம் இடத்தில் வியாழன், சுக்கிரன் சகிதமாகி நிற்க, ஜென்ம இலக்கனாதிபன் வலிமை பெற்று இருக்க, சனி உச்சஸ்தானத்தில் இருக்க, வெகு பாக்கியவானாகி வாழ்வான் என்றவாறு.

## அரசாங்க ஆதரவு பெறுபவன்

154. இசைத்தன்ன மனதுடை யோன்பதி னொன்றாம்
இடமெய்த
வசைதீர்ந் துகுடை யொன்றில் மருவிச் சுபர்காணத்
திசமந் தனிற்புக எய்திடச் சிசு அன் பொடுசிறந்தே
வசையன் றியரசர்க் கர்மத் துசையோன் எனவழுத்தே.

(இ-ள்.) பத்தாமிடம் உடைய கோள் பதினோராம் இடத்தில் இருக்க, அந்தப் பதினோராம் இடம் உடையவனும் அதிலே இருக்க, அவர்களைச் சுபக்கோள் நோக்க, பத்தாம் இடத்தில் சுக்கிரன் இருக்க, அரசாங்கப் பரிபாலனாகி வாழ்வான் என்றவாறு.

## இதுவுமது

155. வளத்தும் திரிகோண கேந்திரம் கர்மாதி பன்மருவ
விளித்தொன் றியசுப சேத்திர மேலக் குருவாட்சி
சுளித்தென நோக்கெய்தி லாதிரல் சேர சுபரதனை
விளித்திண் ணமதாய்ப் பார்க்கிலும் இயன்கர்ம
விற்பனனே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்குத் திரிகோண கேந்திரஸ்தானங்களில் பத்தாமிடம் உடையகோள் இருக்க, வியாழன் தன் சொட்ச சேத்திரங்களிலே நின்று நோக்க, அல்லது சுபக்கோள் சுபத்தானங்களிலே நின்று நோக்குமாயினும், இவன் சர்க்கார் (அரசாங்கம்) பரிபாலன் ஆவான் என்றவாறு.

## இதுவுமது

156. கன்மாதி பன்உத யத்தினில் நிற்கப் பதினொன்றில்
மன்னோ டுறுமது நோக்கினும் கேந்திரத்
திரிகோணில்
பன்மா மனிநலி வின்றி நின்றுமேல் பலநாளும்
சன்மார்க் கமும்கர்ம மாதிகள் செய்யும்
தனையனுமே.

(இ-ள்.) கர்மத்தானமாகிய பத்தாம் இடத்திற்கு உடையகோள் சென்ம இலக்கனத்தில் இருக்கினும் அல்லது பதினோராமிடம் உடைய கோளுடனே கூடி இருக்கினும் அல்லது நோக்கினும் கேந்திரத் திரிகோணங்களிலே பூர்வ பட்சத்துச் சந்திரன் (வளர்பிறைச் சந்திரன்) வலிபெற்று இருக்கில், இவன் நாள்தோறும் சகல கர்ம பரிபாலனாகி வாழ்வான் என்றவாறு.

## கீழ்மையானத் தொழில் செய்பவன்

157. செயகன்மம் தேயச் சனியுதயத் தானத் தினைநீசர்
வெயதொன் றிடில்நோக் கெய்துகில் கன்மாங்
கிசகேவில்
நயதொன் றுபவர் கூடுகில் காணும் பதிநன்னில்
செயகன் மமும்ஈ னத்தொழில் செய்யும்
புதல்வனுமே.

(இ-ள்.) பத்தாம் இடத்தில் சனி இருக்க, சென்ம இலக்கனத்தை நீசக்கோள் நோக்கில் அல்லது கூடினும், கர்மாமிசத்தில் நீசர் இருக்கினும் பாவக்கோள் நோக்கினும் கூடினும் இவன் செய்வது ஈனத்தொழிலாம் (கீழ்மையானத்) என்றவாறு.

## இதுவுமது

158. தொழிலா தியன்நீ சம்புகத் தொழிலைப் பவர்சூழ
எழும்ஓ ரையைப் பவர்கண் டிடஏழில் பவரிருக்க
பழிபா தகத்தொழில் செய்குவன் பலநா
ளும்புதல்வன்
நலிவா கியஅப காரமும் நணுபா தகமுமுண்டே.

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு உடையவன், நீசத்தில் இருக்க, அந்தப் பத்தாம் இடத்தில் பாவக்கோள்கள் இருக்கில், சென்ம இலக்கனத்தைப் பாவக்கோள்கள் நோக்க, ஏழாம் இடத்திலும் பாவக் கோள்கள் இருக்கினும் , இவன் வெகுபாதகமாகிய ஈனத்தொழில் செய்வான் என்றவாறு.

## தீர்க்காயுள்

159. இனிதா கியமூன் றொருபதி னான்றி னில்இராகு
நனிசேர் நற்சுபர் காணுகில் அற்பா யுளிவைதீர
பணிசேர் மொழிதீர் காயுள தெனல்நா தன்பதிசால்
வனிதாய்! தன்தா னமாதியம் வலியாய்ந்
துரைப்பதுவே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு மூன்றா மிடத்திலாவது, ஆறாம் இடத்திலாவது, பதினோராம் இடத்திலாவது இராகு இருக்க, இந்த இராகுவைச் சுபக்கோள் நோக்கில் அற்பாயுளும் தீர்க்காயுளாகும். சென்ம இலக்கனாதிபதினுடைய வலிமையை அறிந்து இதனைச் சொல்வது என்றவாறு.

## புகழும் ஆயுளும் உடையவன்

160. அதுகீர்த்தி யில்சசி சேர்தல் நோக்கில் அதற்கேழில்
உதயா திபத்துரு மாகிலொன் பதிற்பத் தினிலுரினும்
சுதன் கீர்த்தி தீர்க்காயு முறுவான் சுபநிலவேல்
மதிசேர் முகவன் உதயாய் வலியாய் சுவதன்னான்.

(இ-ள்.) கீர்த்தி ஸ்தானமாகிய மூன்றாம் இடத்தில் சந்திரன் இருக்க, அதற்கு ஏழாவது இடத்திலாவது திரிகோணங்களிலாவது சென்ம இலக்கனாதிபன்

இருந்தாலும் அல்லது பத்தாம் இடத்தில் இருந்தாலும் அப்பொழுது வளர்பிறையாகிய சந்திரன் வலிபெற்று இருந்தால் கீர்த்தியும் பாக்கியுமும் தீர்க்காயுளும் உற்றிருப்பார் என்றவாறு.

## புகழுடையவன்

161. வலியெய்த இலக்கன மாதியன் இலாபத்
திரிகோணம்
மலிசும் பெறவுரி லுந்திறல் லறுகன் பொடுநிற்கில்
ஒலியெய் திடசுப கீர்த்தியை யுறுவான்
வருந்தலைவன்
வலியெய் திடுதன தானிய வளமும் உறுபவனே.

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு உடையவன், பதினோராம் இடத்தில் இருக்க, பதினோராம் இடம் உடையவன் பத்தாம் இடத்தில் இருக்க, இவனை வியாழன் பார்க்கில் இவன் வெகு கீர்த்திமானாகி தனதான்ய சம்பன்னனாகி வாழ்வான் என்றவாறு.

## புகழும் செல்வமும் உடையவன்

162. உறும்ஒன் பதில்க்கன் மாதிப னுதயத் திறைபத்தில்
பெறுமா கிலவ்வுத யத்தினுக் கைந்தம்
புலிபெலனாய்த்
தெரிபா வர்கள்நோக் காமல் நின்றிடமே வச்சிறுவன்
நெறிநீதி யைப்பெறு கீர்த்தியடைந் திடுவான்
எனநிகழ்த்தே.

(இ-ள்.) பாக்கியத்தானமாகிய ஒன்பதாம் இடத்தில் பத்தாமதிபதிபனும் பத்தாமிடத்தில் இலக்கனாதிபனும்

இலக்கனத்திற்கு ஐந்தாம் இடத்தில் சந்திரனும் நிற்க, இவர்களைப் பாவக்கோள்கள் நோக்கவில்லையென்றால் கீர்த்தியும், செல்வமும் உடையவனாவான் என்றவாறு.

### அபகீர்த்தி

*163.* நிகழா றிடமதன் நாதன் ஒருபதின் நின்றிடவே
புகழ்பாக் கியபவ னாதிபன் ஆறெட்
டினில்வியத்தில்
இகழாதுரிவெய் துஞ்சுதன் இழிவாம் பவகன்மம்
திகழா கியநற் கீர்த்தியைச் சேரும் திசையினிலே.

*(இ-ள்.)* ஆறாம் இடம் உடையகோள், பத்தாம் இடத்தில் இருக்க, ஒன்பதாம் இடம் உடைய கோள் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடங்களில் இருக்கப் பிறந்தவன், பாவக்கர்மங்களைச் செய்து அபகீர்த்தி பெறுவான். அந்தப் பாவக் கிரகங்களுடைய மகாதிசையில் என்றவாறு.

### வசை கூறப்படுபவன்

*164.* தசமதனிற் கொடியோர் புகலக்க னாதி பன்பவராய்
இசையும் படிநிற்பா ரெனில் இப்பா லகன்தன்னை
வசைதுன் றியபுன் சொற்களைப் பந்து சனம்பகர்வார்
இசைவின் றியதிசை இனமதேனு நேர்க்கொடியே!

*(இ-ள்.)* பத்தாம் இடத்திலும் சென்ம இலக்கனத்திலும் பாவக்கிரகங்கள் இருப்பாரெனில், இவன் பந்து சனங்களால் இகழ்ந்து வசை கூறப்படுவான். அந்தப் பாவக் கோள்களுடைய திசைகளிலே என்றவாறு.

## கொடுமையான தொழிலை உடையவன்

165. நெடிதா கியநா சத்ததி பதிரா குவும்கூடி
படிமே வியனா சத்தினிற் பத்தா திபன்நிற்க
வடிவேல் விழிமட வாயிலை வசைஎய்த எந்நாளும்
கொடியோ னெனவெகு துக்கிகுச் சிதமுற்
றிடுகோதாய்!

(இ-ள்.) பன்னிரண்டாம் உடைய கோள் இராகுவுடன் கூடி இருக்க, பத்தாம் இடத்திற்கு அதிபன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன் எந்நாளும் கொடுமைத் தொழில் செய்து, வெகு துக்கியாகி, பாக்கியவானான் என்றவாறு.

## தீய தொழிலை உடையவன்

16. கோதாய்! தொழிலிறை ஏழிடம் குறுகச்
சனிகுசன்றான்
தீதாய் எதிர்நோக் கெய்தினும் கூடித் திறமுறினும்
போதேழி டம்நா தன்பவக் கோளைப் பார்க்கக்கூட
கோதிய நானாஞ் சுகமில்லை தொழிலிப்
படிஇயலே.

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு உடைய கோள், ஏழாம் இடத்தில் இருக்க, அவனைச் சனி, செவ்வாய் நோக்கினும் கூடினும் ஏழாம் இடம் உடைய கோள் பாவ, நீச, மூட, க்ஷீரணருடனே கூடி இருக்கினும் நோக்குப் பெறினும், மகா மோக வலையில் மூழ்கி துர்க்கர்மியாய் இருப்பான் என்றவாறு.

## நல்லதொழில் செய்பவன்

167. இயலக் கனம்இ ராசிமக் கோள்ஏழா மிடம்தீக்கோள்
அயலநின் றிடப்புகர் மந்தனோ டணுகித்
தினமிசைவேம்
பயிலன் றியலக்க னாதிபந் கடுங்கோ ளுடன்மருவ
செயலன் றியவா நின்சுகம் அல்லால் தெரிகிலனே.

(இ-ள்.) பத்தாம் இடத்திற்கு ஏழாம் இடத்திற் பாவக்கோள் நிற்க, சுக்கிரன் சனியுடனே கூடி வலிமை பெற்று நிற்க, சென்ம இலக்கனாதிபனும் பாவக்கோள்களுடனே கூடி இருக்குமாயினும், நோக்கினும் இவன் எந்நாளும் வேண்டிய வலிமையுடன் நல்லதொழில் செய்வான் என்றவாறு.

## பாக்கியவான்

168. தெரிதுங்க ராசித் தலம்லக் கனப்பதி ஆட்சிஉச்ச
பரிவொன் றியதொழில் நலமுறப் பாக்கியா
திபன்தானும்
வருபத் திடம்எய் திலச்சுதர் வளர்பாக்
கியமேன்மேல்
உசிதொன் றியமே லாஞ்சசி பலமாய்ந் துரைபகரே.

(இ-ள்.) பத்தாம் இடமுடைய கோள், நட்பாட்சி உச்சங்களிலே இருக்கினும், இந்தப் பத்தாமிடம் எத்தகையதாகினும், பாக்கியத் தானமாகிய ஒன்பதாம் இடத்துக்கு உடையவன் பத்தாம் இடத்தில் வலிமை பெற்றிருக்கினும் இவன் மகாபாக்கியவானாகி இருப்பான். இவை சந்திரனுடைய பலம் பார்த்துச் சொல்லவேண்டும் என்றவாறு.

## நல்ல தொழிலுடைய செல்வன்

169. புகரேரு தயமன் பத்திடம் பற்ற பதிலிறைவன்
புகுமாம் உதயத் தெய்திட கோணேகேந் திரம்புறத்தே
மிகநல் லவருறை வாரெனில் மிகவும் அனுகூலம்
மருவும் சுகமிக எய்திட வாழும் மிகத்தானே.

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு உடைய கோள் பத்தாம் இடத்தினில் இருக்க, பத்தாம் இடத்திற்கு உடையவன் சென்ம இலக்கனத்தில் இருக்க, சுபக்கோள்கள் திரிகோண கேந்திரங்களில் நிற்பாராகில், இவன் சுகசீவனம் (நல்ல தொழில்) செய்து சீமானாக (செல்வனாக) வாழ்வான் என்றவாறு.

## பாக்கியவான்

170. விளங்கும் தொழிலிறை நல்வலி மேவத்
தொழிலதனில்
இளங்கும் கதிர்சுரர் மந்திரி ஒருமித் திரமுயன்றே
வழங்கும் தனதானி யாதிகள் பவுசா திகள்அணிகள்
செழுங்கும் முலையுட யாயிவந் திரமாம்
இதந்தெரியே.

(இ-ள்.) பத்தாம் இடம் உடைய கோள் வலிபெற்று, நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று இருக்க, பத்தாம் இடத்தில் ஆதித்தனும் (சூரியன்) வியாழனும் (குரு) இருக்கில், வேண்டிய தனதான்ய சௌபாக்கியாதிபதியாகி ஆடை ஆபரணங்கள்பெற்று, பொருள்சம்பாத்தியம் உடையவனாக வாழ்வான் என்றவாறு.

### சோம்பேறியாகத் திரிபவன்

171. ததமுத்த முற்றிய ஆதித்த னும்அத் தலமெய்த
அதனைக் குசன்ராகுச் சமண ணுக பிறர்காண
நதிமுத்திற் எதிர்நிற் கினுமுட நிற்கி னுங்கதுவி
பதமுற்ற பெண்அணை யத்தொழில் பயில்வார்
எனப்பகரே.

(இ-ள்.) பத்தாம் இடத்தில் ஆதித்தன் இருக்க, அவனைச் செவ்வாயாவது, சனியாவது, இராகு கேதுக்களாவது கூடினும் நோக்கினும் இவன் சதாகாலமும் பெண்கள் போகத்தனாகி மிலேச்சனாகிப் பிற இடங்களில் திரிவதே அல்லாமல், தொழில் எதனையும் செய்யாமல் வீணாதி வீணனாகத் திரிவான் என்றவாறு.

### பகைவரால் மரணம் அடைபவன்

172. பகரும் தொழிலிறை ஆரவிய விடஅட் டமம்பற்ற
திகளஷ் டமநா தன்ப வன்சேர்ந் தொழிலிசைவன்
முகுலக் கனமுற வன்னமன் சனியோ டுறவியமன்
நிகரும் தலமுற இச்சிசு சத்துருக் கிறையாமே.

(இ-ள்.) பத்தாம் இடம் உடையகோள் பாவக்கோளுடனே கூடி அஷ்டமத்தில் இருக்க, அந்த அஷ்டமாதிபதியும் பாவருடனே கூடி பத்தில் இருக்க, அந்தப் பத்துக்கு உடையவன், இலக்கனாதிபன் சனியுடனே கூடி இருக்க அல்லது பன்னிரண்டிலே இருக்கினும் இவன் சத்துருவால் மரணம் அடைவான் என்றவாறு.

பத்தாம் பாவம் முற்றும்

# பதினோராம் பாவம்

## செல்வம் வரும் காலம்

173. ஆயத்தின் குடியில் மிகத்தன னாய கன்அழகாய்
நேயத் துடன்கேந் திரம்புக நிற்கில் குருச்சியாய்
ஆய்ந்த லித்தனை நோக்கினும் தியாக துவித்ததனைத்
தாயத் தெதிர்குரி லாய்த்தமை யைந்தையைந்
தினிலாமே.

*(இ-ள்.)* பதினோராம் இடம் 'குடியஸ்தானம்' என்றும், 'இலாபஸ்தானம்' என்றும், 'கமன ஸ்தானம்' என்றும், 'ஏகாதசத் தானம்' என்றும் சொல்லப்படும். இந்தப் பதினோராம் இடத்திற்கு உடையகோள், குடும்ப ஸ்தான மாகிய இரண்டாம் இடத்தில் இருக்க, இந்த இரண்டாம் இடத்திற்கு உடைய கோள் கேந்திர ஸ்தானங் களில் வியாழனுடன் சந்திரன் சம்பந்தமாகி, பதினோராம் இடத்தை நோக்கினும், இரண்டாம் இடம் உடைய கோள், சந்திரன் வலிபெற்று நிற்கினும் கூடினும் இவனுக்கு இருபத்து ஐந்து வயதிற்குமேல் சம்பத்து உண்டாம் என்றவாறு.

## ஆயிரம் பொன் சம்பாதிப்பவன்

174. இலாப திரிகோ ணங்களில் கேந்திரங் களில்நண்ண
தேவர்க் குருமுதல் உத்தமர் சேரப் பெறில்நோக்க
பாவித் தெதிர்பெற வர்த்தவில் லாபம் சகத்திரபொன்
மேவப் பெறுமிகு பத்திரு மூன்றில் பெறுவானே.

*(இ-ள்.)* இலாபத்தானமாகிய பதினோராம் இடத்திற்கு உடைய கிரகம், திரிகோண கேந்திரங்களிலாவது இருக்கினும்,

வியாழன் முதலாகிய சுபக்கோள் நோக்கினும், இவன் இருபத்தாறு வயதிற்குமேல் ஆயிரம்பொன் சம்பாதிப்பான் என்றவாறு.

### *பாக்கியவான்*

*175.* பெறுலா பந்தன்ன மேவிவிந் தனுதா
னவன்பலன்பெற்
றுறுமாகில் ஒன்பதில் வெள்ளி நின்றிட
வருபுதல்வன்
நிறுபா னதினைந் தாயிரம் தனலாபம் தனமடைவன்
உறுமன் னவர்திசை வந்திட வேயென் றிவையுளனே.

*(இ-ள்.)* இலாபத்தானமாகிய பதினோராம் இடத்தில் வியாழன் பலம் பெற்று இருக்க, தனத்தானமாகிய இரண்டாம் இடத்தில் சந்திரனும் பலம் பெற்று இருக்க, சுக்கிரனும் பலம் பெற்று, பாக்கியத் தானமாகிய ஒன்பதாம் இடத்தில் இருக்கில், இருபது வயதிற்குமேல் பாக்கிய சம்பன்னனாவான் என்றவாறு.

### *செல்வன், கீர்த்தியை உடையவன்*

*176.* உண்ணும் பதினொன் றெனும்பதி லுயர்பொன்
னன்வலிபெற்
றண்ணும் புகர்வளர் சந்திரன் தன்னோ
டுறப்பொருந்தி
அன்றைக் குரதன தானிய இலாபங் களும்மிகவே
என்னும் திருவுடை யோனெனச் சொல்வார்
உலகினிலே.

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்குப் பதினோராம் இடத்திலாவது ஒன்பதாம் இடத்திலாவது வியாழன் வலிமை

பெற்று இருக்கில், சுக்கிரனும் சந்திரனும் கூடி வலு பெற்றுச்சுபத்தானங்களில் இருக்க, இவன் மேன்மேலும் தனதானிய இலாபாதிகள் பெற்று பூலோகமெல்லாம் புகழ்பெற்று வாழ்வான் என்றவாறு.

## செல்வமும் புகழும் உடையவன்

177. உலகோர் புகழுத யத்தில் இலாபா தினுறவே
தலமேவு மலர்பத் தினிலுசை யாதி பன்சாரில்
நலமே வியதன லாபம் திருபா னுடன்சேர
அலகே ஒருமூன் றாம்வய தளவின் மிகுபுவியே.

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்தில் பதினோராம் இடம் உடைய கோள் இருக்க, பதினோராம் இடத்தில் இலக்கனாதிபன் பலம்பெற்று இருக்குமெனில், இவனுக்கு இருபத்து மூன்று வயதிற்குமேல் செல்வமும் கீர்த்தியும் பூமி இலாபமும் உண்டாகி வாழ்வான் என்றவாறு.

## ஆயிரம் பொன் உடையவன்

178. புவிமேல் உதயத் தேழிறை இலாபத் தலம்பொருந்தி
நவைதீர் பதினொன் றாமிறை ஏழாம் இடம்நண்ணத்
தவிரா துருசுப சோபனப் பொருட்டால்
சுதன்தன்னால்
புவியோர் சசியத னால்வரும் தனமா
யிரம்பொன்னே!

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்கு ஏழாம் இடம் உடைய கோள், பதினோராம் இடத்தில் இருக்க, பதினோராம் இடம் உடைய கோள், ஏழாம் இடத்தில் இருக்க இவனுக்குச் சுயமூலமாகவும் பிற காரியங்களாலும் பலதொழில் விவசாயங்களாலும் அத்தம் ஆயிரம்பொன் தேடுவான் என்றவாறு.

179. பொன்னே தைரிய நாயகன் பொருந்த
பதினொன்றில்
நன்னாய் அதனுட நாயகன் பிராது பதிநண்ண
அன்னா ளிலுதித் தேன்பல வஸ்திரா பரணங்கள்
பொன்னா யிரம்பிரா துக்களால் வருமென்
றுரைபுகலே.

(இ-ள்.) தைரியத்தானமாகிய மூன்றாமிடம் உடைய கோள் பதினோராம் இடத்தில் இருக்க, அந்தப் பதினோராம் இடத்திற்கு உடையகோள் பிராதுத் தானமாகிய மூன்றாம் இடத்தில் இருக்கப் பிறந்தவன், சகோதரர்களாலே அநேக ஆடை ஆபரணாதிகள் முதலான ஆயிரம் பதினாயிரம் திரவியம் சம்பாதிப்பான் என்றவாறு.

பதினோராம் பாவம் முற்றும்

## 12. பன்னிரண்டாம் பாவம்

### நரகத்தை அடைபவன்

180. புகலும் பனிரெண் டாமிடம் இராகு பொருந்திடவே
திகழும் குசன்சனி சூரியன் சிறந்தெய் திநிறைவன்
நிகழும் மதியத னோடுறத் தெரியும் மதியுறினும்
இகழும் பவநா சதிசை எய்தும் எனவுரையே..

(இ-ள்.) பன்னிரெண்டாம் இடத்திற்கு 'வியத்தானம்' என்றும், 'நரகத்தானம்' என்றும், 'பாவத்தானம்' என்றும், 'துரிதத்தானம்' என்றும், 'சயனத்தானம்' என்றும் சொல்லப்படும். இந்தப் பன்னிரண்டாம் இடத்தில் சேய், சனி, இராகு, சூரியன் இவர்களில் ஒருவராவது இருக்க அல்லது நோக்க, இந்தப் பன்னிரண்டாம் இடம் உடையக்கோள்

சந்திரனோடும் கூடி க்ஷீரண சம்பந்தச் சந்திரனாய் இருக்கினும், இவன் எந்நாளும் பாவக்காரியங்களைச் செய்து நரகத்தை அடைவான் என்றவாறு.

## பொருள் அழிவு

181. அரையும் வெயந்தனில் அந்தண னடைய
சுபர்நோக்க
நிரையும் தனம்தர் மத்துறு நெட்டூர உறுப்பனத்தால்
விரைதங் கனின்வயி ரங்கொடு மழிப்பன்
தொழில்தனிலும்
குரையும் தனமென மேயிவை குறிப்பாய்
அறிந்துரையே!

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்தில் வியாழன் இருக்க, அந்த வியாழனைச் சுபக்கோள் நோக்கில் இவன் தேடிய பொருள், தர்மத்தாலும் இராசாக்களாலும் துர்மார்க்கங் களாலும் அழிவாகும் என்றவாறு.

## தர்மவான்

182. கூறும் வெயநா தன்இலக் கனமே விடக்குறித்தே
தேறும் இலக்கன நாயகன் வியந்சேர்ந் திடங்கூறு
வீறொன் றியபிரு கில்புத னதுகண் டிடிலத்தம்
ஈரின் றியதரு மந்தனில் இனிதாம் படியுறையே!

(இ-ள்.) பன்னிரண்டாம் இடம் உடையகோள் சென்ம இலக்கனத்தில் இருக்க, சென்ம இலக்கனாதிபன் பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, இவனைச் சுக்கிரனாவது புதனாவது இலக்கனத்தையும் இலக்கனாதிபனையும் பார்க்கினும் இவன் தேடியபொருள் தர்மங்களால் செலவாகிப் புண்ணியம் உண்டாம் என்றவாறு.

## பிணிகளால் கேடுறுபவன்

183. இழிவாகி அட்டம நாயகன் கடுங்கோ
ளுடனிசைந்தே
பழிபாதகமெட் டாமிடம் பற்ற சுபர்காண
கொழிவா ரெனிலுறு செய்பிணி யுறுமே
வயதொருமூன்
றளவே திசையப காரமும் வலியும் அறிந்துரையே.

(இ-ள்.) ஏழாமிடத்திற்கு உடைய கோள் பாவருடனே கூடி, எட்டாமிடத்தில் பாவக்கோள் இருக்க, இவர்களைச் சுபக்கோள் நோக்கார் எனில், இவனுக்கு மூன்றாம் வயதிலும் அந்தப் பாவக்கோளுடைய திசையில், அபகாரங்களில் பிணிகளாலே கேடுண்டாம் என்றவாறு.

## புகழுடையவன்

184, அறிவாம் வெயம்கே துப்புகர் வானோர் குருவவனை
உரிநோக் கினில்வெய லாபமன் னுதயம் புகுமாகில்
நெரியா மதியெனில் சுதன்நீள் செல்வம் பன்னாளும்
அறிவா கியசுப கர்மநல் லரத்தச் சிதனாமே!

(இ-ள்.) பன்னிரண்டாம் இடத்தில் கேது இருக்க, வியாழன் பார்க்கினும், அவனைக் கூடியிருக்கினும், வெயாதிபன் உதயத்தினில் இருக்கினும் நோக்கினும், சந்திரன் வளர்பிறையாய் பலம்பெற்றுச் சுக்கிரனோடே கூடுகினும் நோக்கம் பெறினும் அல்லது கேந்திரத் தானங்களிலே இருக்கினும் இவன் பூலோகப் பிரசித்தனாகி, அபிமானமுடையவாகி அறிவுடையவனாக விரோத மில்லாமல் வாழ்வான் என்றவாறு.

## அனைத்திலும் சிறந்து விளங்குபவன்

185. ஆமோ தயநா தன்வலி எய்தப் புகர்விலமாய்த்
தாமே வின்நோக் கம்பெற கேந்திரத் தலமத்தில்
ஓமே வுறல்லோ ரெய்திட உதிக்கும் சுதனியல்புற
றாமே கம்லோ கத்தபி மானத் திரவலுவும்.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் வலி பெற்று, பலம் பெற்ற சுக்கிரஏனோடு கூடி இருந்தாலும் நோக்கம் பெற்று இருந்தாலும் அல்லது கேந்திரத் தானங்களிலே இருந்தாலும் அல்லது சுக்கிரன் நோக்கனாலும் இவன், லோகப் பிரசித்தனாகி, அபமானம் உடையவனாகி அறிவுடையவனாக விரோதமில்லாமல் வாழ்வான் என்றவாறு.

## மன்னன் சமானன்

186. வலுவாய் உறுபிணி நோய்அவ மிருத்துப்
பவவர்க்கம்
மெலிவாய் நவில்தீர்க் காயுவு மேன்மைப்
பலவிதமும்
வலிவாய் மிகுசாற் மிகநற் சதிணமும் சுகவகையும்
சலுவார்த் தையும்மதி மன்னவன் சமனெய்
துனற்றிருவே.

(இ-ள்.) சென்ம இலக்கனாதிபன் வலிபெற்றுச் சுக்கிரனுடன் கூடினும் அல்லது நோக்கம் பெறினும் அல்லது கேந்திரத் தானங்களிலே இருந்து பார்க்கினும், சுபக்கோள்கள் கேந்திரங்களிலே இருக்கினும் அல்லது சுபக்கோள்கள் நோக்கம் பெறினும், வியாதிகளால் விதனப்படாமல் அபமிருத்துக்களால் நலியாமல் வெகு ஆரோக்கியவானாய்த் தீர்க்காயுளோடு கூடி சற்குண பரிபாலனாகிச் சுகசீவனம்

செய்து, யாவர்க்கும் செயவாக்கு உடையவனுமாகி, புத்திர களத்திரிகளோடு, சற்குணவானாகி இராசாக்களுக்குச் சமானமாகி வாழ்வான் என்றவாறு.

பன்னிரண்டாம் பாவம் முற்றும்

மாமறை வாழி கேயவ்ஏ
வாணவன் வாழி வாழி
கோமள விசய வள்ளி
கொழுனனும் குகனும் வாழி
நான்முகன் கமல தேவி
நளினபொற் கழல்கள் வாழி
பாமலி கவிஞர் செஞ்சொற்
பனுவலும் வாழி வாழி.

## பாடல் முதற்குறிப்பு அகராதி

எண்: பாடல் எண்


| | | | |
|---|---|---|---|
| அங்காரகன் பணி | 24 | ஆயும் இலக்கன | 125 |
| அதமக் கதிர்மதி | 7 | இசைத்தன்ன மனதுடை | 154 |
| அதன்மூன் றிறைபலம் | 21 | இசையும் சனிஅங்கி | 85 |
| அதுஅஞ் சமனா | 97 | இசைலக் கனமன | 114 |
| அதுகீர்த்தி யில்சரி | 160 | இடலக் கனம்தனி | 5 |
| அந்தப் பனிரெண்டாம் | 140 | இருகேந் திரகோ | 118 |
| அரிமான மதுடை | 152 | இதிலாப மதியிறை | 132 |
| அருனைந் திரம்இரா | 50 | இயங்காறா தியநா | 36 |
| அரைஅஷ் டமங்கதிர் | 135 | இயங்கும் சகோதர | 25 |
| அரையும் குரும்பா | 15 | இயம்பும் குருவிற் | 51 |
| அரையும் வெயந்தனில் | 181 | இயம்பும் சனியை | 94 |
| அவனத் தலமுற | 128 | இயலக் கனம் இரா | 167 |
| அவன்தார மன்னு | 86 | இயலொன்று சுவர்க்கம் | 27 |
| அழிவான் குளிகன் | 52 | இலகவா கனசுக | 28 |
| அறிவாம் வெயம் | 184 | இலாப திரிகோ | 174 |
| அற்ப சுகதா | 91 | இழிவாகி அட்டம | 183 |
| அன்னைப் பதியிறை | 30,38 | இவனெய்தும் குடும்பம் | 17 |
| ஆசின் றியமரு | 153 | இவன்மூன் றினில்பிராது | 20 |
| ஆஞ்சத் துருத்தா | 66 | இவையும் வியநா | 134 |
| ஆமே குருபுகர் | 4 | இனிஒன் பதிபன் | 130 |
| ஆமோ தயநா | 2, 185 | இனிதா கியமூன்றொ | 159 |
| ஆயத்தின் குடியில் | 173 | உண்ணும் பதினொன் | 176 |
| ஆயு மரிபுத்தா | 65 | உதயாதிப னெனினும் | 1 |

உரகத் துடனெ 95
உரிதாம் சுகதன 33
உரைக்கும் சுதத்தா 119
உரையும் உதய 61
உலகோர் புகழ 177
உறுஅட்ட மத்தன 107
உறும் ஒன் பதிலக்க 162
எண்ணஷ் டமநா 117
எண்ணும் உதய 137
எண்ணுமைந் தின்நாதன் 49
எண்ணும் வியத்த 26
எய்தும் களத்திர 113
எய்தும் சுதன்தனை 62
எய்தும் தனனா 12
எய்தோதய நாதன் 9
எய்தும் பவரோ 74
எழுமுதய நாதன் 108
எனபஞ் சமத்தே 63
எனும் தானமதனு 81
ஏகா தேச 96
ஒன்றும் தனலா 11
ஓதும் சிசுமன் 55
கதுவேழின் நாதன் 105
கருதட்ட மதனி 109
கன்மாதி பன்உத 156
கன்று பரிபுத்தா 76
காட்டும் சுபக்கிர 19
குடும்பா திபனு 16
கூடி இருக்கினும் 112
கூறஞ் சின்தா 44
கூறும் இலக்கன 148
கூறும் சிசுஒன் 56
கூறும் தனநாதன் 106
கூறும் வெயநா 182
கேளாத் தொழிலிறை 151
கொடியோர்க ளவ்வா 71
கோதாய் தொழிலிறை 166
சாரும் பரிமோ 145
சாறெட் டிறைஆ 78
சாற்றும் கதிர்புகர் 93
சாற்றைந் தினில்நா 46
சுகநா யகன்புகர் 31
சுதன்பாக் கியநா 129
செப்பும் கதிரவன் 40
செப்பும் பனிரெண் 89
செப்பும் மகத்தா 53
செப்பென் பதற்கே 141
செயசன்மம் தேய 157
சொல்லே ழிடம்சனி 83
சொல்லொன் பதினாய் 121
சொல்லொன் பதினிடம் 110
சொல்லொன் 149
தக்கோர் புகழ்இராகு 47
தகுமாறன் அட்டம 69
தகுமொன் பதன்இறை 131
தசமதனிற் கொடியோர் 164

| | |
|---|---|
| ததழுத்த முற்றிய | 171 |
| தத்தும் களத்திர | 99 |
| தலையெட் டினுக்கே | 142 |
| தனநா தன்கேந் | 10 |
| தனமாம் பதிபுகர் | 14 |
| தனயன் சுகநா | 32 |
| தாராபதி யதனிற் | 92 |
| தானெய்தில இருக்க | 77 |
| திரிகோ ணங்களில் | 22 |
| திருமே வியமத | 102 |
| திற மா கியசுப | 101 |
| திறமாம் சுபசம் | 70 |
| தூயோன் பதினிறை | 146 |
| தெரிதுங்க ராசி | 168 |
| தொழிலா திபன்நீ | 150 |
| நலமாகிய நாலா | 29, 42 |
| நலமாம் தனத்திறை | 60 |
| நலியொன் பதின்இறை | 138 |
| நவிலும் வியரா | 75 |
| நவிலொன் பதினிறை | 143 |
| நவிலோ தயம்பனி | 54 |
| நவைதிரு சத்தம | 79 |
| நாடும் சுதபாக் | 58 |
| நிகழ்த்தும் களத்திர | 88 |
| நிகழா றிடமதன் | 163 |
| நவலொன் பதின்இறை | 124 |
| நெடிதா கியநா | 165 |
| நேத்திரா திபன்பலம் | 18 |
| பகரும் தொழிலிறை | 172 |
| பகரும் புகர்சேய் | 84 |
| பயமாம் சலரா | 68 |
| பயில்உ தயமன் | 98 |
| பலமாம் பதியுச் | 57 |
| பவநட் புறதன் | 6 |
| பாக்கியா திபன்வலி | 123 |
| பாலன் தனத்தான் | 8 |
| பிதற்றும் வேயமன் | 136 |
| பிதுர்க்கா ரகன்உர | 139 |
| புகரே ருதயமன் | 169 |
| புகலுச்சம் நட்பா | 39 |
| புகழும் குருபுதன் | 45 |
| புகழும் பனிரெண் | 180 |
| புகழ்ச் சுங்கன் ஒன்ப | 111 |
| புத்திராதி இல்லா | 80 |
| புவிமேல் உதய | 178 |
| பெரியோர் பிராதுற | 23 |
| பெறுலக் கனநா | 3 |
| பெறு லாபந்தான் | 175 |
| பேசும் புகர்சர | 87 |
| பேசும் மகத்தா | 59 |
| பொன்னே தைரிய | 179 |
| போதும்சுக நாதன் | 34 |
| மணமெய் தியநா | 112 |
| மதத்தா னத்தில் | 82 |
| மருவும் இலக்கன | 67 |

மனையெட்டின் கேந்திரம் 116
மாதே குடிரி 103
மிருமேழ் காரகன் 100
முதலக் கனமா 133
முனியும் தொழிலிறை 41
மேவும் பிதுர்த்தா 144
மொழிஎட் டிறைசுபம் 35
மொழியஞ் சினில்இறை 43
மொழியஷ் டமந்தனில் 120
மொழியும் இலக்கன 104
வசைகூ ரருமா 37
வரித்தும் திரிகோண 155
வலிபெற் றுயஉச்ச 147
வலியெய்த இலக்கன 161
வலுவா உறுபிணி 186
வழுத்தும் புகர்க்கே 115
வழுத்தும்மகபதி 64
வளரொன் பதின்இறை 127
வாகாம் குருத்தா 122
வாழ்வெய்தும் ஒன்பதின் 126
விதியா குமிகா 72
விளங்கும் தொழிலிறை 170
விளம்பா றிடம்சுபர் 73
விள்ளும் மகத்தா 40
வேதம் பயில்சட்டா 131

## பின்னிணைப்பு: 1

### 1. நட்சத்திரங்களின் வெவ்வேறு பெயர்கள்

#### 1. அசுபதி

1. அற்பசி 2. குரலை 3. கிள்ளை 4. குதிரை 5. கொக்கு 6. சென்னி 7. துரகம் 8.பரி . மா 10. முன்னாள் 11.வாசி

#### 2. பரணி

1. அடுப்பு 2. சுட்டுதல் 3. கங்குல் 4. கிழவன் 5. சுசிதவம் 6. சோறு 7. இறால் 8. தாழி 9. பூதம்

#### 3. கார்த்திகை

1. அங்கி 2. அழகு 3. அழல் 4. அறுமீன் 5. ஆரல் 6. ஆவி 7. இறால் 8. ஏரி

#### 4. உரோகணி

1. உருள் 2. ஐமீன் 3. சகடு 4. சாகாடு 5. தேருருளை 6. பண்டி 7. பார் 8. வையம்

#### 5. மிருகசீரிடம்

1. ஐந்தானம் 2. நரிப்புறம் 3. மகசிரம் 4. மதிப்பேராளன் 5. மார்கழி 6. மான்தலை 7. மான்முகம் 8. மிருகவதனம்

#### 6. திருவாதிரை

1. இறை 2. உருத்திரன் 3. சிவன் 4. செங்கை 5. யாழ் 6. வில்

## 7. புனர்பூசம்

1. ஆவணம் 2. கடை 3. கண் 4. கரும்பு 5. கார் 6. திகிரி 7. திரள் 8. பிண்டி 9. மாலை 10. மூங்கில் 11. விண்டல்

## 8. பூசம்

1. அசுரர் 2. குடம் 3. குரு 4. குளம் 5. கொடிறு 6. தரா 7. தை 8. பார் 9. புனீ 10. மதி

## 9. ஆயிலியம்

1. அரவு நாள் 2. கங்கை 3. பாம்பு

## 10. மகம்

1. எழிலி 2. கலப்பை 3. ஞமலி 4. கொடிநுகம் 5. ராஞ்சில் நுகம் 6. மாசி 7. முற்சரை 8. வாய்க்கால் 9. வேட்டுவன்

## 11. பூரம்

1. ஆகு 2. இடைச்சனி 3. உமை 4. எலி 5. சிலை 6. துர்க்கை 7. நாவிதன் 8. பெருச்சாளி

## 12. உத்திரம்

1. கடைச்சனி 2. குளம் 3. தடாகம் 4. பங்குனி 5. பாற்குளம் 6. வாவி

## 13. அஸ்தம்

1. ஆரோகி 2. உத்தமன் 3. களிறு 4. கைமீன் 5. தரு 6. நவ்வி 7. பிரபலன் 8. வளர்கம்

## 14. சித்திரை

1. அம்பரம் 2. ஆடை 3. ஒலியல் 4. கன்னி 5. நீவி 6. நெய்மீன் 7. பயறு 8. வஸ்திரம்

## 15. சோதி

1. கமலம் 2. கோகனம் 3. சுடர் 4. தீபம் 5. பதுமம் 6. மரக்கால்

## 16. விசாகம்

1. சுளகு 2. முறல் 3. முற்றில் 4. வைகாசி

## 17. அனுடம்

1. தாளி 2. தாழி 3. தேள் 4. நிலம் 5. பனை 6. புள் 7. பெண்ணை 8. போந்தை

## 18. கேட்டை

1. அதம் 2. அரி 3. ஆளி 4. கிடம் 5. துளங்கொளி 6. வல்லாரை

## 19. மூலம்

1. அசுரர் 2. அவுணர் 3. ஆனி 4. இராக்கதர் 5. குருடு 6. கொக்கு 7. தேட்கடை

## 20. பூராடம்

1. அறல் 2. கோ 3. குளம் 4. நீர் 5.பயம் 6. புனல் 7. பொய்கை 8. வாவி

## *21. உத்திராடம்*

*1. ஆடி 2. ஊர்தி, 3. கூவல் 4. நீர்க்குளம் 5. மணிமுடி 6. முடி 7. முதம் 8. மூர்த்தம்*

## *22. திருவோமம்*

*1. இரட்சகன் 2. உலக்கை 3. சிரவணம் 4. சீதரம் 5. சோனை 6. மாதவன் 7. மால்மயன்*

## *23. அவிட்டம்*

*1. ஆவணி 2. காக்கை 3. பறவை 4. புள் 5. வீ*

## *24. சதயம்*

*1. ஆலை 2. காணம் 3. குன்று 4. சுண்டன் 5. புரட்டை*

## *25. பூரட்டாதி*

*1. குஞ்சம் 2. கொழுங்கோல் 3. நாழி 4.படி 5. புரட்டை*

## *26. உத்திரட்டாதி*

*1. அரசு 2. அறிவன் 3. கோ 4. பறை 5. முரசு 6.மன்னவன் 7. வேந்தன்*

## *27. ரேவதி*

*1. ஓடம் 2. கடைமீன் 3. தாலம் 4. தோணி 5. நாவாய் 6. பாதை 7. மரக்கலம்*

# இராசிகளின் வெவ்வேறு பெயர்கள்

## 1. மேடம்

1. ஒரு 2. கொச்சை 3. தகர் 4. மதி 5. மெல்லை 6. மேழகம் 7. மொத்தை 8. வருடை 9. வற்காலி

## 2. இடபம்

1. ஆன் 2. எருது 3. ஏறு 4. குண்டை 5. சே 6. பாண்டில் 7. புல்லம் 8. விடை

## 3. மிதுனம்

1. கதை 2. கவிஞன் 3. தண்டு 4. தாரம் 5. தொத்துவம் 6. மைதுனம் 7. வீணை 8. யாழ்

## 4. கடகம்

1. அலவன் 2. கார் 3. கொண்டல் 4. சேக்கை 5. நண்டு

## 5. சிம்மம்

1. அரிமா 2. கடுவன் 3. காண்டீரவம் 4. கோண்மா 5. சீயம், 6. புலி 7. மாலைமா 8. மிருகரசு

## 6. கன்னி

1. கரந்தை 2. சேடி 3. தெரிவை 4. பெண் 5. மாது

## 7. துலாம்

1. கட்டளை 2. கோல் 3. செட்டி 4.துலை 5. தூங்கல் 6. நிறைகோல் 7. வணிகன்

## 8. விருச்சிகம்

1. கீடம் 2. துடர்மணி 3. துட்டம் 4. துட்டன் 5.தெலுக்கால் 6. புன்தேன் 7. விட்டன்

## 9. தனுசு

1. காண்டீபன் 2. கார்முகம் 3. சராசரனம் 4. சிலை 5. வில்

## 10. மகரம்

1. கலை 2. கேது 3. சுறா 4. நக்கிரம் 5. புல்வாய் 6. மான்தலை

## 11. கும்பம்

1. கலசம் 2. கடகம் 3. குடம் 4. சாடி 5. சால்

## 12 மீனம்

1. கயல் 2. கெண்டை 3. சேல் 4. மிருது 5. மீன் 6. ரோகம்

# நவக்கிரகங்களின் வெவ்வேறு பெயர்கள்

## *1. சூரியன்*

1. அகர்பதி 2. அசீதகரன் 3. அண்டயோனி 4. அரி 5. அரியமா 6. அருக்கன் 7. அருணன் 8. அலரி 9. அழலோன் 10. அனலி 11. ஆதவன் 12. ஆதி 13. ஆதித்தன் 14. ஆத்மன் 15. ஆயிரஞ்சோதி 16. இரவி 17. இருள்வலி 18. இனன் 19. உதயகாரகன் 20.அயிறிலி 21. எல் 22. எல்லவன் 23. எல்லி 24. எல்லோன் 25. என்று 26. என்றூழ் 27.ஏழ்பரியோன் 28. ஒளி 29. ஒளியோன் 30. கசன் 31. கதிரவன் 32. கதிரோன் 33. கதிர் 34. கனலி 35. கிரகபதி 36. கிரணமாலி 37. சண்டன் 38. சவிதா 39. சாயாபதி 40. சாவித்திரன் 41. சான்றோன் 42. சித்திரபானு 43. சுடரோன் 44. சுடர் 45. சூரன் 46. செங்கதிரோன் 47. செஞ்சுடர் 48. சோதி 49. ஞாயிறு 50. தபனன் 51. தரணி 52. தமிராறி 53. திவாகரன் 54. தினகரன் 55. தினமணி 56. நபமணி 57. பகலோன் 58. பகல் 59. பங்கயன் 60. பதங்கன் 61. பதுமபானி 62. பரிதி 63. பார்க்கன் 64. பனிப்பகை 65. பாற்கரன் 66. பானு 67. பிங்கலன் 68. பிதுர்க்காரகன் 69. பிரபாகரன் 70. மணிமான் 71. மித்திரன் 72. முளறிநண்பன் 73. விகர்த்தனன் 74. விண்மணி 75. விருச்சிகன் 76. விரோசகன் 77. வெஞ்சுடர் 78. வெய்யவன் 79. வெய்யோன் 80. வெயில் 81. வேந்தன்

## *2. சந்திரன்*

1. அரிச்சிகன் 2. அமுதகிரணன் 3. அம்புலி 4. அலவன் 5. அல்லோன் 6. ஆலோன் 7. இந்து 8. இமகரன் 9. இமகரணன் 10. இராக்கதிர் 11. இனன் 12. உடுபதி

13. எல்லிநாதன் 14. கங்குக இறைவன் 15. கலாநிதி 16. கலையினன் 17. களங்கன் 18. குபேரன் 19. குமுதநண்பன் 20. குரங்கி 21. சசி 22. சீதன் 23. சுதாகரன் 24. சோமன் 25. தன்சுடர் 26. தண்ணவன் 27. தாராபதி 28. தானவன் 29. திங்கள் 30. நிசாகரன் 31. நிசாபதி 32. நிலவு 33. பனிக்கதிர் 34. பிறை 35. மதி 36. மாதுர்க்காரகன் 37. முயலின் கூடு 38. விது 39. வீபத்து 40. வெண்கதிரோன்

## 3. செவ்வாய்

1. அங்காரகன் 2. அரத்தன் 3. அழலவன் 4. அழலோன் 5. அழல் 6. அறியவன் 7. ஆரல் 8. உலோகிதன் 9. உதிரன் 10. குசன் 11. குருதி 12. சேய் 13. நிலமகன் 14. பௌமன் 15. மங்கலன் 16. வக்கிரன்

## 4. புதன்

1. அருணன் 2. அறிஞன் 3. அனுமதி 4. கணக்கன் 5. சவுமன் 6. சாமன் 7. சௌமியன் 8. தூதுவன் 9. தேர்ப்பாகன் 10. நட்சத்திர நேமி 11. நிபுணன் 12. பச்சை 13. பண்டிதன் 14. புந்தி 15. புலவன் 16. மதிமகன் 17. மாதுலக்காரகன் 18. மாலவன் 19. மால் 20. மேதை

## 5. குரு

1. அந்தணன் 2. அமைச்சன் 3. அரசன் 4. குரு 5. சிகிண்டிசன் 6. சீவன் 7. சுரர்குரு 8. தேசிகன் 9. தேவமந்திரி 10. பிரகஸ்பதி 11. பீதகன் 12. புங்கவன் 13. பொன் 14. பொன்னவன் 15. மந்திரி 16. மறையவன்

## 6. சுக்கிரன்

1. அசுரகுரு 2. ஏநாவிலன் 3. ஆசனன் 4. உசனன் 5. ஒள்ளியோன் 6. களத்திரக்காரகன் 7. கவி 8. காப்பியன் 9. காமன் 10. சல்லியன் 11. சீதகன் 12. சுங்கன் 13. பளிங்கு 14. பார்க்கவன் 15. பிரசுரன் 16. பிருகு 17. புகர் 18. புயல் 19. மழைக்கோள் 20. வெள்ளி

## 7. சனி

1. அஞ்சனன் 2. அந்தகன் 3. கதிர்மகன் 4. கரியவன் 5. காரி 6. கீழ்மகன் 7. சந்தில் 8. சவுரி 9. சாவகன் 10. சுன் 11. தமனியன் 12. நீலன் 13. நோய்முகன் 14. பங்கு 15. பங்குபாதன் 16. பாதங்கி 17. பிணிமுகன் 18. மந்தன் 19. முடவன் 20. முதுமகன் 21. மேற்கோள்

## 8. இராகு

1. அகி 2. இந்தரி 3. கருங்கோள் 4. தமம் 5. பிதாமககாரகன் 6. போககாரகன் 7. யோககாரகன் 8. மதிபகை

## 9. கேது

1. கதிர்பாகை 2. கதிருணி 3. கொடியன் 4. சிகி 5. செம்பாம்பு 6. ஞானி 7. மாதாமககாரகன் 8. மோட்சகாரகன்

## பின்னிணைப்பு: 2

### தஞ்சை சரசுவதி மகால் நூலக சோதிடச் சுவடிகளின் அகர வரிசை அட்டவணை

| நூலின் பெயர் | சுவடி எண் |
|---|---|
| 1. அகத்தியர் சாத்திரம் | 1568c |
| 2. அகத்தியர் தொடுகுறி சாத்திரம் | 870 |
| 3. அகத்தியர் பஞ்சபட்சி | 777 |
| 4. அகத்தியர் பட்சி சூத்திரம் | 1049 |
| 5. அகத்தியர் மணிக்கடை சூத்திரம் | 2011d |
| 6. அட்டவர்க்கம் | 802a |
| 7. அம்மணியம் | 2101 |
| 8. அலகுநூல் | 797b, 797f, 1573b |
| 9. ஆந்தை காதல் | 1573d |
| 10. ஆந்தை சீறல் | 741c |
| 11. ஆருடக் கெவுளி உரையுடன் | 807d |
| 12. ஆருட ஜோதிடம் | 1441 |
| 13. ஆருட பலன் | 2105g |
| 14. ஆருட திசை பலன் அறிய | 209 |
| 15. இடைக்காட்டார் பஞ்சாங்கம் | 1683c |
| 16. இடைக்காட்டார் வெண்பா | 850e |
| 17. இரண்டாம் பாவகப் பலன் | 784, 1951d |
| 18. இராகு காலம் அறியும்படி | 2020a |
| 19. இராசி ஆருடம் | 685 |
| 20. இராசி உரிச்சொல் அறிவது | 1682d |
| 21. இராசி நிலை | 1889g |
| 22. இராசி பலன் | 1747, 1946d |
| 23. இராம தேவர் சோசியம் | 1695a |
| 24. இராமதேவர் சோதிடம் | 802b |

25. உள்ளமுடையான் (நன்றோ தீதோ) 727, 918, 923, 1231
26. உள்ளமுடையான் 1718
27. உள்ளமுடையான் (சூடாமணி) 850a, 850g
28. உள்ளமுடையான் (நட்சத்திரமாலை) 666, 669
29. உள்ளமுடையான் வாக்கியம் 1682c
30. ஓரா சாத்திரம் 793
31. கயிறு போட்டுப் பார்க்கும் சுவடி 1752a, 1949a, 2041a, 2046
32. கர்ப்ப சிந்தாமணி 802f, 1053
33. கனவின் பலன் 2105d
34. காக்கை சாத்திரம் 741b
35. காணிய அலங்காரம் 2096b
36. காலச்சக்கரப் பலன் 802d
37. காலச்சக்கரம் 672, 671, 797, 1007b, 1008, 1986f
38. காலச்சக்கரம் (கிரந்த எழுத்து) 1446
39. காலப் பிரகரணம் 1229
40. கிரக சார கணிதம் 1743
41. கிரக நோக்கு 1683b
42. கிழமை பலன் 1721
43. குடும்ப நபர் பலன் 2105f
44. கும்பமுனி பட்சி சாத்திரம் 1015
45. குமார சாமியம் 1572b, 802e, 1007a, 913a
46. குருபுத்திரம் சரநூல் 771d
47. குளிகன் பலன் 850h
48. கூகைக் காதல் 1244
49. கணித அமிர்தம் 1904b
50. கெருடாரூடம் 879
51. கெவுளி காதல் 786, 741a, 800, 1542, 1795, 1818, 1949h, 1949i

| | |
|---|---|
| 52. கெவுளி சாத்திரம் | 685, 676, 1108, 1243, 1568a |
| 53. கெவுளி நூல் உரையுடன் | 795b, 800 |
| 54. கெவுளி பலன் | 807e, 1424 |
| 55. கௌரி பஞ்சாங்கம் | 724 |
| 56. கோடியுடுக்க | 2020h |
| 57. கோணங்கி மாலை | 1843 |
| 58. கோளுறு மாலை | 1889k, 1921c |
| 59. கௌசிக சிந்தாமணி | 792g, 883 |
| 60. கௌளி காதல், தும்மல் காதல் | 2020b, 2020c |
| 61. கோசார பலன் | 1570b |
| 62. சக்கரப் பொசிப்பு | 1502 |
| 63. சக்தி ஆருடம் | 613 |
| 64. சங்கராச்சாரியார் வாக்கியம் | 1951 |
| 65. சங்கிரம பலன் | 658 |
| 66. சகாதேவ நூல் | 840, 890, 905, 1719, 1947 |
| 67. சகாதேவர் சாத்திரம் | 1547, 1564, 2002 |
| 68. சகுன முஷ்டி ஆருடம் | 673, 1583 |
| 69. சகுனம் | 1894, 1894a |
| 70. சகோதர பலன் | 2106b |
| 71. சந்தான தீபிகை | 1696b |
| 72. சந்திர காவியம் | 1921a |
| 73. சந்திர காவிய வெண்பா | 1946e |
| 74. சந்திர ரேகை | 767 |
| 75. சப்தமுனி சோதிடம் | 1744a |
| 76. சர்வார்த்த சிந்தாமணி | 2105i, 2104, 850f 974, 913b |
| 77. சரநூல் | 720, 1260, 1684c, 1879n 834a, 836, 1260 |
| 78. சரநூல் - சரவணபவன் உரை | 797 |
| 79. சரவண பவன் சோதிடம் | 797a |
| 80. சல்லிய நூல் | 1256, 1524, 1688a, 1996 |

| | |
|---|---|
| | 1997, 2036a, 2009 |
| 81. சல்லியம் | 1254 |
| 82. சல்லிய காண்டம் உரையுடன் | 1255x |
| 83. சாதக இலட்சணம் | 794b |
| 84. சாதக கணிதாமிர்தம் | 1683, 1976a, 1887 |
| 85. சாதக சிந்தாமணி | 783, 1887 |
| 86. சாதக சூடாமணி | 807b |
| 87. சாதக நூல் | 807c, 1102, 1103 |
| 88. சாதக பாரிசாதம் | 850d, 1486 |
| 89. சாதகம் | 729 |
| 90. சாதக விதி | 1565 |
| 91. சாதகாலங்காரம் | 654, 2096a |
| 92. சாமக் கெவுளி காதல் | 2020e |
| 93. சாமுத்திரிகா இலட்சணம் | 1490, 1505, 1510, 675, 763 |
| | 764, 798, 828, 946, 2011b |
| 94. சாமுத்திரிய நூல் | 2095 |
| 95. சிரோமணி தினபலன் | 1695 |
| 96. சினேந்திரமாலை | 667, 1002 |
| 97. சுபசகுனங்கள் | 2106c |
| 98. சூடாமணி உள்ளமுடையான் | 658, 659, 660, 661, 662, |
| | 663, 664, 665, 1572, |
| | 1887b, 2097 |
| 99. செனன சக்கரம் | 1986 |
| 100. சோசிய நட்டாமுட்டி சாத்திரம் | 1682b |
| 101. சோதிட சாத்திரம் (கிரந்தமும் தமிழும்) | 1588 |
| 102. சோதிட சாத்திரம் | 1695d |
| 103. சோதிட தசபொருத்தம் | 703c |
| 104. சோதிடத் திரட்டு (தெலுங்கு) | 677 |
| 105. சோதிடத்திரட்டு | 1829n |
| 106. சோதிடநூல் | 523, 690b, 1106, 1107 |

| | |
|---|---|
| | 1745, 1746, 1744b, 1923r |
| | 1949c, 1949f, 1962e |
| | 1962g, 703b, 2110b |
| 107. சோதிடநூல் கிரந்தம் | 1394 |
| 108. சோதிடம் அட்டவர்க்கம் (தனியார்) | 785 |
| 109. சோதிடம் அட்டவர்க்கம் | 794a |
| 110. சோதிடம் | 776, 778a, 778e, 779a |
| | 789, 809, 818, 820, 832 |
| | 846, 855, 860, 939a, 1013 |
| | 1103, 1110, 1107, 728 |
| | 1527, 1559, 1601, 1621 |
| | 1667, 1680, 1686, 1799 |
| | 1808, 1809c, 1814, 1829 |
| | 1927g, 2018 |
| 111. சோதிடம் (கயிறு போட்டு பார்த்தல்) | 1436 |
| 112. சோதிடம் (கிரந்தம்) | 1443, 1444, 1437 |
| 113. சோதிட ரேகை சுருக்கம் | 1697 |
| 114. தமிழ்ச் சோதிடம் | 1667a |
| 115. தறிகால் அறிதல் | 1071 |
| 116. தறிகால் விபரம் | 1503 |
| 117. தனியநாள் பாட்டு | 2020g |
| 118. திடை அபகாரப் பலன் | 802g |
| 119. துடிநூல் | 741e, 848b, 1263 |
| 120. தும்மல் காதல் | 675 |
| 121. தும்மல் நூல் | 1425 |
| 122. தும்மல் பலன் | 738, 1753 |
| 123. தேவி ஆருடம் | 617 |
| 124. தொடுகுறி சாத்திரம் | 1488, 1667e, 1545a |
| 125. நட்சத்திர அம்சம் | 797 |

126. நட்சத்திர உச்சம் அறியும்படி 1946b
127. நட்சத்திர சோதிடம் 1784
128. நட்சத்திர சூடாமணி 850c
129. நட்சத்திர நிகண்டு 888, 1592
130. நட்சத்திர பலன் 571, 942, 779a
131. நட்சத்திர பாதபலன் 1104
132. நட்சத்திரப் பொருத்தம் 1518, 1570a
133. நட்சத்திர மாலை 722, 1570
134. நட்டசாதகம் உரையுடன் 1487
135. நட்டாமுட்டி சாத்திரம் 1682
136. நந்தி நூல் 834
137. நந்தி வாக்கியம் 1745
138. நவக்கிரக சிந்தாமணி 914, 2100, 2102
139. நவக்கிரக தசாபுத்தி பலவிவரணம் 1445
140. நவக்கிரக பலன் 1946c
141. நன்மை படுகிற பெண்கள் 731
142. நாடி சாத்திரம் 1959f
143. நாடி சோதிடம் 2080
144. நாடி பார்க்க 1986e
145. நாம நட்சத்திர பலன் 1426, 1976d
146. நித்திய சூடாமணி 1249, 1490
147. நிமித்த சூடாமணி 1489
148. பஞ்சபட்சி 936
149. பஞ்சபட்சி காதல் 730
150. பஞ்சபட்சி சாத்திரம் 940, 1242, 1240, 1241, 1422, 1423, 2088
151. பஞ்சபட்சி பலதிரட்டு 868
152. பஞ்சபட்சி பாடல் 903
153. பஞ்சபட்சி வசனம் 685
154. பஞ்சபட்சி சாத்திரம் 808d, 777, 1389, 1390 1802b

155. பட்சி தோட நூல் 941
156. பட்சி நூல் 797c
157. பதினோராவது ஆதித்தன்
திசையபகாரச் சித்திரச் சருக்கம் 1976
158. பலதிரட்டு 2099
159. பலவுக்கும் பிலக்கப்பட ராசி 1921b
160. பல்லிக்குப் பலன் 1569b
161. பல்லி நூல் 797d
162. பல்லி விழுந்த பலன் 1879
163. பல்லி விழும் பலன் 741d, 1523c
164. பன்னிரண்டாம் சருக்கம்
அட்டவர்க்கம் 1976c
165. பாவகப் பலன் அரிட்டம் 1485
166. பாவபலன் உரையுடன் (கிரந்தம்) 1105
167. பிரம்மாண்ட லட்சனத்துக்குத்
தொகை 1986d
168. பிரயாண பலன் 2105c
169. புசுண்டர் வாக்கியம் 932
170. பூமிச் சல்லியம் 1667d
171. மரண கண்டிகை 1500
172. மகாதசா பலன் 850b
173. மரண காலக் குறிகள் 878d
174. மாச துருவம் 1695b
175. மாச பலன் 670
176. மாதத்தில் கரிநாள் அறிதல் 1054
177. மாரக திசை 1282
178. யோகமஞ்சரி 802a
179. ராசாகுரு இருக்குமிடம் அறிய 2020f
180. ருதுசாத்திரம் 891, 1569, 1817f
181. ருது சாந்தி சாத்திரம் 1005c
182. ருதுநூல் 726b, 765, 703f

183. ருது பலன் 1879, 1879e
184. ருதுபலன் மாதபலன் 1654b
185. ருத்ரோத்காரி வருடபலன் 1809b
186. ரேகை சாத்திரம் 847
187. ரேகை இலட்சணம் 1545f, 791
188. ரோக யோகநீதி 975
189. லக்கன பாவம் 668
190. லக்கன பலன் 1921f
191. லக்கின பாவம் 1683
192. லக்ன பலன் 1569, 1569c
193. லக்ன பலன் (கிரந்தம்) 1392
194. லக்ன பாத பலன் 802 c
195. லக்ன பாவ பலன் 1393
196. வசிட்டர் சோதிடம் 792b
197. வராகர் ஓரா சாத்திரம் 804
198. வருட பலன் (திருமூலர்) 1413
199. வருஷ பலன் 1927, 736b, 750
200. வருஷம், திதி, வாரம் முதலியன 2107
201. வருஷம், மாதம் முதலியன 2106
202. வருஷாதி நூல் 2098, 2110q
203. வலவோட்டுச் சக்கரம் 666
204. வாக்கிய துருவம் 1921c
205. வாரம் பிறந்தநாள் அறியும்படி 1948
206. வாலாரிட்ட சாத்திரம் 1951e
207. விரும கண்டிகை 808c
208. விழுபல்லி காதல் 848a, 2020d
209. வேத வியாசர்
நட்சத்திர சூடாமணி 2011f
210. ஜாதக கலாநிதி கிரந்தம் 1230